சுராவின்

# தமிழ் உரைநூல்

## 10ஆம் வகுப்பு

### சிறப்பம்சங்கள்

- புதிய பாடநூலின்படி, பாடப்பகுதிகளில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடைகள் தெளிவாகவும் எளிமையாகவும் கொடுக்கப்பட்டுள்ளன.
- திறன் அறிவோம் பகுதி வினாக்கள் பிரிக்கப்பட்டுச் செய்யுள், உரைநடை, விரிவானம், இலக்கணம் என அந்தந்தப் பகுதிகளில் புத்தக வினா என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன. இவை தவிர, பலவுள் தெரிக, குறுவினா, சிறுவினா, நெடுவினாக்கள் **கூடுதலாக விடைகளுடன் உள்ளே தரப்பட்டுள்ளன.**
- கற்பவை கற்றபின், மொழியோடு விளையாடு, மொழியை ஆள்வோம், மொழித்திறன் பயிற்சிகள் ஆகிய பகுதிகளில் உள்ள **அனைத்துப் பயிற்சிகளுக்கும் முழு விடைகள் தரப்பட்டுள்ளன.**
- அரசு மாதிரி வினா 2019 (அ.மா.வி.), காலாண்டுத் தேர்வு 2019, 2023 & 2024, அரையாண்டுத் தேர்வு 2019, 2023, அரசுத் துணைத்தேர்வு வினாத்தாட்கள் செப்டம்பர் 2020, 2021, முதல் திருப்புதல் தேர்வு 2022, 2024, இரண்டாம் திருப்புதல் தேர்வு – 2022, அரசுப் பொதுத்தேர்வு – மே 2022, உடனடித் தேர்வு – ஆகஸ்ட் 2022, ஜுன் 2023, ஜுலை 2024, அரசு பொதுத்தேர்வு ஏப்ரல் – 2023, மார்ச் 2024, 2025, 2026 மற்றும் PTA வினாத்தாட்கள் 1 முதல் 6 வரையிலான வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- அரசு பொதுத்தேர்வு மார்ச் – 2026 வினாத்தாள் விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

SURA'S

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

For Orders Contact
80562 94222 / 81242 01000 / 81243 01000/96001 75757 / 98409 26027

© வெளியீட்டாளர்கள்

குறியீட்டு எண் : SG 42

**எழுதி வழங்கியவர்கள்**
**செ. சசிகலாதேவி,** M.A., M.Phil.,(Tamil) PGDLA
**கி. லதா,** M.A., B.Ed., M.Phil.,

**Also available for Std - XI & XII**

**Guides :**
- **சுராவின் தமிழ் உரைநூல்**
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Bio-Botany & Botany (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Bio-Zoology & Zoology (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Computer Applications (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

**தலைமை அலுவலகம்**
**சுரா பப்ளிகேஷன்ஸ்**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
☎ 91-44-4862 9977, 4862 7755
செல் : 81242 01000 / 81243 01000 / வாட்ஸ்அப் : 81242 01000
**E-mail :** orders@surabooks.com / **Website :** www.surabooks.com

**For Orders Contact**
80562 94222
81242 01000
81243 01000
96001 75757
98409 26027

**மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு**
புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 81242 01000 / 81243 01000
வாட்ஸ்அப் : 81242 01000 / 98409 26027
**ஆன்லைன் வலைதளம்** : www.surabooks.com
பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையத்தளத்திலிருந்து இலவசமாகப் பதிவிறக்கிக்கொள்ளலாம்

SURA'S

10.6.2026

# பதிப்பாசிரியர் உரை

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.** — திருவள்ளுவர்

**எங்கள் வாழ்த்திற்குரிய**

**இனிய மாணவச் செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் தமிழ் உரைநூல்'** ஆகும். புதிய பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள, **சுராவின்** பத்தாம் வகுப்பிற்கான **தமிழ் உரைநூல்** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம். தேர்வில் நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெறச் சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

திறன் அறிவோம், மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், இலக்கணம், கூடுதல் வினா விடைகள், மொழித்திறன் பயிற்சிகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

***மாணவர்களாகிய நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற்றுச் சாதனை புரிய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இந்தத் தமிழ் உரைநூல் உருவாக்கம் பெற்றுள்ளது.***

**இறையருளை வேண்டுகிறோம்!**

**நலமே விளைக! . . .**

- பதிப்பகத்தார்
**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
(சுரா பதிப்பகம்)

## மாணவச் செல்வங்களே...

குறிப்பு:

- பாடப்பகுதியை முழுமையாகப் படிக்கவும். கதை போல உள்வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்.
- தலைப்பு, ஆசிரியர் குறிப்பு, நுழையும்முன், சொல்லும் பொருளும், பாடலின் பொருள், இலக்கணக்குறிப்பு, பகுபத உறுப்பிலக்கணம், பெட்டிச் செய்தி, நூல்வெளி என அனைத்தையும் ஒரு மதிப்பெண் நோக்கில் படிக்கவும்.
- ஒரு மதிப்பெண் வினாக்களை நன்றாகப் படித்தால் குறுவினா, சிறுவினா, நெடுவினா தேர்வு எழுதும்போது உங்களுக்குக் கைக்கொடுக்கும்.
- மனப்பாடப் பாடல்கள் மற்றும் இலக்கணப் பகுதிகளை எழுதிப் பார்த்தல் நலம்.
- சுய மதிப்பீடு பயிற்சி நூலில் உள்ள வினாக்களுக்கு விடையெழுதிப் பயிற்சி பெறுக.
- தேர்வில் ஆசிரியர் குறிப்பு, நூற்குறிப்பு கேள்விகள் கேட்கப்பட்டால் கூடுதல் செய்திகள் தவிர்த்து எழுதினால் போதுமானது.
- செய்யுள், உரைநடை, துணைப்பாடம் ஆகிய பகுதிகளில் நெடுவினாக்களுக்கு குறிப்புச் சட்டகம் இட்டு எழுதுதல் முழு மதிப்பெண் பெற வழி வகுக்கும்.

**படித்ததை மீண்டும் மீண்டும் நினைவுப் படுத்திக் கொள்.**
**ஆழ்ந்து படியுங்கள்!; வெற்றி உங்களுக்கே!!**

# பொருளடக்கம்


**மனப்பாடச் செய்யுள் பகுதி** ....................... 1-4

| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|
| 1. | மொழி, மனிதம் | * அன்னை மொழியே! **(செய்யுள்)** | 5-64 | ஜுன் |
| | | பாவாணர் பார்வையில் தமிழ்ச்சொல் வளம் **(உரைநடை)** | | |
| | **அமுதஊற்று** | * காலக்கணிதம் **(செய்யுள்)** | | |
| | | புயலிலே ஒரு தோணி **(துணைப்பாடம்)** | | |
| | | சொல் **(இலக்கணம்)** | | |
| 2. | இயற்கை, சுற்றுச்சூழல், அறிவியல் | கேட்கிறதா என் குரல்! **(உரைநடை)** | 65-106 | ஜுன் ஜூலை |
| | | பரிபாடல் **(செய்யுள்)** | | |
| | | மேகம் **(செய்யுள்)** | | |
| | | பிரும்மம் **(செய்யுள்)** | | |
| | **உயிரின் ஓசை** | தொகாநிலைத் தொடர்கள் **(இலக்கணம்)** | | |
| 3. | பண்பாடு | விருந்து போற்றுதும்! **(உரைநடை)** | 107-164 | ஆகஸ்டு |
| | | * காசிக்காண்டம் **(செய்யுள்)** | | |
| | | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் **(செய்யுள்)** | | |
| | **கூட்டாஞ்சோறு** | கோபல்லபுரத்து மக்கள் **(துணைப்பாடம்)** | | |
| | | தொகைநிலைத் தொடர்கள் **(இலக்கணம்)** | | |
| | | *திருக்குறள் **(வாழ்வியல்)** | | |
| 4. | கல்வி | மொழிபெயர்ப்புக் கல்வி **(உரைநடை)** | 165-206 | ஆகஸ்டு செப்டம்பர் |
| | | * திருவிளையாடற் புராணம் **(செய்யுள்)** | | |
| | **மணற்கேணி** | புதிய நம்பிக்கை **(துணைப்பாடம்)** | | |
| | | இலக்கணம்-பொது **(இலக்கணம்)** | | |


SURA'S

| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|
| 5. | கலை, அழகியல், புதுமைகள் **நிலா முற்றம்** | பன்முகக் கலைஞர் **(உரைநடை)** | 207-258 | அக்டோபர் |
| | | * கம்பராமாயணம் **(செய்யுள்)** | | |
| | | பாய்ச்சல் **(துணைப்பாடம்)** | | |
| | | அகப்பொருள் இலக்கணம் **(இலக்கணம்)** | | |
| | | * திருக்குறள் **(வாழ்வியல்)** | | |
| 6. | நாகரிகம், நாடு, சமூகம் **விதை நெல்** | சிற்றகல் ஒளி **(உரைநடை)** | 259-304 | அக்டோபர் நவம்பர் |
| | | * சிலப்பதிகாரம் **(செய்யுள்)** | | |
| | | * முத்தொள்ளாயிரம் **(செய்யுள்)** | | |
| | | மங்கையராய்ப் பிறப்பதற்கே...**(துணைப்பாடம்)** | | |
| | | புறப்பொருள் இலக்கணம் **(இலக்கணம்)** | | |
| 7. | அறம், தத்துவம், சிந்தனை **பெருவழி** | சங்க இலக்கியத்தில் அறம் **(உரைநடை)** | 305-352 | டிசம்பர் |
| | | * தேம்பாவணி **(செய்யுள்)** | | |
| | | அக்கறை **(செய்யுள்)** | | |
| | | இராமானுசர் (நாடகம்) **(துணைப்பாடம்)** | | |
| | | பா-வகை, அலகிடுதல் **(இலக்கணம்)** | | |
| **மொழித்திறன் பயிற்சிகள்** வாக்கியப் பிழைகளைத் திருத்துதல், மரபுப் பிழையை நீக்கி எழுதுதல், தொடரை மாற்றி அமைத்தல், இலக்கிய நயம் பாராட்டல், கடிதம் எழுதுதல், பொதுக் கட்டுரைகள். | | | 353-370 | |
| அரசு பொதுத்தேர்வு மார்ச் – 2026 வினாத்தாள் விடைகளுடன் | | | 371-378 | |


*குறியிடப்பட்டவை மனப்பாடப் பகுதி

SURA'S

# TO ORDER WITH US

## SCHOOLS and TEACHERS:

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

## DIRECT DEPOSIT

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **36550290536** |
| Bank Name | : **STATE BANK OF INDIA** |
| Bank Branch | : Padi |
| IFSC | : SBIN0005083 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **21000210001240** |
| Bank Name | : **UCO BANK** |
| Bank Branch | : Anna Nagar West |
| IFSC | : UCBA0002100 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **6502699356** |
| Bank Name | : **INDIAN BANK** |
| Bank Branch | : Asiad Colony |
| IFSC | : IDIB000A098 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **1154135000017684** |
| Bank Name | : **KVB BANK** |
| Bank Branch | : Anna Nagar |
| IFSC | : KVBL0001154 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **13240200032412** |
| Bank Name | : **FEDERAL BANK** |
| Bank Branch | : Anna Nagar |
| IFSC | : FDRL0001324 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **50200031530945** |
| Bank Name | : **HDFC BANK** |
| Bank Branch | : Cenotaph Road, Teynampet |
| IFSC | : HDFC0001216 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **10270882884** |
| Bank Name | : **IDFC FIRST BANK** |
| Bank Branch | : Anna Nagar |
| IFSC | : IDFB0080106 |

After Deposit, please send challan and order to our address.
email to : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

GPay **For Google Pay : 98409 26027**

**For PhonePe : 98409 26027**

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**. The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar, Chennai - 600 040.
Phone : 044-4862 9977, 044-4862 7755.
Mobile : 96001 75757 / 81242 01000 / 81243 01000.
Email : orders@surabooks.com Website : www.surabooks.com

SURA'S

# மனப்பாடச் செய்யுள்

## அன்னை மொழியே

### அழகார்ந்த செந்தமிழே!

கனிச்சாறு (தொகுதி-1)

இயல் – 1

| | |
|---|---|
| அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!<br>முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!<br>கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்<br>மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே! | பிடிஏ–4, 6; அரை.தேர்வு 2019<br>பிடிஏ–2; செப். 2021,<br>முதல் தி.தேர்வு; மே 2022; ஜூன் 2023; ஜூலை 2024; மார்ச் 2025 |
| தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!<br>இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!<br>மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!<br>முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!<br>– பாவலரேறு பெருஞ்சித்திரனார் | பிடிஏ–1<br>முதல் தி.தேர்வு 2022; மார்ச் 2024 |

## காலக்கணிதம்

இயல் – 1

| | |
|---|---|
| மாற்றம் எனது மானிடத் தத்துவம்;<br>மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!<br>எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை<br>என்ப தறிந்து ஏகுமென் சாலை!<br>தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;<br>தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!<br>கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!<br>உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;<br>நானே தொடக்கம்; நானே முடிவு;<br>நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்! | பிடிஏ–3; ஏப்ரல்–2023 ; மார்ச் 2026<br>– கண்ணதாசன் |

SURA'S

# கம்பராமாயணம்

## பாலகாண்டம் – நாட்டுப்படலம்

இயல் – 5

செப்.–2021

தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளைகண் விழித்து நோக்கத்,
தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம்வீற் றிருக்கும் மாதோ.

பா.எண். 35

### அயோத்தியா காண்டம் - கங்கைப்படலம்

மார்ச் 2025

வெய்யோன்ஒளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோஎனும் இடையாளொடும் இளையானொடும் போனான்
மையோமரக தமோமறி கடலோமழை முகிலோ
ஐயோஇவன் வடிவென்பதொர் அழியாஅழ குடையான்.

– கம்பர்

பா.எண். 1926

SURA'S

# திருக்குறள்

| | |
|---|---|
| அமைச்சு (64) | 4. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத் தியற்கை அறிந்து செயல். (அ.மா.வி 2019; பிடிஏ–1; அரை.தேர்வு, ஏப்ரல் 2023) |
| பொருள்செயல் வகை (76) | 5. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்ல தில்லை பொருள். (மார்ச் 2025)<br>8. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன் றுண்டாகச் செய்வான் வினை. (காலாண்டுத் தேர்வு 2023) |
| குடிசெயல் வகை (103) | 14. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச் சுற்றமாச் சுற்றும் உலகு. (பிடிஏ–6; இரண்டாம் தி.தேர்வு 2022; மார்ச் 2025) |
| நல்குரவு (105) | 15. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின் இன்மையே இன்னா தது. |

# சிலப்பதிகாரம்

## மருவூர்ப் பாக்கம்

இயல் – 6

அரையாண்டுத் தேர்வு 2019; பிடிஏ–1,6
ஆகஸ்ட்2022; ஜுன் 2023

தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்;

– **இளங்கோவடிகள்**

**இந்திரவிழா ஊரெடுத்த காதை (அடி 18-23)**

# முத்தொள்ளாயிரம்

## சேரநாடு

இயல் – 6

மார்ச் 2026

அள்ளல் பழனத்(து) அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப் புள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு.

# தேம்பாவணி

## இயற்கை கொண்ட பரிவு

இயல் – 7

அ.மா.வி 2019; பிடிஏ–2; செப்.–2020; மே–2022
அரையாண்டுத் தேர்வு 2023; ஜுலை 2024

நவமணி வடக்க யில்போல்
  நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
  தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
  துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
  ஒலித்து அழுவ போன்றே. **பா எண் : 2410**

– **வீரமாமுனிவர்**

★ ★ ★



SURA'S

**இயல் 1**

# அன்னை மொழியே

## கவிதைப் பேழை

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்

### கரு



✳ தமிழ்த்தாய் மழலையின் அழகு மிகுந்த சிரிப்பையும், சான்றோர்களின் சிறந்த பட்டறிவையும் கொண்டவள்.

✳ இவ்வுலகில் உள்ள எல்லாப் பொருள்களையும், தன்னுள் கவிதைகளாக உள்ளடக்கியவள்.

✳ இறுகிய இதயத்தையும் இனிக்கும்படி செய்பவள். அறிவைப் பெருக்கி அன்பை வயப்படுத்துபவள். இத்தகைய தமிழ் அன்னையின் பெருமையைப் பாவலரேறு பெருமை பொங்கப் பாடுகிறார்.

### ஆசிரியர் குறிப்பு



**ஆசிரியர்** : பாவலரேறு பெருஞ்சித்திரனார்
பா + வல் + ஏறு = பாவலரேறு
பா - பாடல், வல் - வலிமை மிக்க ஏறு - ஆண் சிங்கம்
(பாடல் எழுதுவதில் ஆண் சிங்கத்தைப் போன்றவர்.)

**இயற்பெயர்** : துரை. இராசமாணிக்கம் (இதில் - தந்தையின் பெயராகிய துரைசாமி என்பதன் சுருக்கமே துரை)

**பெற்றோர்** : துரைசாமி - குஞ்சம்மாள்

**காலம்** : 10.03.1933 - 11.06.1995 (62)

**பிறந்த ஊர்** : சேலம் மாவட்டம் - 'சமுத்திரம்' என்னும் சிற்றூர்.

**இயற்றிய நூல்கள்** : கனிச்சாறு, பாவியக்கொத்து, பள்ளிப் பறவைகள், நூறாசிரியம், உலகியல் நூறு, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி. இவரின் திருக்குறள் மெய்ப்பொருளுரை, தமிழுக்குக் கருவூலமாக அமைந்தது.

**நடத்திய இதழ்கள்** : தென்மொழி, தமிழ்ச்சிட்டு.

**சிறப்புகள்** : எழுத்தாளர், புலவர், தனித்தமிழ் ஆர்வலர். தனித்தமிழ்க் கொள்கையும் தனித்தமிழ்நாடு கொள்கையும் கொண்டவர். தமிழ் தேசியத் தந்தை என அழைக்கப்படுபவர். பாரதிதாசனின் தலைமாணாக்கர். இவரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

### நூற் குறிப்பு

✳ பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் கனிச்சாறு (தொகுதி-1) தொகுப்பிலுள்ள **தமிழ்த்தாய் வாழ்த்து, முந்துற்றோம் யாண்டும்** போன்ற இருவேறு தலைப்புகளில் உள்ள பாடல்கள் பாடப்பகுதியாக உள்ளன.

✳ கனிச்சாறு, 8 பாடல் தொகுதிகளை உடைய ஒரு கவிதை நூலாகும்.

**பாடல்** **அழகார்ந்த செந்தமிழே!**

**அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!**
**முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!**
**கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்**
**மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!**

SURA'S

**சொல்லும் பொருளும்**

- ✳ அன்னை மொழியே – தாய்மொழியே
- ✳ அழகார்ந்த செந்தமிழே – அழகாய் அமைந்த செழுமையான தமிழே
- ✳ முன்னைக்கும் முன்னை – பழைமைக்கும் பழைமையாய்
- ✳ முகிழ்த்த நறுங்கனியே – தோன்றிய நறுமணம் கமழும் கனியே
- ✳ கடல் கொண்ட – கடலால் கொள்ளப்பட்ட
- ✳ கன்னிக் குமரி நாட்டிடையில் – குமரிக்கண்டத்தில்
- ✳ மன்னி அரசிருந்த – நிலைத்து அரசாண்ட
- ✳ மண்ணுலகப் பேரரசே – இந்தப் பூவுலகின் பேரரசே

**பொருளுரை**

தாய்மொழியே! அழகே உருவாக அமைந்த செந்தமிழே! பழைமைக்கும் பழைமையாய்த் தோன்றிய இனிமையான கனியே! கடலால் கொள்ளப்பட்ட குமரிக் கண்டத்தில், நிலையான ஆட்சியைத் தந்த இந்த மண்ணுலகின் பேரரசே!

**விரிவான விளக்கம்**

உலகின் மிகப் பழைமையான நிலப்பகுதி குமரிக்கண்டம். இது, ‘இலெமூரியாக் கண்டம்’ என்றும் அழைக்கப்பட்டது. அந்நிலப் பகுதி கடல்கோளால் (ஆழிப்பேரலை – சுனாமி (TSUNAMI)) மறைந்தது. அத்தொன்மையான நிலத்தில் தோன்றிய தமிழ்மொழி, செழுமையான மொழி, இனிமையான மொழி என்றும் நிலைத்து நிற்கும் மொழி என்றும், செம்மொழி என்றும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

**பாடல்**

**தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!**
**இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!**
**மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!**
**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!**

**சொல்லும் பொருளும்**

- ✳ தென்னன் மகளே! – பாண்டிய மன்னனின் மகளே!
- ✳ திருக்குறளின் மாண்புகழே! – திருக்குறளின் பெரும் பெருமைக்கு உரியவளே!
- ✳ இன்னறும் பாப்பத்தே! – இனிமையான பத்துப்பாட்டே!
- ✳ எண்தொகையே! – எட்டுத்தொகையே!
- ✳ நற்கணக்கே! – பதினெண் கீழ்க்கணக்கே!
- ✳ மன்னுஞ் சிலம்பே! – நிலைத்த பெருமையுடைய சிலப்பதிகாரமே!
- ✳ மணிமே கலைவடிவே! – அழகான மணிமேகலையே!
- ✳ முன்னும் நினைவால் – உள்ளத்தில் பொங்கியெழும் சிறப்பான நினைவுகளால்
- ✳ முடிதாழ வாழ்த்துவமே – தலையைத் தாழ்த்தி வணங்குகிறோம்.

**பொருளுரை**

பாண்டிய மன்னனின் மகளே! திருக்குறளின் பெரும் பெருமைக்கு உரியவளே! இனிமையான பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே! நல்ல பதினெண் கீழ்க்கணக்கே! நிலைத்த பெருமையுடைய சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே! உள்ளத்தில் பொங்கியெழும் சிறப்பான நினைவுகளால் தலையைத் தாழ்த்தி வணங்குகிறோம்.

SURA'S

**விரிவான விளக்கம்**

முதல் சங்கம், இடைச்சங்கம், கடைச் சங்கம் என முச்சங்கங்கள் அமைத்துத் தமிழை வளர்த்தவர்கள், தமிழகத்தின் தென்பகுதியை ஆண்டு வந்த பாண்டிய மன்னர்களாவர். எனவே, பாண்டிய மன்னன் மகளே! என ஆசிரியர் குறிப்பிடுகிறார். பின்னர், தமிழ் இலக்கியங்கள் ஒவ்வொன்றையும் குறிப்பிட்டு அந்த இலக்கியங்களாகவே தமிழை உருவகப்படுத்தியுள்ளார்.

பதினெண்மேற்கணக்கு நூல்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இலக்கியங்களின் வடிவில் அன்னைத் தமிழ் இருக்கிறாள் என்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

**பாடல்**

**செப்பரிய நின்பெருமை!**

**செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை**
**எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?**
**முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்**
**விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்**

**சொல்லும் பொருளும்**

- ✳ செந்தமிழே! – செழுமையான தமிழே!
- ✳ உள்ளுயிரே – எமக்குள் வாழும் உயிர் போன்றவளே
- ✳ செப்பரிய – சொல்வதற்கு அரிதாக உள்ள
- ✳ நின்பெருமை – உனது பெருமைகளை
- ✳ எந்தமிழ் நா – என்னுடைய தமிழ் நாக்கு
- ✳ எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்? – எவ்விதம் எடுத்து விரிவாகக் கூறும்?
- ✳ முந்தைத் தனிப்புகழும் – பழம்பெருமையும் தனிச் சிறப்பும் கொண்ட
- ✳ முகிழ்த்த இலக்கியமும் – இலக்கியவளத்துடன் தோன்றிய
- ✳ விந்தை நெடுநிலைப்பும் – வியக்கத்தக்க அளவிலான நெடிய நிலைப்புத் தன்மையும்
- ✳ வேறார் புகழுரையும் – வேற்று மொழியார் உன்னைப் பற்றிக் கூறிய புகழ் உரைகளும்

**பொருளுரை**

செழுமையான தமிழே! எமக்குள் வாழும் உயிர் போன்றவளே! பழம் பெருமையும், தனிச்சிறப்பும், இலக்கிய வளமும், வியக்கத்தக்க அளவில் நீண்ட நிலைப்புத் தன்மையும் கொண்ட உன்னை, வேற்று மொழியார் புகழ்ந்துரைக்கின்றனர். இவ்விதம் சொல்வதற்கு அரிதாக உள்ள உனது பெருமைகளை, என்னுடைய தமிழ் நாக்கு எவ்விதம் விரிவாக எடுத்துக் கூறும்?

**விரிவான விளக்கம்**

“வேற்று மொழியாரும், தமிழின் பெருமைகளை அறிந்து போற்றுகின்றனர். ஆனால், எமக்கோ நீ உயிர் போன்றவள். அளவிட முடியாத அளவு பெருமைகளைக் கொண்டுள்ள உன்னை எப்படிப் புகழ்வது? உன் பெருமைகளை விரிவாக எவ்விதம் என்னால் கூற முடியும்?” என்று கேட்பது போலத் தமிழின் பெருமையை உயர்த்திக் கூறியுள்ளார் ஆசிரியர்.

**பாடல்**

**உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூளச்**
**செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த**
**அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி**
**முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே!**

SURA'S

### சொல்லும் பொருளும்

- ✳ உந்தி உணர்வெழுப்ப – பற்றுணர்வு பொங்கி எழ
- ✳ உள்ளக் கனல்மூளச் – உள்ளத்திலே நெருப்புத் தோன்ற
- ✳ செந்தா மரைத்தேனை – செந்தாமரையில் உள்ள தேனை
- ✳ குடித்துச் சிறகார்ந்த – அருந்திவிட்டுச் சிறகு அசைத்து
- ✳ அந்தும்பி பாடும் – அந்த வண்டானது பாடும்
- ✳ அதுபோல யாம்பாடி – அதைப்போன்று நாங்களும் பாடி
- ✳ தனித்தமிழே! – தனிப் பெருமை வாய்ந்த தமிழே!
- ✳ முழங்க முந்துற்றோம் யாண்டும் – எங்கும் உன் சிறப்பை முழங்குவதால் பெருமையடைகிறோம்

### பொருளுரை

செந்தாமரையில் உள்ள தேனைக் குடித்துவிட்டுச் சிறகசைத்துப் பாடும் வண்டினைப் போல் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, பற்றுணர்வு பொங்கி எழ, உன் சிறப்பை எல்லா இடங்களிலும் முழங்குவதில் பெருமையடைகிறோம்.

### விரிவான விளக்கம்

"தாமரை மலரில் உள்ள தேனைக் குடித்துவிட்டு வண்டானது, மகிழ்ச்சியில் சிறகசைத்துப் பாடுவது போல, தமிழ் இலக்கியங்களைக் கற்று, அதன் பொருளை உணர்ந்த மகிழ்வில் நாங்களும் மகிழ்ச்சியில் பெருமை பொங்க உன் சிறப்புகளை உலகெங்கும் முழங்குகின்றோம்!" என ஆசிரியர் கூறுகின்றார்.

### அருஞ்சொற் பொருள்

| | | | |
|---|---|---|---|
| அழகார்ந்த | – அழகு நிறைந்த | முன்னை | – பழைமையான |
| முகிழ்த்த | – தோன்றிய | செந்தமிழ் | – செழுமையான தமிழ் |
| நறுங்கனியே | – நறுமணம் கமழும் கனியே | கடல் கொண்ட | – கடலால் கொள்ளப்பட்ட |
| மன்னி | – நிலையான | பேரரசே | – பெருமைக்குரிய அரசே |
| மாண்புகழே! | – பெருமைக்குரிய புகழே! | பாப்பத்தே | – பத்துப்பாட்டு |
| மன்னுஞ் | – நீண்டகாலம் நிலைத்த | முன்னும் | – பொங்கியெழும் |
| முடிதாழ | – தலைபணிந்து | செப்பரிய | – சொல்லுவதற்கரிய |
| நா | – நாக்கு | உரை விரிக்கும் | – விரிவாக உரைக்கும் |
| முந்தை | – பழமை | விந்தை | – வியப்பு |
| கனல் | – தீ | வேறார் | – மற்றவர் |
| நெடு நிலைப்பும் | – நீண்ட காலம் நிலைக்கும் | தும்பி | – வண்டு |
| முந்துற்றோம் | – முற்பட்டோம் | யாண்டும் | – எங்கும் |
| உந்தி | – உள்ளிருந்து மேல்நோக்கி நகர்ந்த | எண் தொகையே | – எட்டுத்தொகை |
| தென்னன் | – 'தென்னாடு' எனப்பட்ட பாண்டிய நாட்டை ஆண்ட பாண்டியன் | | |
| இன்னறும் | – இனிமையும் அறவழியும் கொண்ட (அறு என்ற வினைச் சொல்லின் அடி) | | |
| நற்கணக்கு! | – நல்ல கணக்கு இங்கு 'நற்கணக்கு' என்பது பதினெண் கீழ்க்கணக்காகும். | | |
| ஆர்ந்த | – 'நிறைந்த' என்ற பொருளில் ஒரு பெயரெச்சம் (பெயரடை) | | |
| தனித்தமிழ் | – பிறமொழிச் சொற்களின் கலப்படமின்றி, மரபு சார்ந்த இலக்கண முறைகளுக்கு உட்பட்டு எழுதப்படும், பேசப்படும் தமிழே தனித்தமிழ் ஆகும். | | |

SURA'S

**பிரித்தெழுதுக**

| | |
|---|---|
| செந்தமிழ் – செம்மை + தமிழ் | செப்பரிய – செப்பு + அரிய |
| நறுங்கனி – நறுமை + கனி | உணர்வெழுப்ப – உணர்வு + எழுப்ப |
| நாட்டிடையில் – நாடு + இடையில் | பேரரசு – பெருமை + அரசு |
| மண்ணுலகம் – மண் + உலகம் | எந்தமிழ் நா – எம் + தமிழ் + நா |
| நற்கணக்கு – நன்மை + கணக்கு | செந்தாமரை – செம்மை + தாமரை |

**இலக்கணக் குறிப்பு**

| | |
|---|---|
| செந்தமிழ், நறுங்கனி, செந்தாமரை, பேரரசு | பண்புத்தொகைகள் |
| முகிழ்த்த, சிறகார்ந்த | பெயரெச்சங்கள் |
| கன்னிக்குமரி, மண்ணுலகம் | உருவகங்கள் |
| தென்னன் மகள், நின்பெருமை | ஆறாம் வேற்றுமைத் தொகைகள் |
| குடித்து | வினையெச்சம் |
| வாழ்த்துவமே, முந்துற்றோம் | தன்மைப் பன்மை வினைமுற்றுகள் |
| யாண்டும் | முற்றும்மை |

## கற்பவை கற்றபின்

1. **‘‘நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறமென்று**
**இத்திறத்த எட்டுத்தொகை’’**

**இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள எட்டுத் தொகை நூல்களைப் பெயர்க்காரணத்துடன் எடுத்துக்காட்டுக.**

1. **நற்றிணை :** நல் + திணை / நன்மை + திணை. ‘நல்’ என்னும் அடைமொழியும் அகப்பொருள் ஒழுக்கத்தைச் சுட்டும் ‘திணை’ என்னும் பெயரும் சேர்ந்து, ‘நற்றிணை’ என்னும் பெயர் பெற்றது.
2. **குறுந்தொகை :** குறுமை + தொகை. குறைந்த அடிகள் கொண்ட பாடல்களின் தொகுப்பாக இருப்பதால், ‘குறுந்தொகை’ எனப் பெயர்பெற்றது.
3. **ஐங்குறுநூறு :** ஐந்து + குறுமை + நூறு = ஐங்குறுநூறு. ஒவ்வொரு திணைக்கும் நூறு பாடல்
4. வீதம் மொத்தம் ஐந்து திணைகளுக்கு 500 குறுகிய பாடல்களை உடையது.
5. **பதிற்றுப்பத்து :** சேர மன்னர்கள் பதின்மரைப் பற்றிப் பத்துப் புலவர்கள் பாடிய தொகுப்பு நூலாகும். ஒரு மன்னருக்குப் பத்துப் பாடல்கள் என்னும் முறையில், நூறு பாடல்களைக் கொண்டுள்ளதால், ‘பதிற்றுப்பத்து’ எனப் பெயர் பெற்றது.
6. **பரிபாடல் :** வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நால்வகைப் பாக்களுக்கும், பல வகை அடிகளுக்கும் பரிந்து இடங்கொடுத்துப் பரிந்து செல்லும் ஓசையையுடைய பரி பாட்டுகளின் தொகுப்பாக விளங்குவதால் இது, ‘பரிபாடல்’ என்று அழைக்கப்படுகிறது.
7. **கலித்தொகை :** ஓசை இனிமையும், தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் சிறப்பான அமைப்புகளையும், கொண்ட கலிப்பாக்களால் அமைந்த நூல், எனவே, ‘கலித்தொகை’ எனப் பெயர் பெற்றுள்ளது.
8. **அகநானூறு :** அகம் + நான்கு + நூறு – அகநானூறு. அகப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூல் என்பதால், ‘அகநானூறு’ எனப் பெயர் பெற்றது.
9. **புறநானூறு :** புறம் + நான்கு + நூறு – புறநானூறு. இது புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூல் என்பதால், ‘புறநானூறு’ எனப் பெயர் பெற்றது.

SURA'S

2. **"சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் - என்றன் சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்" - என்றுரைக்கும் க.சச்சிதானந்தன் அவர்களின் பாடலடியைக் கொண்டு வகுப்பறையில் ஐந்து நிமிட உரை நிகழ்த்துக.**

"சாகும்போது தமிழ்படித்துச் சாகவேண்டும் – என்றன்
சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும் !"

1. க.சச்சிதானந்தனின் இந்த வரிகள் தமிழ்ப் பற்றினைத் தூண்டுகின்றன.
2. எவ்வளவு காதல் அவருக்குத் தமிழின் மீது! சாகும்போதுகூடத் தமிழ்படித்துச் சாக வேண்டும் என்கிறாரே !
3. அதுகூட பரவாயில்லை, இறந்த பின்னும் அவருடைய சாம்பலும் தமிழ்மணந்து வேக வேண்டுமாம் !
4. இதைப் படிக்கும்போது, நாம் தமிழில் கற்றது கையளவு, கல்லாதது உலகளவு எனத் தோன்றுகிறது.
5. இவர் சொல்வதைப் பார்த்தால் தமிழைப்படித்து கொண்டே இருந்தால் வாழ்க்கையே இனிக்கும் போல!
6. சரி தானே? தமிழ் நூல்கள் கற்றுத் தரும் பாடங்களை நாம் பின்பற்றினால் வாழ்க்கை இனிக்கத்தான் செய்யும்.

## திறன் அறிவோம் – புத்தக வினா

**பலவுள் தெரிக.**

காதேர்வு 2019; ஜூன், முதல் தி.தேர்வு 2022

3. **'எந்தமிழ்நா' என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் -**

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

விடை **இ) எம் + தமிழ் + நா**

**குறுவினா**

அ.மா.வி 2019; மே–2022; முதல் தி.தேர்வு & ஜூலை–2024

2. **"மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே! முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!" -இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.**

7. சிலப்பதிகாரம்
8. மணிமேகலை.

**சிறுவினா**

பிடிஏ–2; மே–2022; மார்ச் 2026

1. **தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?**

**தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்கள் :**

1. தமிழ்மொழி பழைமைக்கும் பழைமையாய் உள்ளது.
2. கடல்கொண்ட குமரிக்கண்டத்தில், நிலைத்து ஆட்சி செய்தது.
3. பாண்டிய மன்னனின் மகளாக வளர்ந்தது.
4. திருக்குறளின் பெருமைக்கு உரியதாய் விளங்குகிறது.
5. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களாக அமைந்துள்ளது.
6. நிலைத்து நிற்கும் சிலப்பதிகாரமாகவும், அழகான மணிமேகலையாகவும் விளங்குகிறது.

SURA'S

## அரசுத் தேர்வு வினா - விடைகள்

**பலவுள் தெரிக.**

1. **'அன்னை மொழியே' கவிதை இடம் பெறும் நூல்** காலாண்டுத் தேர்வு 2019

அ) நூறாசிரியம் ஆ) கனிச்சாறு

இ) எண்சுவை ஈ) பாவியக்கொத்து

விடை **ஆ) கனிச்சாறு**

1. **'தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!'. பாடல் அடியில் தென்னன்' என்று குறிப்பிடப்படும் மன்னன் :** முதல் தி.தேர்வு 2022

அ) சேர மன்னன் ஆ) பாண்டிய மன்னன்

இ) சோழ மன்னன் ஈ) பல்லவ மன்னன்

விடை **ஆ) பாண்டிய மன்னன்**

2. **"சாகும் போதும் தமிழ்படித்துச் சாக வேண்டும் - என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேகவேண்டும்" - என்று முழங்கியவர்?** ஆகஸ்ட்–2022

அ) பெருஞ்சித்திரனார் ஆ) க. சச்சிதானந்தன்

இ) பாவாணர் ஈ) கா. அப்பாத்துரையார்

விடை **ஆ) க. சச்சிதானந்தன்**

**குறுவினா**

1. **"மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!
தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!"
மண்ணுலகப் பேரரசு ....... தென்னன் மகள் ....... திருக்குறளின் மாண்புகழ் ......... மூன்று இடங்களுக்குமான ஒரே விடை என்ன? பாடலின் ஆசிரியர் யார்?** அ.மா.வி 2019

   1. செந்தமிழ்
   2. பாவலரேறு பெருஞ்சித்திரனார்

2. **அன்னை மொழியான தமிழை வாழ்த்தும் வாழ்த்துச் சொற்கள் இரண்டனை எழுதுக.** கா.தேர்வு 2019

   1. பழைமைக்குப் பழைமையாய்த் தோன்றிய நறுங்கனியே, பாண்டிய மன்னனின் மகளே!
   2. திருக்குறளின் பெரும் பெருமைக்கு உரியவளே!

3. **பாவலரேறு பெருஞ்சித்திரனார் படைத்த நூல்களுள் எவையேனும் இரண்டன் பெயர்களை எழுதுக.** முதல் தி.தேர்வு 2022

**பெருஞ்சித்திரனார் இயற்றிய நூல்கள்:** உலகியல் நூறு, பாவியக்கொத்து, நூறாசிரியம், கனிச்சாறு, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப் பறவைகள் முதலியன.

4. **எட்டுத்தொகை நூல்களின் பெயர்களை எழுதுக.** முதல் தி.தேர்வு 2022

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு.

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.** செப்.–2021; மே–2022

> "செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின் பெருமை
> எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?
> முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
> விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்."

SURA'S

1. **'எந்தமிழ்நா' என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் :** ஜூன் 2023; முதல் தி.தேர்வு 2024

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா

இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

விடை **இ) எம் + தமிழ் + நா**

2. **'செந்தமிழ்' என்பது :**

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை

இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை விடை **அ) பண்புத்தொகை**

3. **'உள்ளுயிரே' என்று கவிஞர் யாரை அழைக்கிறார்?**

அ) தம் தாயை ஆ) தமிழ் மொழியை

இ) தாய்நாட்டை ஈ) தம் குழந்தையை விடை **ஆ) தமிழ் மொழியை**

4. **'வேறார் புகழுரையும்' - இத்தொடரில் 'வேறார்' என்பது :**

அ) தமிழர் ஆ) சான்றோர்

இ) வேற்று மொழியினர் ஈ) புலவர் விடை **இ) வேற்று மொழியினர்**

## நெடுவினா

1. **மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.**

பிடிஏ–5; அ.மா.வி; கா.தேர்வு 2019 & 2024; ஆகஸ்ட் 2022; ஜூன் 2023

| குறிப்புச்சட்டகம் |
|---|
| முன்னுரை |
| பெ.சுந்தரனார் தமிழ்த்தாய் வாழ்த்து |
| பாவலரேறு தமிழ் வாழ்த்து |
| முடிவுரை |

**முன்னுரை:**

**"தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் - இன்பத்**
**தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!"**

என்ற பாவேந்தரின் தமிழ்ப்பற்றைப் போற்றி வணங்குகிறேன். அனைவருக்கும் வணக்கம்.

தமிழ்த்தாய் இன்று, நேற்றுப் பிறந்தவள் இல்லை, என்று தோன்றியவள் என்று கூறமுடியாத அளவிற்குப் பழைமையும் சிறப்பும் வாய்ந்தவள். அத்தகைய தமிழ் அன்னையைப் பாடாத புலவரில்லை. இங்கு, மனோன்மணீயம் அவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்தையும் பாவலரேறு அவர்களின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

**பெ.சுந்தரனார் தமிழ்த்தாய் வாழ்த்து:**

1. "அலைவீசக்கூடிய கடலையே ஆடையாக அணிந்திருக்கிறது இந்த நாடு.
2. இந்த நாட்டைப் பெண்ணாக உருவகம் செய்கிறார். அப்பெண்ணின் நெற்றியிலிட்ட திலகம், மணம் வீசுவதாகக் கூறுகிறார். உலகிற்குப் பாரத நாடு முகமாகத் திகழ்வதாகக் கூறுகிறார்.
3. இந்திய நாட்டிற்கு, தென்னாடும் அதிலும் சிறந்த தமிழர்களின் நல்ல திருநாடாகவும் தமிழ்நாடு விளங்குகிறது என்கிறார்.
4. அந்தத் திலகத்தில் இருந்துவரும் வாசனைபோல, அனைத்து உலகமும் இன்பம் பெறும் வகையில், எல்லாத்திசையிலும் புகழ் மணக்கும்படி இருக்கின்ற பெருமைமிக்கது தமிழ்ப்பெண்ணே! என்று தெய்வத்திற்கு இணையாகப் போற்றுகிறார்.
5. இன்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து எங்கள் செயலை மறந்து வாழ்த்துகின்றோம்!" என்கிறார் மனோன்மணீயம் சுந்தரனார்.

**பாவலரேறு தமிழ் வாழ்த்து :**

1. பெருஞ்சித்திரனார் தமிழைப் பழைமைக்குப் பழைமையாய்த் தோன்றியவள் என்று பாடுகிறார்.
2. கடல் கொண்ட குமரிக்கண்டத்தில் நிலைத்து நின்று அரசாளும் பேரரசு என்கிறார்.
3. பாண்டியனின் மகளாகவும் திருக்குறளின் பெருமைக்குரியவளாகவும் போற்றுகிறார்.
4. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை என்று இலக்கியங்களையும் காப்பியங்களையும் தன்னுள் கொண்டவள் என்று பாடுகிறார்.
5. இறுதியாக, வியக்கத்தக்க அளவிலான நீண்ட காலம் நிலைத்து நின்று எல்லோரும் புகழும்படியாக இருக்கிறது தமிழ். அதைக் கேட்கும்போது மலரில் தேனைக் குடித்துவிட்டுச் சிறகசைத்துப்பாடும் வண்டினைப் போல் உன்னையும் சுவைக்கிறேன் என்கிறார்.
6. அதனால், எங்கள் உள்ளத்தில் இன்பத்தீ பொங்கிஎழ, உன் சிறப்புகளை எல்லாத்திசைகளிலும் முழங்குகின்றோம் என்று பாடியுள்ளார்.

**"வீறுடை செம்மொழி தமிழ்மொழி**
**உலகம் வேரூன்றிய நாள் முதல் உயிர்மொழி!"** **- பெருஞ்சித்திரனார்.**

**முடிவுரை:**

**'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்**
**பரவும் வகை செய்தல் வேண்டும்.'**

இவ்வாறு தமிழின் பெருமை, பழமை, சிறப்பு, வியப்பு என எல்லாவற்றையும் மனோன்மணீயம் பெ.சுந்தரனார் அவர்களும் பெருஞ்சித்திரனார் அவர்களும் தமிழின் பெருமையைப் போற்றி வாழ்த்துகின்றனர்.

நன்றி. வணக்கம்.

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. **பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் ................**

**அ) துரை.இராசமாணிக்கம்** ஆ) தி. இராசகோபாலன்
இ) துரைராசு ஈ) எத்திராசலு

2. **"தென்னன் மகளே!" இத்தொடரில் தென்னன் என்பவர்...............**

அ) சேரன் ஆ) சோழன் **இ) பாண்டியன்** ஈ) பல்லவன்

3. **நிலைத்த நூலெனப் பாவலரேறு எதைக் குறிப்பிடுகிறார்?**

அ) எட்டுத்தொகை **ஆ) சிலப்பதிகாரம்** இ) பத்துப்பாட்டு ஈ) மணிமேகலை

4. **பெருஞ்சித்திரனாரின் எந்தப் படைப்புத் தமிழுக்குக் கருவூலமாய் அமைந்தது?**

அ) உலகியல் நூறு **ஆ) திருக்குறள் மெய்ப்பொருளுரை**
இ) கனிச்சாறு ஈ) எண்சுவை எண்பது

5. **'கனிச்சாறு' என்ற கவிதை நூலைப் படைத்தவர்..................**

**அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்** ஆ) தாராபாரதி
இ) வாணிதாசன் ஈ) முடியரசன்

6. **'செந்தமிழ்' - என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.**

அ) செந் + தமிழ் ஆ) செம் + தமிழ் **இ) செம்மை + தமிழ்** ஈ) செ + தமிழ்

7. **'தும்பி' என்பதன் பொருள்...............**

அ) வண்ணத்துப்பூச்சி ஆ) தேனீ
இ) தட்டான்பூச்சி **ஈ) வண்டு**

SURA'S

8. **'செந்தாமரை' என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.**
அ) செந் + தாமரை ஆ) செம் + தாமரை இ) சிவப்பு + தாமரை **ஈ) செம்மை + தாமரை**

9. **தமிழன்னையின் மாண்புகழாகக் கவிஞர் வருணித்த நூல் எது?**
**அ) திருக்குறள்** ஆ) பத்துப்பாட்டு இ) எட்டுத்தொகை ஈ) சிலப்பதிகாரம்

10. **பாவலரேறு பெருஞ்சித்திரனார் கீழ்க்கண்ட எந்த இதழ்கள் வாயிலாகத் தமிழுணர்வை உலகெங்கும் பரப்பினார்?**
அ) தென்மொழி, தென்றல் ஆ) தமிழ்ச்சிட்டு, குயில்
**இ) தென்மொழி, தமிழ்ச்சிட்டு** ஈ) நவபாரதி, குயில்

11. **சின்ன குழந்தையின் சிரிப்பும் ஆனவள்; பழுத்த நரையின் பட்டறிவும் ஆனவள் யார்?**
**அ) தமிழ்த்தாய்** ஆ) கல்வித்தாய் இ) தாய்மொழி ஈ) வடமொழி

12. **வானத்திற்கும் வையத்திற்கும் இடைப்பட்ட யாவற்றையும் கவிதையாகக் கொண்டவள் ................**
அ) செவிலித் தாய் **ஆ) தமிழ் அன்னை** இ) நற்றாய் ஈ) அன்னை

13. **'செந்தமிழ்' – இலக்கணக்குறிப்புத் தருக.**
அ) வினைத்தொகை ஆ) உரிச்சொற்றொடர் **இ) பண்புத்தொகை** ஈ) அன்மொழித்தொகை

14. **'அன்னை மொழி' – எனத் தொடங்கும் கவிதை இடம் பெற்றுள்ள நூல் .............**
அ) எண்சுவை எண்பது ஆ) பாவியக் கொத்து
இ) உலகியல் நூறு **ஈ) கனிச்சாறு**

15. **'கனிச்சாறு' என்பது ............ வகை நூல்.**
**அ) கவிதை** ஆ) சிறுகதை இ) புதினம் ஈ) உரைநடை

16. **தமிழ்ச்சிட்டு, தென்மொழி போன்றவை ..............**
அ) கவிதைகள் ஆ) உரைநடை நூல்கள்
**இ) இதழ்கள்** ஈ) சிறுகதை நூல்கள்

17. **பின்வருவனவற்றுள் பொருந்தாதது எது?**
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை **இ) முல்லைப்பாட்டு** ஈ) ஐங்குறுநூறு

18. **கீழ்க்கண்டவற்றுள் பத்துப்பாட்டு அல்லாத நூல் எது?**
அ) மதுரைக்காஞ்சி ஆ) பட்டினப் பாலை இ) நெடுநல் வாடை **ஈ) பரிபாடல்**

19. **பொருத்துக.**
அ) தென்னன் – 1) பத்துப்பாட்டு
ஆ) பாப்பத்து – 2) பதினெண் கீழ்க்கணக்கு
இ) நற்கணக்கு – 3) எட்டுத்தொகை
ஈ) எண்தொகை – 4) பாண்டியன்
அ) 4, 1, 3, 2 **ஆ) 4, 1, 2, 3** இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2

20. **பொருத்துக:**
**சொல் பொருள்**
(அ) முகிழ்த்த – 1) பெருமை
(ஆ) மாண் – 2) பழமை
(இ) முந்தை – 3) தோன்றிய
(ஈ) யாண்டும் – 4) எங்கும்
அ) 4, 3, 1, 2 **ஆ) 3, 1, 2, 4** இ) 3, 1, 4, 2 ஈ) 3, 4, 1, 2

21. **'பாப்பத்தே' என்பது ............... நூல்களைக் கொண்டது.**
அ) 8 ஆ) 5 இ) 18 **ஈ) 10**

SURA'S

22. **தமிழ்த்தாய் வாழ்த்து, முந்துற்றோம் யாண்டும் போன்ற தலைப்புகளில் பாடல்கள் இடம் பெற்றுள்ள நூல் ...............**

அ) பாவியக் கொத்து **ஆ) கனிச்சாறு** இ) எண்சுவை எண்பது ஈ) மகபுகுவஞ்சி

23. **"அன்னை மொழியே அழகார்ந்த செந்தமிழே! முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!" இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள தொடைநயங்களைக் குறிப்பிடுக.**

அ) அடிமோனை, அடி எதுகை **ஆ) சீர்மோனை, அடி எதுகை**

இ) அடி எதுகை, அடி இயைபு ஈ) சீர்மோனை, சீர் இயைபு

24. **பொருந்துவதைத் தேர்க.**

அ) கனிச்சாறு ஆ) தமிழ்ச்சிட்டு இ) பாவியக் கொத்து ஈ) எண்சுவை எண்பது

1) அ, ஆ, இ **2) அ, இ, ஈ** 3) அ, ஈ 4) ஆ மட்டும்

25. **தமிழ் முத்தமிழாய் வளர்ந்தது இதில் முத்தமிழ் என்பவை .................**

அ) விண்ணோடும், முகிலோடும் ஆ) கதிரவனோடும், கடலோடும்

**இ) இயல், இசை, நாடகம்** ஈ) இவை அனைத்தும்

26. **அறிவைப் பெருக்குபவள்; அன்பை வயப்படுத்துபவள் எனக் கவிஞர் எதை உருவகப்படுத்துகிறார்?**

அ) உலகம் ஆ) நாடு இ) கடல் **ஈ) மொழி**

27. **'பேரரசு' என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.**

அ) பேர் + அரசு **ஆ) பெருமை + அரசு** இ) பெரு + அரசு ஈ) பேர + அரசு

28. **பாண்டிய மன்னனின் மகளாகப் பாவலரேறு எதைக் குறிப்பிடுகிறார்?**

**அ) தமிழை** ஆ) நாட்டை இ) மொழியை ஈ) இலக்கியத்தை

## குறுவினா

1. **பெருஞ்சித்திரனார் எமக்குயிர் என எதனைக் கூறுகிறார்?**

பெருஞ்சித்திரனார், எமக்குயிர் என்று தமிழைக் கூறுகிறார்.

2. **வண்டைப் போல் நாம் என்ன செய்வதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்?**

செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடும் வண்டைப் போல, நாம் தமிழைச் சுவைத்து தமிழின் பெருமையை முழங்குவதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

3. **அன்னை மொழியே பாடலை அழகாக்கும் நூல்கள் யாவை?**

**அன்னை மொழிப் பாடலை அழகாக்கும் நூல்கள்:** திருக்குறள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை.

4. **"முந்துற்றோம் யாண்டும்" - எனப் பெருஞ்சித்திரனார் கூறுவது யாது?**

**உள்ளிருந்து பற்றுணர்வு பொங்கி எழ:** உள்ளத்திலே இன்பத் தீ தோன்றுகிறது. செந்தாமரை மலரில் உள்ள தேனை அருந்திவிட்டுச் சிறகு அசைத்துப் பாடும் வண்டைப் போல, நாங்களும் உன்னைச் சுவைத்து, உனது சிறப்புகளை எல்லா இடங்களிலும் பாடுகிறோம் என்கிறார்.

## சிறுவினா

1. **பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் யாவை?**

| பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் - 18 | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | நாலடியார் | 7 | ஐந்திணை ஐம்பது | 13 | ஆசாரக் கோவை |
| 2 | நான்மணிக் கடிகை | 8 | ஐந்திணை எழுபது | 14 | பழமொழி நானூறு |
| 3 | இன்னா நாற்பது | 9 | திணைமொழி ஐம்பது | 15 | சிறுபஞ்ச மூலம் |
| 4 | இனியவை நாற்பது | 10 | திணைமாலை நூற்றைம்பது | 16 | முதுமொழிக் காஞ்சி |
| 5 | கார் நாற்பது | 11 | திருக்குறள் | 17 | ஏலாதி |
| 6 | களவழி நாற்பது | 12 | திரிகடுகம் | 18 | கைந்நிலை |

SURA'S

## நெடுவினா

1. **பெருஞ்சித்திரனார் தமிழை எவ்வாறெல்லாம் போற்றுகிறார்?**

| குறிப்புச்சட்டகம் |
|---|
| முன்னுரை |
| அழகார்ந்த செந்தமிழே! |
| தமிழின் பெருமை |
| முடிவுரை |

**முன்னுரை:** **'தமிழுக்கும் அமுதென்று பேர்'**

"அமுதமான மொழி தமிழ். உலகின் மூத்த மொழி,

செம்மொழி என்றெல்லாம் சான்றோர்களால் புகழப்பட்ட மொழி.

இங்குத் தமிழ் மொழியின் பெருமையைப் பாவலரேறு அன்னை மொழியே!" என்று விளித்துப் போற்றுவதைக் காணலாம்.

**அழகார்ந்த செந்தமிழே!**

1. என் தாய்க்கு நிகரான மொழி
2. அழகாக அமைந்த செம்மைமொழி
3. பழைமைக்கும் பழைமையாய்த் தோன்றிய நல்ல மணம் வீசும் கனி போன்ற மொழி
4. கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட உலகப் பேரரசான மொழி
5. பாண்டிய மன்னனின் மகளாக வீற்றிருந்தவள்!
6. திருக்குறளின் பெரும் பெருமைக்கு உரியதாக உள்ள மொழி!
7. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை என்றெல்லாம் தமிழை அழைக்கிறார்.

**தமிழின் பெருமை:**

1. செழுமையானது தமிழ்
2. எமக்குள் வாழும் உயிர் போன்றது தமிழ்மொழி
3. விரிவாகக் கூறமுடியாத அளவிற்குப் பெரும் பெருமைகளை உடைய மொழி
4. இலக்கிய வளத்துடனும், நீண்ட கால நிலைப்புத் தன்மையும், எல்லாரும் புகழும் சிறப்பும் உடையது.

**முடிவுரை:**

**"தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்"**

என்று பாவேந்தர் கூறுவது போல, "செந்தாமரையில் உள்ள தேனைக் குடித்துவிட்டுச் சிறகசைத்துப் பாடும் வண்டினைப் போல் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் பற்றுணர்வுப் பொங்கி எழ, உன் சிறப்பை எல்லா இடங்களிலும் முழங்குவதில் பெருமையடைகிறேன்!" என்று பாடுகிறார் பெருஞ்சித்திரனார்.

☆☆☆

SURA'S

# இயல் 1 பாவாணர் பார்வையில் தமிழ்ச்சொல் வளம்

## உரைநடை உலகம்

- தேவநேயப் பாவாணர்

### கரு



✳ மொழியிலுள்ள வகைப்படுத்தப்பட்ட சொல்வளங்களைச் சொற்களின் வாயிலாகப் பேச்சிலும் எழுத்திலும் இடமறிந்து கையாளுதல்.

✳ கால வெள்ளத்தில் கரைந்துபோன மொழிகளுக்கிடையில், நீந்தித் தன்னை நிலை நிறுத்திக் கொண்டுள்ளது தமிழ்.

✳ தமிழ், எல்லா வளமும் சிறப்பும் கொண்டு விளங்குகிறது. பொருள்வளம், சுவை வளம், சொல்வளம் என எல்லாவற்றிலும் குறை காண முடியாத ஒரே மொழி தமிழ்மொழி.

✳ தமிழில் அமைந்த சொற்களை வைத்து, இதன் சிறப்பை அறியலாம்.

✳ உண்கின்ற சோறைக் குறிக்கும் சொல் அவிழ்பதம். அதாவது பதமாக வைத்து இருப்பதைக் குறிப்பது.

✳ 'அவிழ்தல்' என்றால் பல பொருள் உண்டு. மலர்தல், விரிதல், விடுபடல் இங்கே சோறு, அரிசி என்னும் நிலையிலிருந்து மாறி, நீரில் மலர்வதை 'அவிழ்பதம்' என்ற அழகான சொல்லால் குறிக்கின்றனர்.

✳ இத்தகைய தமிழ்ச் சொல் வளத்தைப் பல துறைகளிலும் காணமுடிகிறது. ஆனால், நம் பாடப்பகுதியில் பயிர்வகைச் சொற்கள் மட்டும் சிறப்பாக எடுத்துக்காட்டப் பெற்றுள்ளது.

SURA'S

### ஆசிரியர் குறிப்பு



**ஆசிரியர்** : தேவநேயப் பாவாணர்

**பெற்றோர்** : **தந்தையார்** - ஞானமுத்து - **தாயார்** - பரிபூரணம்

**காலம்** : 07.02.1902 - 15.01.1981 (78)

**பிறந்த ஊர்** : திருநெல்வேலி மாவட்டம் - கோமதிமுத்துபுரம்

**இயற்றிய நூல்கள்** : இயற்றமிழ் இலக்கணம், தமிழ் இலக்கிய வரலாறு, பழந்தமிழர் ஆராய்ச்சி போன்ற 40க்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியவர். இவர், 150க்கும் மேற்பட்ட மொழி ஆராய்ச்சி, இலக்கணக் கட்டுரைகளை எழுதியவர். உலகில் முதன் மொழி ஆராய்ச்சியாளர் தமிழ்ச் சொல்லாராய்ச்சியில் உச்சம் தொட்டவர்.

**பணி** : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர். உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவி, அதன் தலைவராக இருந்தவர்.

**சிறப்புகள்** : மொழி ஞாயிறு, தனித் தமிழ் இயக்கத்தின் தந்தை எனப் போற்றப்படுகிறார்.

### நூற்குறிப்பு

தேவநேயப் பாவாணரின் 'சொல்லாய்வுக் கட்டுரைகள்' என்னும் நூலில் உள்ள தமிழ்ச் சொல்வளம் என்னும் கட்டுரையின் கருத்தே நமது பாடப்பகுதியாகும்.

## கற்பவை கற்றபின்

1. **சொல்லுதல் என்பதற்குப் பேசுதல், விளம்புதல், செப்புதல், உரைத்தல், கூறல், இயம்பல், மொழிதல் எனப் பல சொற்கள் உள்ளன. இதைப் போன்று மழை, கடல், யானை போன்றவற்றிற்கு வழங்கப்படும் பல்வேறு பெயர்களைத் தொகுத்து வகுப்பறையில் வழங்குக.**

**மழையின் வேறு பெயர்கள் :**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாரி | தூறல் | சாரல் | ஆவி | சோனை | பெயல் | புயல் |
| அடை மழை | கன மழை | ஆலங்கட்டி | ஆழி மழை | பனி மழை | | |

**கடலின் வேறு பெயர்கள் :**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அரலை | அரி | அலை | அழுவம் | ஆழி | ஆர்கலி | பவ்வம் |

**யானையின் வேறு பெயர்கள் :**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வேழம் | களிறு | களபம் | மாதங்கம் | உம்பர் | உம்பல் | ஆம்பல் |
| குஞ்சரம் | தூங்கல் | பெருமா | ஓங்கல் | கும்பி | கரி | வழுவை |
| மதகயம் | போதகம் | கடகம் | தந்தி | | | |

2. **நாம் பேசும் மொழியில் அதிகமான சொற்களை ஆள்வதால் ஏற்படும் பயன்கள் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.**

**தமிழாசிரியர்** : வணக்கம் மாணவச் செல்வங்களே!

**மாணவர்கள்** : வணக்கம் ஐயா!

**தமிழாசிரியர்** : நாம் பேசும் மொழியில், அதிகமான சொற்கள் ஆள்வதால் ஏற்படும் பயன்கள் குறித்துக் கலந்து உரையாடல் நிகழ்த்தலாமா?

**புவனா** : சரி, ஐய்யா! கல்பனா... எப்பொழுதும் புத்தகம்... புத்தகம்தானா...?

**ஞானசுந்தரி** : கர்ணன் கவசக் குண்டலத்தோடு பிறந்ததை மகாபாரதத்திலே படித்திருக்கிறேன்... நம்முடைய கல்பனா... புத்தகத்தோடு பிறந்திருப்பாள் என நினைக்கிறேன்.

**கல்பனா** : கேலி போதும்... நல்ல நண்பன் யாரென்று கேட்டால், நல்ல புத்தகம் என்பேன். புத்தகம் என் கையில் இருப்பது உண்மைதான். புத்தகம் படிப்பதால் நல்ல நல்ல கருத்துகளை நல்ல நல்ல தகவல்களைக் கற்றுத் தெரிந்து கொள்ள முடிகிறது.

**புவனா** : கல்பனா சொல்வது உண்மைதான். “ஒரு நாட்டின் வளமும் அங்கு வழங்கும் சொற்களின் வளமும் தொடர்புடையன!” என்கிறார் பாவாணர்.

**ஞானசுந்தரி** : உண்மைதான். சொல்வளம் நிறைந்த மொழியானது, அது, பயன்படுத்தப்படும் நாட்டின் வளத்தையும் நாகரிகத்தையும் உணர்த்துகின்றது.

**கல்பனா** : பொருளைக் கூர்ந்து நோக்கி, நுண்பாகுபாடு செய்யும் மக்களின் மதிநுட்பத்தையும் உணர்த்துகிறது.

**புவனா** : இலையின் வன்மை, மென்மை ஆகிய தன்மைகளைக் கொண்டு தாள், ஓலை, தோகை, இலை எனத் தமிழில் பலவகைப் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

**ஞானசுந்தரி** : உண்மைதான். நெல்வகைகளையே எடுத்துக் கொள்வோம். சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச் சம்பா... இவையாவும் சொல்வளத்தை உணர்த்த உதவுகின்றன.

**தமிழாசிரியர்** : மாணவச் செல்வங்களே, நாம் பேசும் மொழியில் அதிகமான சொற்களை ஆள்வதால் ஏற்படும் பயன்களைப் பற்றி அறிந்து கொண்டோம்.

## திறன் அறிவோம் – புத்தக வினா

### பலவுள் தெரிக.

2. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள்'. இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது - அ.மா.வி; கா.தேர்வு 2019; செப்.–2021; ஆகஸ்ட்–2022; ஏப்ரல் 2023; மார்ச் 2025

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

**விடை** ஈ) சருகும் சண்டும்

5. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிப்பது - பிடிஏ–4; முதல் தி.தேர்வு; மே–2022; அரை.தேர்வு 2023; ஜூலை & கா.தேர்வு–2024

அ) குலைப்பெயர் வகை ஆ) மணிப்பெயர் வகை
இ) கிளைப்பெயர் வகை ஈ) இலைப்பெயர் வகை

**விடை** ஆ) மணிப்பெயர் வகை

### குறுவினா

3. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன. மார்ச் 2024
ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.
மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

**சரியான தொடர்கள் :**

1. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
2. ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.

**பிழையான தொடர் :** ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.

**பிழைக்கான காரணம் :** 'தாறு' என்பது வாழைக்குலையைக் குறிக்கும். 'சீப்பு' என்பது அதில் அடங்கிய வரிசையான பழங்கள் ஆகும்.

5. சொல்வளத்தை உணர்த்த உதவும் நெல் வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

1. **சொல்வளத்தை உணர்த்த உதவும் நெல் வகைகள்** : செந்நெல், வெண்ணெல், கார்நெல், சம்பா, மட்டை.
2. **நெல்வகையின் சில பெயர்கள்** : ஆவிரம்பூச் சம்பா, ஆனைக் கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச் சம்பா போன்ற வகைப் பெயர்கள் சொல்வளத்தை உணர்த்த உதவுகின்றன.

### சிறுவினா

2. '**புளியங்கன்று** ஆழமாக நடப்பட்டுள்ளது' பிடிஏ–3; கா.தேர்வு 2019; முதல் தி.தேர்வு 2022 & 2024; மே–2022; ஜூலை 2024
இதுபோல் இளம்பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

1. கண்ணன், வயலில் **நெல் நாற்றிற்குத்** தண்ணீர் பாய்ச்சினான்.
2. தாத்தா, **தென்னம்பிள்ளை** வாங்கி வந்தார்.
3. **மாங்கன்று,** மழைக்குப் பிறகு தளிர் விட்டது.
4. **சோளப் பைங்கூழ்** செழுமையாக உள்ளது.
5. வயலைச் சுற்றிப் **பனை வடலியைக்** கண்டேன்.

SURA'S

**நெடுவினா**

1. **நாட்டுவளமும் சொல்வளமும் தொடர்புடையது என்பதைப் பாவாணர் வழிநின்று விளக்குக.**

| குறிப்புச்சட்டகம் | |
|---|---|
| முன்னுரை | குலைப் பெயர் வகை |
| நாட்டு வளமும் சொல் வளமும் | பழத்தோலின் பெயர் வகை |
| விளைபொருள்களின் மிகுதி | மணிப் பெயர் வகை |
| நெல் வகைகள் | இளம் பயிர்களின் பெயர் வகை |
| பயிர்களின் பகுதி | பல சொல் வகை |
| கிளைப் பெயர் வகை | முடிவுரை |

**முன்னுரை:**

**நாடும் மொழியும் நமது இரு கண்கள்** **- மகாகவி பாரதி**

தமிழின் சொல்வளத்தை, இக்கட்டுரை மூலம் காண்போம்.

**நாட்டு வளமும் சொல்வளமும் :**

1. ஒரு நாட்டின் வளமும் அங்கு வழங்கும் சொற்களின் வளமும் தொடர்புடையன.
2. நாட்டு வளமும் சொல் வளத்தை உருவாக்குகிறது.
3. சொல்வளம் நாட்டு வளத்தை உணர்த்துகிறது.
4. **எடுத்துக்காட்டு** : இலைக்குத் தரப்பட்டுள்ள பல பெயர்களைச் சொல்லலாம். இலையின் வன்மை, மென்மை ஆகிய தன்மைகளைக் கொண்டு தாள், ஓலை, தோகை, இலை எனப் பலவகைப் பெயர்கள் அமைந்திருக்கின்றன.

| | |
|---|---|
| **தாள் :** நெல், கேழ்வரகு | **ஓலை :** தென்னை, பனை |
| **தோகை :** சோளம், கரும்பு | **இலை :** வேப்ப இலை, புளிய இலை |

**விளைபொருள்களின் மிகுதி :**

1. விளைபொருள்களின் மிகுதியாலும் சொல்வளம் பெருகுகிறது.
2. **நெல் வகைகள்** : செந்நெல், வெண்ணெல், கார்நெல், சம்பா, மட்டை.
3. **சம்பா நெல் வகையின் பெயர்கள்** : ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச்சம்பா போன்ற பெயர்கள், சொல்வளத்தை உணர்த்த உதவுகின்றன.
4. **தமிழ்நாட்டில் விளைபவை** : வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி முதலிய தானியங்கள் தமிழ்நாட்டைத் தவிர வேறெங்கும் விளைவதில்லை. இவ்விளைச்சலால், தமிழில் அவை சார்ந்த சொல்வளம் பெருகியிருக்கிறது.

**பயிர்களின் பகுதி :**

பயிர்களின் அடிப்பகுதி, கிளைப்பகுதி, இலை, காய், கனி, தோல், மணி இளம் பயிர் முதலானவற்றைக் குறிப்பதற்கு ஏராளமான தமிழ்ச் சொற்கள் உள்ளன. இதனால், தமிழ்ச் சொல்வளம் பெருகுகின்றன.

**கிளைப் பெயர் வகை :**

1. மாபெரும் கிளை, கவை எனப்படுகிறது.
2. கவையில் இருந்து பிரிவது, கொம்பு.
3. கொம்பில் இருந்து பிரிவது, சிறுகிளை.

4. கிளையில் இருந்து பிரிவது, சினை.

5. சினையில் இருந்து பிரிவது, போத்து.

6. போத்தில் இருந்து பிரிவது, குச்சி.

7. குச்சியில் இருந்து பிரிவது, இணுக்கு.

**குலைப் பெயர் வகை :**

| | | |
|---|---|---|
| அவரைக் கொத்து | துவரைக் கொத்து | கொடி முந்திரி – குலை |
| திராட்சை – குலை | வாழை – தாறு | கேழ்வரகு – கதிர் |

**பழத்தோலின் பெயர் வகை :**

மிக மெல்லிய பழத்தோல் வகை, 'தொலி' எனப்படுகிறது. பழத்தோலின் மேல் பகுதி திண்ணமாக இருந்தால் தோல், வன்மையாக இருந்தால் ஓடு.

**மணிப் பெயர் வகை :**

தாவரங்களில் விளையும் தானியங்களை, 'மணி' என்போம். 'மணி' என்பதற்குப் பல்வேறு பெயர்கள் உள்ளன.

| தானியங்கள் | குறிக்கும் சொல் | தானியங்கள் | குறிக்கும் சொல் |
|---|---|---|---|
| நெல், புல், கம்பு | கூலம் | அவரை , உளுந்து | பயறு |
| வேர்க்கடலை, கொண்டைக் கடலை | கடலை | கத்தரி, மிளகாய் | விதை |
| புளி, காஞ்சிரை (நச்சுமரம்) | காழ் | வேம்பு, ஆமணக்கு | முத்து |
| மா, பனை | கொட்டை | தென்னை | தேங்காய் |
| அவரை, துவரை | முதிரை | | |

**இளம் பயிர்களின் பெயர் வகை :**

| | | |
|---|---|---|
| நெல், கத்தரி – நாற்று | மா, புளி, வாழை – கன்று | தென்னை – பிள்ளை |
| பனை – மடலி (அ) வடலி | | |

SURA'S

**பல சொல் வகை :**

வித்துவகை, வேர் வகை, பூவகை, காய் வகை, கனி வகை உள்ளிட்ட இருபதுக்கும் மேற்பட்ட தாவரங்கள் சார்ந்த பல்வேறு பகுதிகளைக் குறிக்கும் பெயர்கள், தமிழ்ச் சொல்வளத்தின் சிறப்பைப் புலப்படுத்துவதைப் பாவாணர் உணர்த்துகிறார்.

**முடிவுரை :**

சொல்வளம் நிறைந்த மொழியானது, அது பயன்படுத்தப்படும் நாட்டின் வளத்தையும் நாகரிகத்தையும் உணர்த்துகிறது. பொருளைக் கூர்ந்து நோக்கி, நுண்பாகுபாடு செய்யும் மக்களின் மதிநுட்பத்தையும் உணர்த்துகிறது.

## பிடிஏ மற்றும் அரசுத் தேர்வு வினா - விடைகள்

**பலவுள் தெரிக.**

1. **'மொழிஞாயிறு' என்று அழைக்கப்படும் பெருமைக்குரியவர்.** [முதல் தி.தேர்வு & ஆகஸ்ட்–2022]

அ) பெருஞ்சித்திரனார் ஆ) பாரதியார் இ) தமிழழகனார் ஈ) தேவநேயப்பாவாணர்

**விடை ஈ) தேவநேயப்பாவாணர்**

2. **தாள், தண்டு, கோல், தூறு, கழி முதலிய தமிழ்ச்சொற்கள் குறிப்பதைத் தேர்ந்தெடுக்கவும்.** முதல் தி.தேர்வு 2022

அ) தாவரங்களின் கிளைப்பகுதியைக் குறிக்கும் சொற்கள்

ஆ) இலைகளின் பெயர்களைக் குறிக்கும் சொற்கள்

இ) தாவரங்களின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள்

ஈ) தாவரங்களின் காய்ந்த பகுதியைக் குறிக்கும் சொற்கள்

விடை **இ) தாவரங்களின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள்**

## குறுவினா

1. **தமிழ்நாட்டு நெல்வகைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.** அ.மா.வி 2019

தமிழ்நாட்டு நெல்லில் செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும் சம்பா, மட்டை, கார் என்றும் பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச்சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச்சம்பா, சீரகச்சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன.

2. **தமிழ்நாட்டில் மட்டும் விளையும் சிறுகூலங்கள் இரண்டன் பெயர்களை எழுதுக.**

வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி. (ஏதேனும் இரண்டு) முதல் தி.தேர்வு 2022; ஏப்ரல்–2023

3. **தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?** முதல் தி.தேர்வு 2022

இலை, தாள், தோகை, ஓலை, சண்டு, சருகு

## விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க

1. **உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா.** செப்.–2021

**வினா:** உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு எது?

2. **தேவநேயப் பாவாணர் உலகத்தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர்.** முதல் தி.தேர்வு 2022

**வினா:** உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர் யார்?

## சிறுவினா

1. **தாவரங்களின் இளம் பயிர் வகைக்கான சொற்களை எழுதுக.** மே–2022

1. நெல், கத்தரி – நாற்று
2. மா, புளி, வாழை – கன்று
3. தென்னையின் இளநிலை – பிள்ளை
4. பனையின் இளநிலை – மடலி (அ) வடலி

## உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

செப்.–2021

1, தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையதென்பது அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். பிற நாடுகளிலுள்ள கூலங்களெல்லாம் சிலவாகவும் சில்வகைப்பட்ட வனவாகவுமிருக்க, தமிழ்நாட்டிலுள்ளவையோ பலவாகவும் கழிபல வகைப்பட்டனவாகவும் இருக்கின்றன. எடுத்துக்காட்டாகக் கோதுமையை எடுத்துக் கொள்ளின் அதில் சம்பாக் கோதுமை, குண்டுக் கோதுமை, வாற்கோதுமை முதலிய சில வகைகளேயுள்ளன. ஆனால், தமிழ்நாட்டு நெல்லிலோ, செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும், பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச் சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன.

SURA'S

**(அ) தமிழ்நாடு பொருள் வளமுடையது என்பது எதனால் விளங்கும்?**

தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையதென்பது அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும்.

**(ஆ) கோதுமையின் வகைகளைக் குறிப்பிடுக.**

சம்பாக் கோதுமை, குண்டுக் கோதுமை, வாற்கோதுமை.

**(இ) தமிழ்நாட்டு நெல்லின் வகைகளை எழுதுக.**

தமிழ்நாட்டு நெல்லில் செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும் சம்பா, மட்டை, கார் என்றும் பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச்சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச்சம்பா, சீரகச்சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன.

## நெடுவினா

1. **தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.**

பிடிஏ–3; செப்.–2021; மே–2022; அரை.தேர்வு 2023; முதல் தி.தேர்வு, ஜூலை–2024; மார்ச் 2025

**முன்னுரை:**

**சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே - அதைத்**
**தொழுது படித்திடடி பாப்பா**

பொருள்வளம், சுவைவளம், சொல்வளம் என எல்லாவற்றிலும் குறையே காணமுடியாத மொழி, தமிழ்மொழி இதன் சிறப்பை, சில சொற்களின் உருவாக்க அடிப்படையில் கண்டு வியக்கலாம். இங்குத் தமிழின் சொல்வளம், சொல்லாக்கத்திற்கான தேவை குறித்து உரைக்குறிப்புகளைக் காணலாம்.

**சொல்வளம் :**

1. தமிழ்நாட்டுப் பொதுமக்கள், உயர்ந்த பகுத்தறிவுடையவர்கள். எத்துணையோ மொழிகளினின்று கடன் கொண்ட ஆங்கில மொழியில், இலையைக் குறிக்க ‘Leaf’ என ஒரே சொல் மட்டுமே உள்ளது.
2. ஆனால், தமிழ் மொழியில் அதன் வன்மை, மென்மையின் அடிப்படையில் தாள், இலை, தோகை, ஓலை எனத் தமிழர் பாகுபாடு செய்துள்ளனர்.

**சொல்லாக்கத்திற்கான தேவை :**

1. திருந்திய மக்களை மற்ற உயிரினின்றும் பிரித்துக் காட்டுவது மொழியாதலின், அதுவே ஒரு நாட்டாரின் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்கும் சிறந்த வழியாகும்.
2. பொருளைக் கூர்ந்து நோக்கி, நுண்பாகுபாடு சொற்களும் நுண்பொருட் சொற்களும் அமைத்துக் கொள்ள வேண்டும்.
3. அறிவியல் வளர்ச்சியினால் ஏற்பட்ட புதிய சொற்களுக்கான கலைச்சொல் வளத்தைப் பறை சாற்றுதல் அவசியமாகும்.
4. தமிழின் பெருமையும் மொழியின் சிறப்பும் குன்றாமல் இருக்கவும், தமிழுக்குச் சிறந்த எதிர்காலம் வேண்டுமாயின் புதிய சொல்லாக்கம் தேவை.
5. பிறமொழிச் சொற்கள் தமிழில் கலந்தால், தமிழின் இனிமை குறையும். அத்துடன் தமிழ்ச் சொற்கள் நாளடைவில் மறைந்து அயல்மொழிச் சொற்களே நிலைபெற்றிட வாய்ப்புகள் உள்ளன. இத்தகைய நிலை ஏற்படாதிருக்கத் தமிழில் புதிய கலைச்சொற்களை உருவாக்க வேண்டும்.

SURA'S

6. நாம், அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் கருவிகள், வேளாண்மை, மருத்துவம், பொறியியல், தகவல் தொடர்பியல் முதலான துறைகளுக்குப் பயன்படும் சொற்களைத் தமிழில் சொல்லாக்கம் செய்து நம் மொழியின் வளத்தைப் பெருக்க வேண்டும்.

**முடிவுரை:**

"தீராத சொல்வளம் தித்திக்கும்
தமிழைத் திகட்டாது காக்கும்"

வேருக்கு நீர் புத்துணர்வு அளிப்பது போல், ஒரு மொழியைச் சொற்களே மறுமலர்ச்சி அடைய செய்கிறது. ஆகச் சொல்வளமே மொழியைக் காப்பதில் பெரும் உதவி செய்கிறது.

3. **தமிழ், சொல் வளமுடையதென்றும் தமிழ்நாடு பொருள் வளமுடையதென்றும் கூறுவதற்கான காரணங்களை விளக்குக.** முதல் தி.தேர்வு 2022

**தமிழின் சொல்வளம் :**

சொல்வளம் அனைத்துச் செம்மொழிகளுக்கும் பொதுவே! எனினும், அதில் தமிழ் மட்டும் தலைசிறந்ததாகும். தமிழ்ச் சொல்வளம் பலதுறைகளில் சிறப்பாக விளங்குகிறது. ஒரு மொழி, பொதுமக்களாலும் அதன் இலக்கியம் புல மக்களாலும் அமையப் பெறும், தமிழ்ப் பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவு உடையவர். எத்துணையோ மொழிகளில் இருந்து கடன்கொண்ட ஆங்கில மொழியில் இலையைக் குறிக்க, 'Leaf' என ஒரேசொல் தான் உள்ளது. ஆங்கில இலக்கியத்தில் வேறு பல வகைகளில் இலைகளைப் பாகுபாடு செய்தார்களே தவிர, தமிழைப் போலத் தாள், இலை, தோகை, ஓலை எனப் பாகுபாடு செய்ததில்லை.

**தமிழ்நாடு பொருள் வளமுடையது :**

தமிழ்ச்சொல், எத்துணைப் பொருள்வளமுடையது என்பது அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். பிறநாடுகளில் உள்ள கூலங்கள், சிலவாகவும் தமிழ்நாட்டில் உள்ள கூலங்கள், பலவாகவும் வகைப்படுத்தப்பட்டு இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, கோதுமையை எடுத்துக்கொண்டால் அதில் சம்பாக்கோதுமை, குண்டுக்கோதுமை, வாற்கோதுமை முதலிய சில வகைகளே உள்ளன.

ஆனால், தமிழ்நாட்டு நெல்லிலோ, செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும் சம்பா, மட்டை, கார் என்றும் பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா,குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச் சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன. இவற்றோடு வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி முதலிய சிறுகூலங்கள் தமிழ்நாட்டிலன்றி வேறெங்கும் விளைவதில்லை.

4. **தமிழ் மொழியின் தொன்மை, இலக்கிய வளம், சொல்வளம் குறித்து ஒரு பக்க அளவில் எழுதுக.**

**தமிழின் தொன்மை :** முதல் தி.தேர்வு 2022

உலகமொழிகளுள் தலைசிறந்ததாகவும் செம்மை நிறைந்ததாவும் விளங்கும்மொழி தமிழ்மொழி இலெமூரியாப் பகுதியில் வாழ்ந்த தமிழர்தம் உலக நாகரிகத்திற்கு வித்திட்டனர்.

மொகஞ்சதாரோ, ஹரப்பா நகரங்களில் தமிழ் முத்திரைகள் காணப்படுகின்றன. உலக மொழிகளில் பழமையானவைகளில் சிறந்த மொழியாகத் தமிழ் உள்ளது.

**"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே
வாளொடு முன்தோன்றி மூத்தகுடி தமிழ்க்குடி"**

என்கிறது புறப்பொருள் வெண்பா மாலை.

SURA'S

**இலக்கிய வளம் :**

ஒரு மொழியின் செம்மையை, அதன் இலக்கியங்கள் மூலம் அறியலாம். சங்க இலக்கியங்களைப் பதினெண்மேற்கணக்கு நூல்கள் என்று அழைப்பதோடு எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்றும் அழைப்பர். அகம், புறம் என்ற வாழ்வியலை மையப்படுத்திய கருத்துகளின் தொகுப்பாகும். வாழ்வை நெறிப்படுத்தும் அற இலக்கியங்களைக் கொண்டதாகப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அமைகின்றன. மேலும் காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், தனிப்பாடல்கள், இடைக்காலப் புலவர்களின் படைப்புகள், கவிதை, புதினம், சிறுகதை என்ற பன்முகப் படைப்புகள் சொல்லில் அடங்காதவை.

**சொல்வளம் :**

சொல்வளம் அனைத்துச் செம்மொழிகளுக்கும் பொதுவே! எனினும், அதில் தமிழ் மட்டும் தலைசிறந்ததாகும். தமிழ்ச் சொல்வளம் பல துறைகளில் சிறப்பாக விளங்குகிறது. "தமிழில் தோன்றி தமிழுக்கே சிறப்பாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள்ளன!" என்கிறார் கால்டுவெல்.

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. **கீழ்க்கண்டவற்றில் அடிவகையைக் குறிக்கும் சொல் எது?**
   **அ) தாள்** ஆ) கவை இ) தோகை ஈ) துளிர்
2. **'கச்சல்' என்பது**
   **அ) வாழைப்பிஞ்சு** ஆ) மாம்பிஞ்சு இ) பலாப்பிஞ்சு ஈ) எள் பிஞ்சு
3. **நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடி ...............**
   **அ) தாள்** ஆ) கோல் இ) தண்டு ஈ) நூறு
4. **கீரை, வாழை முதலியவற்றின் அடி ...............**
   அ) விறகு **ஆ) தண்டு** இ) நூறு ஈ) தாள்
5. **நெட்டி, மிளகாய்ச் செடி முதலியவற்றின் அடி ...............**
   அ) தாள் ஆ) சுள்ளி **இ) கோல்** ஈ) தோகை
6. **பொருந்தாததைத் தேர்க.**
   அ) தாள் **ஆ) குச்சு** இ) கோல் ஈ) தூறு
7. **புளி, வேம்பு முதலியவற்றின் இலையைக் குறிக்கும் சொல்...............**
   **அ) இலை** ஆ) தாள் இ) தோகை ஈ) ஓலை
8. **காய்ந்த இலையைக் குறிக்கும் சொல் ..............**
   அ) சண்டு ஆ) ஓலை இ) தோகை **ஈ) சருகு**
9. **உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு ..............**
   அ) மொரிஷியஸ் ஆ) இந்தியா **இ) மலேசியா** ஈ) இலங்கை
10. **சம்பா நெல்லின் உள் வகைகளின் எண்ணிக்கை?**
    அ) 40 ஆ) 50 **இ) 60** ஈ) 30
11. **அடி மரத்திலிருந்து பிரியும் மாபெரும் கிளை..............**
    அ) கிளை ஆ) சினை **இ) கவை** ஈ) கொம்பு

SURA'S

12. **அவரை, துவரை முதலியவற்றின் குலைக்குக் கூறப்படும் சொல் ..............**
**அ) கொத்து** ஆ) குலை இ) சீப்பு ஈ) தாறு

13. **செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர் ...............**
**அ) தேவநேயப் பாவாணர்** ஆ) உ.வே. சாமிநாதர்
இ) திரு.வி.கல்யாண சுந்தரனார் ஈ) இரா.பி.சேதுப்பிள்ளை

14. **தேவநேயப் பாவாணரின் சிறப்புப் பெயர் எது?**
அ) சொல்லின் செல்வர் **ஆ) மொழிஞாயிறு**
இ) தமிழ்த்தென்றல் ஈ) இரண்டாம் நக்கீரர்

15. **"நாடும் மொழியும் நமதிரு கண்கள்" என்று கூறியவர் ...............**
அ) ஜி.யு. போப் ஆ) கால்டுவெல் **இ) பாரதியார்** ஈ) ப.சிங்காரம்

16. **'தமிழ்ச்சொல் வளம்' என்ற கட்டுரையின் ஆசிரியர்**
அ) இலக்குவனார் ஆ) இரா.பி.சேதுப்பிள்ளை
இ) மு.வரதராசனார் **ஈ) தேவநேயப் பாவாணர்**

17. **தமிழ்ச்சொல் வளம் என்னும் கட்டுரை இடம் பெற்ற நூல் ...............**
**அ) சொல்லாய்வுக் கட்டுரைகள்** ஆ) பழந்தமிழர் ஆராய்ச்சி
இ) இயற்றமிழ் இலக்கணம் ஈ) இசைத்தமிழ்க் கலம்பகம்

18. **பொருத்துக :**

| | | |
|---|---|---|
| அ) தட்டு | – 1) | புளி, வேம்பு முதலியவற்றின் அடி |
| ஆ) கழி | – 2) | மூங்கிலின் அடி |
| இ) கழை | – 3) | கம்பு, சோளம் முதலியவற்றின் அடி |
| ஈ) அடி | – 4) | கரும்பின் அடி |

அ) 4, 3, 2, 1 ஆ) 4, 2, 3, 1 **இ) 3, 4, 2, 1** ஈ) 3, 4, 1, 2

19. **பொருத்துக :**

| | | |
|---|---|---|
| அ) காய்ந்த குச்சி | – | 1) கட்டை |
| ஆ) காய்ந்த சிறுகிளை | – | 2) வெங்கழி |
| இ) காய்ந்த கழி | – | 3) விறகு |
| ஈ) காய்ந்த கொம்பு | – | 4) சுள்ளி |

**அ) 4, 3, 2, 1** ஆ) 1, 2, 4, 3 இ) 4, 3, 1, 2 ஈ) 2, 3, 4, 1

20. **பொருத்துக :**

| | | |
|---|---|---|
| அ) சண்டு | – | 1) நெல், புல் முதலியவற்றின் இலை |
| ஆ) ஓலை | – | 2) தென்னை, பனை முதலியவற்றின் இலை |
| இ) தோகை | – | 3) காய்ந்த தாளும் தோகையும் |
| ஈ) தாள் | – | 4) சோளம், கரும்பு முதலியவற்றின் இலை |

அ) 4, 3, 2, 1 **ஆ) 3, 2, 4, 1** இ) 1, 2, 3, 4 ஈ) 3, 2, 1, 4

21. **பொருத்துக :**

| | | |
|---|---|---|
| அ) வாழைப் பிஞ்சு | – | 1) இளநீர் |
| ஆ) இளம்பாக்கு | – | 2) கச்சல் |
| இ) முற்றாத தேங்காய் | – | 3) கருக்கல் |
| ஈ) இளநெல் | – | 4) நுழாய் |

அ) 2, 4, 3, 1 ஆ) 2, 1, 4, 3 **இ) 2, 4, 1, 3** ஈ) 4, 3, 2, 1

22. **இந்திய மொழிகளிலேயே மேலை நாட்டு எழுத்துருவில் முதலில் அச்சேறிய மொழி ..............**
அ) ஆங்கிலம் ஆ) சமஸ்கிருதம் **இ) தமிழ்** ஈ) இந்தி

23. **வேறுபட்டதைத் தேர்க.**
அ) தளிர், முறி, கொழுந்து, குருத்து ஆ) தண்டு, கழி, கழை, அடி
இ) சுள்ளி, விறகு, கட்டை, வெங்கழி **ஈ) அரும்பு, வீ, ஓலை, சண்டு**

24. **'கார்டிலா' என்னும் போர்ச்சுகீசிய நூல் முதன்முதலாக ............ மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.**
அ) ஆங்கிலம் **ஆ) தமிழ்** இ) தெலுங்கு ஈ) சீனமொழி

25. **சரியானதைத் தேர்க.**
அ) தட்டு, கழி, தழை, சுள்ளி ஆ) சுள்ளி, விறகு, கட்டை, தாள்
இ) கொத்து, குலை, கதிர், மூசு **ஈ) தாள், தண்டு, கோல், தூறு**

26. **"உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியாவே. மாநாட்டுக்குரிய அம்முதல் மொழியும் தமிழே" என்று கூறியவர் ..............**
அ) பாவாணர் ஆ) இளங்குமரனார்
**இ) கா. அப்பாத்துரையார்** ஈ) பெருஞ்சித்திரனார்

27. **தொலி ......................, தோல்..................**
அ) சுரையின் ஓடு, வன்மையானது **ஆ) மிகமெல்லியது, திண்ணமானது**
இ) மிகவன்மையானது, திண்ணமானது ஈ) நெல் மூடி, கேழ்வரகு உமி

28. **அவரை, உளுந்து ............, மா, பனை முதலியவற்றின் வித்து ............**
அ) கூலம், கடலை ஆ) பயறு, முதிரை **இ) பயறு, கொட்டை** ஈ) கொட்டை, பயறு

29. **பொருத்துக :**
அ) நாற்று - 1) பனையின் இளநிலை
ஆ) கன்று - 2) நெல், கத்தரி முதலியவற்றின் இளநிலை
இ) பிள்ளை - 3) மா, புளி, முதலியவற்றின் இளநிலை
ஈ) மடலி - 4) தென்னையின் இளநிலை
அ) 2, 3, 1, 4 ஆ) 4, 3, 2, 1 இ) 3, 4, 1, 2 **ஈ) 2, 3, 4, 1**

30. **'கார்டிலா' என்னும் நூல் எந்த வரிவடிவில் அச்சிடப்பட்டது?**
அ) தமிழ் **ஆ) ரோமன்** இ) இத்தாலி ஈ) கிரேக்கம்

31. **தமிழ்நாட்டில் மட்டும் விளையும் சிறுகூலங்கள்.**
**அ) வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி** ஆ) வரகு, காடைக்கண்ணி, வெண்ணெய்
இ) குண்டுச்சம்பா, குதிரைவாலி சம்பா, வரகு ஈ) சம்பா கோதுமை, குண்டு கோதுமை, வரகு

**குறுவினா**

1. **பழங்களின் மேற்பகுதியினைக் குறிக்க வழங்கும் சொற்களைக் குறிப்பிடுக.**

* தொலி * தோல்
* ஓடு * குடுக்கை * மட்டை

2. **தானியங்களுக்கு வழங்கும் சொற்களைக் குறிப்பிடுக.**

கூலம், பயறு, கடலை, விதை, காழ், முத்து, கொட்டை, தேங்காய், முதிரை.

SURA'S

3. **தமிழர், எதனால் தனிப்பெரும் நாகரிகத்தை உடையவராக இருந்தனர்?**

நாட்டின் தனிப்பெரும் வளத்தினாலேயே, பண்டைத் தமிழ் மக்கள் தனிப்பெரும் நாகரிகத்தை உடையவராக இருந்தனர்.

4. **கடல் கடந்து முதலில் அச்சேறிய தமிழ் குறித்து உமது பாடப்பகுதி வழி எழுதுக.**

'போர்ச்சுகீசு' நாட்டின் தலைநகர் லிசுபனில் 1554 இல், 'கார்டிலா' என்னும் நூல் முதன் முதலாகத் தமிழ் மொழியில் தான் மொழி பெயர்க்கப்பட்டது ஆகும்.

**சிறுவினா**

1. **தானிய மணிகளுக்கு வழங்கும் பெயர்களை எழுதுக.**
   1. நெல், கம்பு முதலியவை, 'கூலம்' என வழங்கப்படும்.
   2. அவரை, உளுந்து முதலியவை, 'பயறு' எனப்படும்.
   3. வேர்க்கடலை, கொண்டைக்கடலை முதலியவை கடலை எனப்படும்.
   4. கத்தரி, மிளகாய் முதலியவற்றின் வித்து, 'விதை' எனப்படும்.
   5. புளி, காஞ்சிரை வித்து காழ் என்றும், வேம்பு, ஆமணக்கு இவற்றின் வித்து, 'முத்து' என்றும் அழைக்கப்படும்.
   6. மா, பனையின் வித்து கொட்டையாகும். தென்னையின் வித்து, 'தேங்காய்' எனப்படும்.
   7. அவரை, துவரை முதலிய பயறு வகைகள் 'முதிரை' எனப்படும்.

2. **தாவரங்களின் குலைப் பெயர் வகைகள் எவ்வாறெல்லாம் வழங்கப்படுகின்றன?**
   1. அவரை, துவரை இவற்றின் குலை, 'கொத்து' எனவும்,
   2. கொடி முந்திரி, 'குலை' எனவும், வாழைக்குலை, 'தாறு' எனவும்,
   3. கேழ்வரகின் குலை, 'கதிர்' எனவும் வழங்கப்படுகிறது.

3. **ஒரு தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்களை விளக்குக.**

**ஒரு தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள் :**

| | | |
|---|---|---|
| நெல், கேழ்வரகு – தாள் | கீரை, வாழை –தண்டு | நெட்டி, மிளகாய்ச்செடி – கோல் |
| கரும்பு – கழி | மூங்கில் – கழை | புளி, வேம்பு – அடி |

4. **தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.**
   1. புளி, வேம்பு இவற்றின் இலை, **இலை** எனவே வழங்கப்படுகிறது.
   2. நெல், புல் இவற்றின் இலை, **தாள்** எனவும், சோளம், கரும்பு இவற்றின் இலை, **தோகை** எனவும்,
   3. தென்னை, பனை இவற்றின் இலை, **ஓலை** எனவும்,
   4. காய்ந்த தாளும், தோகையும் **சண்டெனவு**ம்,
   5. காய்ந்த இலை, **சருகு** எனவும் வழங்கப்பெறும்.

**நிறுத்தற்குறியிடுக :**

1. **செந்நெல் வெண்ணெல் கார்நெல் போன்ற பல வகைகள் உண்டு**

செந்நெல், வெண்ணெல், கார்நெல் போன்ற பல வகைகள் உண்டு.

2. **நாடும் மொழியும் நமதிரு கண்கள் என்கிறார் மகாகவி பாரதியார்**
"நாடும் மொழியும் நமதிரு கண்கள்" என்கிறார் மகாகவி பாரதியார்.

**வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக :**

1. **பல்வேறு இலக்கண கட்டுரைகளையும் மொழியாராய்ச்சி கட்டுரைகளையும் எழுதிய பாவாணர், தமிழ் சொல்லாராய்ச்சியில் உச்சம் தொட்டவர்.**

   பல்வேறு இலக்கணக் கட்டுரைகளையும் மொழியாராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதிய பாவாணர், தமிழ்ச் சொல்லாராய்ச்சியில் உச்சம் தொட்டவர்.

2. **அலைத்கடல் தாண்டி, மலை பலத்கடந்து, எத்திசையிலும் பரவியத் தமிழினத்தின், தமிழின் புகழ் மணத்தை நுகர்வோம்.**

   அலைகடல் தாண்டி, மலை பலகடந்து, எத்திசையிலும் பரவிய தமிழினத்தின், தமிழின் புகழ் மணத்தை நுகர்வோம்.

☆☆☆

SURA'S

# இயல் 1

# காலக்கணிதம்

**கவிதைப்பேழை**

– கண்ணதாசன்

**கரு**

மனிதம், தனி மனிதனுடைய, சமுதாயத்தினுடைய வாழ்வியல் நெறியின் தெளிந்த சாரம். மனிதம் என்பதன் இலக்கணமானவன் நல்ல கவிஞன்.

**ஆசிரியர் குறிப்பு**

**பெயர்** : கண்ணதாசன்
**இயற்பெயர்** : முத்தையா
**ஊர்** : சிறுகூடல்பட்டி (சிவகங்கை மாவட்டம்)
**பெற்றோர்** : சாத்தப்பன் – விசாலாட்சி
**காலம்** : 24.6.1927 முதல் 17.10.1981 வரை
**புனைப்பெயர்கள்** : காரைமுத்துப் புலவர், வணங்காமுடி, கமகப்பிரியா, பார்வதிநாதன்
**இதழ்கள்** : திருமகள், தென்றல், சண்டமாருதம், முல்லை. (ஆசிரியர் பணி)
**விருது** : **'சேரமான் காதலி'** என்ற புதினத்திற்காக சாகித்திய அகாதெமி விருது.
**பெருமை** : தமிழக அரசின் அரசவைக் கவிஞராக நியமிக்கப்பட்டிருந்தார். 1949 ஆம் ஆண்டு **'கலங்காதிரு மனமே'** என்ற பாடலை எழுதி, திரைப்படப் பாடலாசிரியர் ஆனார்.
**கூடுதல் செய்திகள்:** திரைப்பட பாடலாசிரியர், கவியரங்கக் கவிஞர், பேச்சாளர், பல புதினங்களைப் படைத்த எழுத்தாளர். 4,000 கவிதைகள், 5,000 பாடல்கள் 10 காப்பியங்கள், 8 சிற்றிலக்கியங்கள், 1 கவிதை நாடகம், 2 மொழிபெயர்ப்பு, 26 புதினங்கள், 10 சிறுகதைகள், 4 தன் வரலாறு நூல்கள், சமயம் பற்றியன, சுயசரிதை 3 நாடகங்கள், 9 உரைநூல்கள், பேச்சுகள் – வினா விடை எனத் தமிழுக்கும் மாபெரும் தொண்டாற்றியவர்.

**பாடப்பகுதி**

'கண்ணதாசன் கவிதைகள்' என்னும் தொகுப்பில் இடம் பெற்றுள்ள 'காலக்கணிதம்' என்ற கவிதை நமது பாடப்பகுதியாகும்.

**பாடல்**

**கவிஞன் யானோர் காலக் கணிதம்**
**கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!**
**புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்**
**பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!**
**இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்**
**இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!**
**ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்**
**அவனும் யானுமே அறிந்தவை; அறிக!**




**சொல்லும் பொருளும்**

* கவிஞன் யான் ஓர் காலக் கணிதம் – கவிஞனாகிய நானே காலத்தைக் கணிப்பவன் ஆவேன்.

SURA'S

- ✳ கருப்படு பொருளை உருப்பட வைப்பேன் – என் கருத்தில் தோன்றியவற்றை, அனைவரும் அறியும்படி வெளிப்படுத்துவேன்.
- ✳ புவியில் நான் ஓர் புகழுடைத் தெய்வம் – இந்தப் பூமியில் உள்ளோரால், போற்றப்படும் தெய்வம் நான்.
- ✳ பொன்னினும் விலைமிகு பொருள் என் செல்வம் – பொன்னை விட விலைமதிப்பற்றது, என்னுடைய செல்வம்.
- ✳ இவை சரி என்றால் – இவையெல்லாம் சரி என்று கருதினால்
- ✳ இயம்புவது என் தொழில் – அவற்றைக் கூறுவது என் பணியாகும்.
- ✳ இவை தவறாயின் – இவையெல்லாம் தவறு என்று கருதினால்
- ✳ எதிர்ப்பது என் வேலை – எதிர்ப்பது என் பணியாகும்.
- ✳ ஆக்கல், அளித்தல், அழித்தல் – உருவாக்குதல், அதனை உலகிற்குக் கொடுத்தல், அழித்தல்
- ✳ இம்மூன்றும் – இந்த மூன்று தொழில்களும்
- ✳ அவனும் யானுமே அறிந்தவை; – இறைவனும் நானும் மட்டுமே அறிந்தவை.
- ✳ அறிக! – அதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.

## பொருளுரை

கவிஞனாகிய நான் காலத்தைக் கணிப்பவன் ஆவேன்! மனதில் தோன்றும் செய்திகளை அனைவருக்கும் வெளிப்படுத்துவேன். நான், புவியில் உள்ளோர் புகழும் தெய்வம் ஆவேன். பொன்னை விட விலைமதிப்பற்றது என்னுடைய செல்வம் ஆகும். இவற்றைச் சரி என்று ஏற்றுக்கொண்டால், கவிதையாய்க் கூறுவது என் பணியாகும். தவறு என்றால், அவற்றை எதிர்ப்பது என் பணியாகும். உருவாக்குதல், அதனைக் கொடுத்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களையும் இறைவனும் நானும் மட்டுமே அறிவோம். அதனை நீங்கள் அறிந்து கொள்வீர்களாக!

## விரிவான விளக்கம்

காலத்தைக் கணிப்பவன் இறைவன் மட்டுமே! இங்குக் கவிஞர் காலத்தைத் தான் கணிப்பதாகக் கூறியுள்ளார். மேலும் ஆக்கல், அளித்தல், அழித்தல் இம்மூன்றையும் இறைவனும் தானும் மட்டுமே அறிவதாகக் கூறியுள்ளார். இறைவனும் தானும் ஒன்றே என்ற கருத்தை முன்வைக்கிறார். தனது கவித் திறமையையே, பொன்னைவிட உயர்ந்த செல்வம் என்று அவர் குறிப்பிடுகிறார்.

**பாடல்**

**செல்வர்தங் கையில் சிறைப்பட மாட்டேன்;**
**பதவி வாளுக்கும் பயப்பட மாட்டேன்;**
**பாசம் மிகுத்தேன்; பற்றுதல் மிகுத்தேன்!**
**ஆசை தருவன அனைத்தும் பற்றுவேன்!**
**உண்டா யின்பிறர் உண்ணத் தருவேன்;**
**இல்லா யின்எமர் இல்லம் தட்டுவேன்**
**வண்டா யெழுந்து மலர்களில் அமர்வேன்**
**வாய்ப்புறத் தேனை ஊர்ப்புறந் தருவேன்!**
**பண்டோர் கம்பன், பாரதி, தாசன்**
**சொல்லா தனசில சொல்லிட முனைவேன்!**

## சொல்லும் பொருளும்

- ✳ செல்வர் தம் கையில் சிறைப்பட மாட்டேன் – பொருட்செல்வமுடையசெல்வர்களிடத்தில்அடைக்கலம் ஆக மாட்டேன்.
- ✳ பதவி வாளுக்கும் பயப்பட மாட்டேன் – ஆட்சிஅதிகாரத்தில்உள்ளவர்களின்அச்சுறுத்தலுக்கும் அஞ்ச மாட்டேன்.
- ✳ பாசம் மிகுத்தேன்; பற்றுதல் மிகுத்தேன் – அனைத்து உயிர்களிடமும் அன்பையும், ஆசையையும் மிகுதியாக வைத்தேன்.
- ✳ ஆசை தருவன அனைத்தும் பற்றுவேன் – விருப்பத்தைத் தரக்கூடிய அனைத்தின் மீதும் பற்றுதல் வைப்பேன்.



SURA'S

* உண்டாயின் பிறர் உண்ணத் தருவேன் – என்னிடம் இருந்தால், பிறர் உண்பதற்கு உதவி செய்வேன்.
* இல்லாம யின்எமர் இல்லம் தட்டுவேன் – என்னிடம் இல்லாவிட்டால், என்னைச் சேர்ந்தோர் இல்லத்தை நாடுவேன்.
* வண்டாய் எழுந்து மலர்களில் அமர்வேன் – வண்டாக மாறி மலர்களில் அமர்வேன்.
* வாய்ப்புறத் தேனை ஊர்புறந் தருவேன் – மலர்களில் உறிஞ்சிய தேனை, ஊர் மக்களுக்குத் தருவேன்.
* பண்டோர் கம்பன், பாரதி, தாசன் – முன் வாழ்ந்த கவிஞர்களான கம்பன், பாரதியார், பாரதிதாசன் ஆகியோர்.
* சொல்லாதன சில சொல்லிட முனைவேன் – கூறாமல் விட்டுச் சென்ற உண்மைகளைக் கூற முயல்வேன்.

**பொருளுரை**

பணம் படைத்த செல்வர்களின் ஆசை வார்த்தைகளுக்கு மயங்கி, அவர்களிடம் தஞ்சம் புகமாட்டேன். ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களின் அச்சுறுத்தலுக்கும் அஞ்ச மாட்டேன். உலக உயிர்களிடத்துப் பாசமும் பற்றும் அதிகமாக வைத்தேன். விருப்பமுடைய பொருள்கள் அனைத்தின் மீதும் பற்றுதல் வைப்பேன். என்னிடம் பொருள் இருந்தால், பிறர் பசியை ஆற்றுவேன். இல்லாவிட்டால், என்னைச் சார்ந்தவர்களை நாடி, அவர்களிடம் பொருள் பெற்று, உதவி செய்வேன். மலர்களில் வண்டாக அமர்ந்து, அதில் உறிஞ்சும் தேனை, ஊர் மக்களுக்குக் கொடுப்பேன். முற்காலத்தில் வாழ்ந்த கம்பன், பாரதியார், பாரதிதாசன் ஆகியோர் கூறாமல் விட்டுச் சென்ற உண்மைகளை உலகத்தார்க்குச் சொல்வதற்கு முயற்சி செய்வேன்.

**விரிவான விளக்கம்**

யாருக்கும் பயப்பட மாட்டேன் என்று கூறும் கவிஞர், பாசத்திற்குக் கட்டுப்பட்டவர். தன்னிடம் இல்லாவிட்டாலும் பிறரிடம் பெற்றாவது இல்லாதவர்க்கு உதவி செய்யும் மனப்பான்மை கொண்டவர். ‘மலர்களிலே அமர்வேன்’ என்ற தொடரின் மூலம் இயற்கையில் ஒன்றிணைந்து, தாம் பெற்ற அனுபவத்தை உலக மக்களுக்குக் கூறுவேன் என்பதைச் சொல்ல வருகிறார்.

**பாடல்**

**புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக் காது**
**இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது!**
**வளமார் கவிகள் வாக்குமூ லங்கள்**
**இறந்த பின்னாலே எழுதுக தீர்ப்பு!**
**கல்லாய் மரமாய்க் காடுமே டாக**
**மாறா திருக்கயான் வனவிலங் கல்லன்!**

**சொல்லும் பொருளும்**

* புகழ்ந்தால் என் உடல் புல்லரிக்காது – என்னைப் பிறர் புகழ்ந்தால், என்னுடைய உடல் சிலிர்ப்படையாது.
* இகழ்ந்தால் என் மனம் இறந்து விடாது – பிறர் என்னை இகழ்ந்து பேசினால், என் உள்ளம் தளர்ந்து விடாது.
* வளமார் கவிகள் வாக்கு மூலங்கள் – என்னுடைய வளமான கவிதைகளே என்னுடைய வாக்கு மூலங்கள்
* இறந்த பின்னாலே எழுதுக தீர்ப்பு – நான் இறந்த பின்னர் தீர்ப்பை எழுதுங்கள்.
* கல்லாய் மரமாய்க் காடு மேடாக மாறாது இருக்க – கல்லாக, மரமாக காடு மேடாக மாறாமல் இருக்க
* யான் வனவிலங்கு அல்லன் – நான் காட்டில் வாழும் விலங்கு போன்றவன் அல்லன்.

**பொருளுரை**

என்னுடைய கவிதைகளையே வாக்குமூலங்களாக எடுத்துக் கொண்டு, நான் இறந்த பின்னர் என்னைப் பற்றித் தீர்ப்பை எழுதுங்கள். உயிருடன் இருக்கும்போது என்னைப் புகழ்வதாலோ அல்லது இகழ்வதாலோ நான் எந்தப் பாதிப்பும் அடையமாட்டேன். காட்டில் வாழும் விலங்கு போல் பகுத்தறியும் திறன் இல்லாதவன் அல்லன் நான்! எனவே, கல்லாக மரமாக காடு மேடாக உணர்வற்று என்னால் இருக்க முடியாது.

**விரிவான விளக்கம்**

"புகழ்ச்சியும் இகழ்ச்சியும் தன்னைப் பாதிக்காது!" என்று கூறுகின்ற கவிஞர், தம்மைப் பற்றி விமர்சனங்களைத் தான் இறந்த பின்னர் தன்னுடைய கவிதைகளை ஆராய்ந்து பார்த்தபின் கூற வேண்டும் என்கிறார். "கல்லாக மரமாக காடு மேடாக உணர்வற்று இருக்கத் தான் விலங்கு அல்லன்! என்றும் கூறுகிறார். கல்லும் மரமும் காடும் மேடும் போல உணர்வற்று இருக்க இயலாது" என்பதே கவிஞரின் கருத்து.

**பாடல்**

**மாற்றம் எனது மானிடத் தத்துவம்;**
**மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!**
**எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை**
**என்ப தறிந்து ஏகுமென் சாலை!**

**சொல்லும் பொருளும்**

- ✳ மாற்றம் எனது மானிடத் தத்துவம் – மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கிற மானிடத் தத்துவமே, எனது தத்துவமும் ஆகும்.
- ✳ மாறும் உலகின் மகத்துவம் அறிவேன் – நாளும் பொழுதும் மாறிக் கொண்டே இருக்கும் உலகத்தின் மேன்மையை நான் அறிவேன்.
- ✳ எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை – எவையெல்லாம் தீமை எவையெல்லாம் நன்மை
- ✳ என்பது அறிந்து ஏகுமென் சாலை – என்பதை அறிந்து செல்வதே என் வழியாகும்.

**பொருளுரை**

நாளும் மாற்றமடைந்து கொண்டிருக்கும் உலகின் தத்துவங்களை அறிவேன். நன்மை தருவன எவையெவை, தீமை தருவன எவையெவை என்பதை அறிந்து செய்வதே எனது வழியாகும்.

**விரிவான விளக்கம்**

"நன்மை தீமைகளை வேறுபாடு அறிந்து உலகின் நடைமுறைக்கு ஏற்ப அதன் தத்துவத்தை அறிந்து செல்வதே எனது வழியாகும்!" என்று கவிஞர் கூறுகிறார்.

**பாடல்**

**தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;**
**தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!**
**கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!**
**உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;**
**நானே தொடக்கம்; நானே முடிவு;**
**நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!**

**சொல்லும் பொருளும்**

- ✳ தலைவர் மாறுவர் – நாட்டை ஆட்சி செய்யும் தலைவர் மாறுவர்
- ✳ தர்பார் மாறும் – ஆட்சியதிகாரம் மாறும்
- ✳ தத்துவம் மட்டுமே அட்சயபாத்திரம் – மெய்யறிவு மட்டுமே எடுக்க எடுக்க குறையாத அட்சய பாத்திரம் போன்றது.
- ✳ கொள்வோர் கொள்க – இதனை ஏற்றுக்கொள்வோர் ஏற்றுக் கொள்க!
- ✳ குரைப்போர் குரைக்க – குறை கூறுவோர் குறை கூறட்டும்.

SURA'S

* உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது – உள்ளத்தில் உள்ள வார்த்தை என் உடலைப் பாதிக்காது.
* நானே தொடக்கம்; நானே முடிவு – நானே ஆரம்பமும் ஆவேன்; நானே இறுதியும் ஆவேன்.
* நான் உரைப்பதுதான் நாட்டின் சட்டம் – நான் கூறுவதே நாட்டின் சட்டமாகும்.

**பொருளுரை**

நாட்டை ஆட்சி செய்யும் தலைவர்கள் மாறுவார்கள். ஆட்சி அதிகாரமும் மாறும். மெய்யறிவு மட்டுமே நிலையானது. இதனை ஏற்றுக் கொள்பவர்கள் ஏற்றுக் கொள்ளட்டும். குறை கூறுவோர் குறை கூறட்டும். உள்ளத்தில் இருக்கும் வார்த்தை என் உடலைப் பாதிக்காது. நானே தொடக்கமும் இறுதியும் ஆவேன். நான் கூறுவதே நாட்டின் சட்டமாகும்.

**விரிவான விளக்கம்**

“நாட்டின் தலைவர்கள், ஆட்சி அதிகாரங்கள் மாறிக் கொண்டே இருக்கும். அதனால், விதிகளும் சட்டங்களும் மாறிக் கொண்டே இருக்கும். கவிஞன் கூறும் வார்த்தைகள் நிலையானவை. என்றும் மாறாதவை. இதனை ஏற்போர், மறுப்போர் யாராயிருப்பினும் அவர்களுடைய வார்த்தைகள் தன்னைப் பாதிக்காது!” என்று கூறும் கவிஞர், “தான் கூறுவதே நாட்டின் சட்டமாகும்!” என்கிறார்.

**அருஞ்சொற்பொருள்**

| | | | |
|---|---|---|---|
| இயம்புவது | – சொல்வது | எமர் | – எம் உறவினர் |
| ஆக்கல் | – உருவாக்குதல் | பண்டோர் | – பழமை காலத்து வாழ்ந்தவர், முன்னோர் |
| பற்று | – விருப்பம் | முனைவேன் | – முயல்வேன், முயற்சிப்பேன் |
| முனைதல் | – முயற்சித்தல் | ஏகுதல் | – செல்லுதல், செலுத்துதல் |
| தத்துவம் | – மெய்யறிவு | புல்லரித்தல் | – சிலிர்த்தல் |
| உரைப்பது | – கூறுவது | இகழ்தல் | – இழிவாகப் பேசுதல் |
| கருப்பட | – எண்ணத்தில் | வளமார் கவிதை | – சிறந்த கவிதை |
| உருப்பட | – அறியும்படி | அட்சய பாத்திரம் | – கேட்டதைக் கொடுக்கும் பாத்திரம் |
| புவி | – உலகம் | | |

**பிரித்தெழுதுக**

| | | | |
|---|---|---|---|
| யானோர் | – யான் + ஓர் | வண்டாயெழுந்து | – வண்டாய் + எழுந்து |
| நானோர் | – நான் + ஓர் | புறந்தருவேன் | – புறம் + தருவேன் |
| புகழுடை | – புகழ் + உடை | விலங்கல்லன் | – விலங்கு + அல்லன் |
| பொருளென் | – பொருள் + என் | என்பதறிந்து | – என்பது + அறிந்து |
| இயம்புவதென் | – இயம்புவது + என் | ஏகுமென் | – ஏகும் + என் |
| எதிர்ப்பதென் | – எதிர்ப்பது + என் | நானுரைப்பது | – நான் + உரைப்பது |
| தங்கையில் | – தம் + கையில் | மாறாதிருக்க | – மாறாது + இருக்க |

**இலக்கணக் குறிப்பு**

| | |
|---|---|
| பொன்னினும் | – உயர்வு சிறப்பும்மை |
| ஆக்கல், அளித்தல், அழித்தல், பற்றுதல் | – தொழிற்பெயர்கள் |
| அவனும் யானும் | – எண்ணும்மை |
| எழுந்து, அறிந்து | – வினையெச்சங்கள் |
| எழுதுக, கொள்க, குரைக்க | – வியங்கோள் வினைமுற்றுகள் |
| எவ்வெவை | – அடுக்குத் தொடர் |
| கொள்வோர், குரைப்போர் | – வினையாலணையும் பெயர்கள் |

**பகுபத உறுப்பிலக்கணம் தருக**

| | |
|---|---|
| **ஆக்கல் - ஆக்கு + அல்**<br>ஆக்கு - பகுதி<br>அல் - தொழிற்பெயர் விகுதி | **அளித்தல் - அளி + த் + த் + அல்**<br>அளி - பகுதி<br>த் - சந்தி<br>த் - இறந்தகால இடைநிலை<br>அல் - தொழிற்பெயர் விகுதி |
| **அழித்தல் - அழி + த் + த் + அல்**<br>அழி - பகுதி<br>த் - சந்தி<br>த் - இறந்தகால இடைநிலை<br>அல் - தொழிற்பெயர் விகுதி | **எழுந்து - எழு + த்(ந்) + த் + உ**<br>எழு - பகுதி<br>த் - சந்தி 'ந்' ஆனது விகாரம்<br>த் - இறந்தகால இடைநிலை<br>உ - வினையெச்ச விகுதி |
| **அறிந்து - அறி + த்(ந்) + த் + உ**<br>அறி - பகுதி<br>த் - சந்தி 'ந்' ஆனது விகாரம்<br>த் - இறந்தகால இடைநிலை<br>உ - வினையெச்ச விகுதி | **கொள்க - கொள் + க**<br>கொள் - பகுதி<br>க - வியங்கோள் வினைமுற்று விகுதி |

## கற்பவை கற்றபின்

**1. கவிதைகளை ஒப்பிட்டுக் கருத்துரைக்க.** பிடிஏ–1

**கவிச்சக்கரவர்த்தியும் கவியரசும்**

| | |
|---|---|
| நதியின் பிழையன்று; நறும்புனலின்மை; அற்றே<br>பதியின் பிழையன்று; பயந்து நம்மைப் புரந்தாள்<br>மதியின் பிழையன்று; மகன் பிழையன்று; மைந்த!<br>விதியின் பிழை; நீ இதற்கென்னை வெகுண்டதென்றான்<br>- கம்பன் | நதிவெள்ளம் காய்ந்து விட்டால்<br>நதிசெய்த குற்றம் இல்லை<br>விதிசெய்த குற்றம் அன்றி<br>வேறு - யாரம்மா!<br>- கண்ணதாசன் |

**கவிச்சக்கரவர்த்தியும் கவியரசும்**

இராமன் நாடாள முடியாமல் காட்டுக்குச் செல்ல நேரிடும் போது, பரதன் கோபம் கொள்கிறான். இதனை அறிந்த இராமன், "ஒரு நதி நீர் இல்லாமல் வறண்டு இருந்தால், அது நதியின் குற்றமா? இல்லையே. மழை பெய்யாததற்கு நதி மீது நாம் பிழை சொல்லலாமா? அதேபோல, தந்தையின் தவறு அன்று, தாயின் தவறு அன்று, மகனின் தவறு அன்று, இது விதியின் பிழை. நீ ஏன் கோபம் கொள்கிறாய்?" என்று கூறுகிறான். இது, கம்பராமாயணத்தில் வரும் கருத்து ஆகும். அதே கருத்தைத் தான் கவியரசும் முன் வைக்கிறார்.

நதியில் நீர் வற்றி விட்டால் அது நதி செய்த குற்றம் அன்று. மாறாக, மழை பெய்யாமல் 'விதி' செய்த குற்றமாகும் என ஒரே கருத்தைத் தான் இவ்விரு பாடல்களும் தெரிவிக்கின்றன.

**2. கண்ணதாசனின் கவியரங்கக் கவிதையைச் சுவைத்து, அது குறித்து உரையாற்றுக.**

கதிர் வெடித்துப் பிழம்பு விழ
கடல் குதித்துச் சூடாற்ற
முதுமை மிகு நிலப் பிறப்பின்
நின்னை யான் வணங்குவதும்
நீ என்னை வாழ்த்துவதும்
அன்னை மகற்கிடையே!

SURA'S

முதற் பிறப்புத் தோன்றி விட
நதி வருமுன் மணல் தரு முன்
நலம் வளர்த்த தமிழணங்கே
பதி மதுரைப் பெருவெளியில்
பாண்டியர் கை பார்த்தவளே!

அழகில்லை என்பதனால்
உன்னை வளர்த்து வரும்
ஒண் புகழ் சேர் தண் புலவர்
தன்னை வணங்குகின்றேன்
தமிழ்ப் புலவர் வாழியரோ!

**கபிலன்** : மனிதம், தனி மனிதனுடைய, சமுதாயத்தினுடைய வாழ்வியல் நெறியின் தெளிந்த சாரம்.

**சோழன்** : மனிதம் என்பதன் இலக்கணமானவன், நல்ல கவிஞன்.

**உத்தமன்** : கவிமனம் எதைச் சரியென்று கருதுகிறதோ அதைத் துணிந்து சொல்லும்.

**கபிலன்** : மனிதமும் கவித்துவமும் ஒன்றிணைந்த நிலையே இக்கவிதையின் சாரம்.

**சோழன்** : சூரியனின் கதிர்கள் தாக்கம் கடல் மீது விழ, இதனால் கடல் நீர் சூடேற.... பழமை மிகு நிலப்பிறப்பின் முதல் பிறப்பு தோன்றிவிட

**கபிலன்** : நதி வரும் முன்பே.... மணல் தரும் மூத்தகுடி, முன்பே... கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றியது நம் தமிழ்க்குடி.

**உத்தமன்** : தமிழ் வளர்த்தது தமிழ்ச் சங்கம். முச்சங்கம் வளர்ந்தது மதுரை மாநகரிலே...

**கபிலன்** : தமிழே! உன்னை நான் வணங்குவதும் என்னை நீ வாழ்த்துவதும் இது எதைக் குறிக்கிறது தெரியுமா? அன்னை மகனுக்கு இடையே வணங்குவதும் வாழ்த்துவதும் போல் அல்லவா இருக்கிறது? இந்தச்செயல்.

**சோழன்** : தமிழை வளர்க்கும் தண்டமிழ்ப் புலவர்களைப் போற்றுவோம்... வாழி... வாழி... என வாழ்த்துவோம்...

## திறன் அறிவோம் – புத்தக வினா

**பலவுள் தெரிக.**

பிடிஏ–6; அ.மா.வி 2019; அரை.தேர்வு 2023; ஜுலை–2024; மார்ச்–2026

1. **காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் எது?**

அ) இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது
ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்து விடாது
இ) இகழ்ந்தால் இறந்து விடாது என்மனம்
ஈ) என்மனம் இறந்து விடாது இகழ்ந்தால்

**விடை** **அ) இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது**

**குறுவினா**

4. **“கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!**
**உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது”**
**பாடல் அடிகளில் உள்ள மோனை, எதுகைச் சொற்களைக் கண்டறிந்து எழுதுக.**

**மோனை :** ஒரு பாடலின் சீர்களிலோ அடிகளிலோ முதல் எழுத்து ஒன்றுவது மோனை.

**எதுகை :** ஒரு பாடலின் சீர்களிலோ அடிகளிலோ இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை.

1. **அடிஎதுகை** - கொ<u>ள்</u>வோர், உ<u>ள்</u>வாய்
2. **பொழிப்பு மோனை** - <u>உ</u>ள்வாய் வார்த்தை <u>உ</u>டம்பு தொடாது
3. **முற்றுமோனை** - <u>கொ</u>ள்வோர் <u>கொ</u>ள்க; <u>கு</u>ரைப்போர் <u>கு</u>ரைக்க
4. **இணை எதுகை** - கொ<u>ள்</u>வோர் கொ<u>ள்</u>க

**நெடுவினா**

**2. காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.** பிடிஏ–5; செப்–2021

“கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!” - கண்ணதாசன்

**முன்னுரை :**

‘காலக்கணிதம்’ என்ற தலைப்பில் அமைந்த இக்கவிதை, கண்ணதாசன் கவிதைகள் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. கவிஞரின் கற்பனையில் உருவான இக்கவிதையில் இடம்பெற்றுள்ள நயங்களைக் காண்போம்.

**பாடலின் திரண்ட கருத்து : திரண்ட கருத்துப் பாடலின் முழுமையை உணர்த்தும்**

“கவிஞனாகிய நான் காலத்தைக் கணிப்பவன் ஆவேன். என் மனதில் தோன்றும் உண்மைகளை அனைவரும் அறியும்படிச் செய்வேன். புவியில் அனைவராலும் புகழப்படும் தெய்வம் நான். பொன்னைவிட விலை மதிப்பற்றது என்னுடைய கவிதைகள் என்ற செல்வம். இவையெல்லாம் சரியென்று கூறினால் அவற்றைக் கவிதையாகக் கூறுவது என் பணியாகும். தவறு என்று கூறினால் அவற்றை எதிர்ப்பது என் பணியாகும். உருவாக்குதல், அளித்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களையும் இறைவனும் நானும் மட்டுமே அறிவோம். அதை நீங்கள் அறிந்து கொள்வீர்களாக!”

**மையக் கருத்து : மனதைத் தொடுவது மையக் கருத்து**

காலத்தைக் கணிப்பதால் கவிஞன் காலத்தை வென்றவனாகிறான். அந்த வகையில், தத்துவங்களும் நம்பிக்கைகளும் கவிதையில் மிகுந்து(மிக்குக்) காணப்படுகின்றன.

## தொடைநயங்கள்

1. **மோனை நயம் : படைக்கு அழகு யானை - பாடலுக்கு அழகு மோனை**

செய்யுளில் அடிகளிலோ சீர்களிலோ முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது, ‘மோனை’ ஆகும்.

**சான்று :** கவிஞன் – காலம்
ஆக்கல் – அவனும்
மாற்றம் – மாறும்

2. **எதுகை நயம் : மயிலுக்கு அழகு தோகை - செய்யுளுக்கு அழகு எதுகை**

செய்யுளில் அடிகளிலோ சீர்களிலோ இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது, ‘எதுகை’ ஆகும்.

**சான்று :** இவைசரி – இவை தவறு
புகழ்ந்தால் – இகழ்ந்தால்

3. **முரண் : நாட்டுக்கு அரண் ; பாட்டுக்கு முரண்**

செய்யுளில், அடியிலோ சீரிலோ எதிரெதிர்ப் பொருள் தரும் வகையில் சொற்கள் அமைப்பது, ‘முரண்’ ஆகும்.

ஆக்கல் × அழித்தல்

4. **இயைபு : செய்யுளின் இயைபு - படிப்போர்க்கு வியப்பு**

செய்யுளில் கடைசி எழுத்தோ, அசையோ, சொல்லோ ஒன்றிவரத் தொடுப்பது, ‘இயைபு’ ஆகும்.

**சான்று :** மாட்டேன் – மாட்டேன், தருவேன் – தட்டுவேன்

SURA'S

**அணிநயம் : கோவிலுக்கு அழகு மணி - செய்யுளுக்கு அழகு அணி**

இப்பாடலில், உருவக அணி பயின்று வந்துள்ளது.
**சான்று :** 'கவிஞன் யானோர் காலக்கணிதம்'.

**சொல் நயம் : இராமனுக்கு அழகு வில் - செய்யுளுக்கு அழகு சொல்**
கவிஞனின் கற்பனை உலகம், வியப்புக்குரியது. புதிய சொல்லாட்சிகளையும் பொருளையும் கவிஞன் உருவாக்கிய வண்ணம் இருப்பான்.
**சான்று :** உருப்பட வைப்பேன், ஊர்ப்புறந் தருவேன்

**சுவை நயம் : புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்**
**பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!**
இவ்வடிகளில், பெருமிதச்சுவை நிறைந்துள்ளதைக் காணலாம்.

**சந்த நயம் : யானைக்குத் தந்தம்**
**பாடலுக்குச் சந்தம்**
சந்தம் தமிழுக்குச் சொந்தம் என்பதற்கு ஏற்ப, இப்பாடலில் எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் இடம் பெற்றுள்ளது. அகவலோசையுடன் இனிய சந்த நயமும் பெற்றுள்ளது.

**முடிவுரை :** ஆழமானக் கருத்துகளும் எதுகை, மோனை, இயைபு போன்ற நயங்களுடனும் உருவக அணியுடன் பாடல் அழகாக அமைந்துள்ளது.

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

1. **'கவிஞன் யானோர் காலக் கணிதம்' - எனத்தொடங்கும் கவிஞர் கண்ணதாசனின் கவிதையில் உங்களைக் கவர்ந்த மூன்று தொடர்களை எழுதிக் காரணத்தைக் குறிப்பிடுக.** [பிடிஏ–4]

| தொடர் | காரணம் |
|---|---|
| "செல்வர்தங் கையில் சிறைப்பட மாட்டேன்; பதவி வாளுக்கும் பயப்பட மாட்டேன்;" | "பணம் படைத்த செல்வர்களின் ஆசை வார்த்தைகளுக்கு மயங்கி, அவர்களின் அச்சுறுத்தலுக்கும் அஞ்சமாட்டேன்" என்று கவிஞர் கண்ணதாசன் கூறியுள்ளது பாரதியின் 'அச்சமில்லை! அச்சமில்லை' என்ற பாடலின் கருத்துகளோடு பொருந்திப் போகின்றன. |
| "எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை என்பதறிந்து ஏகுமென் சாலை!" | "நன்மை தருவன, தீமை தருவன எவையெவை என அறிந்து செல்வது எனது வழியாகும்" என்று கவிஞர் கூறியுள்ளது. மனிதர்கள் அனைவருக்குமே வழிகாட்டும் அறிவுரையாக உள்ளது. |
| "தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்; தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!" | நாட்டின் தலைவர்கள், ஆட்சி அதிகாரங்கள் மாறிக்கொண்டே இருக்கும். ஆனால் 'தத்துவம்' எனப்படும் மெய்யறிவு மட்டுமே நிலையானது என்று கவிஞர் கூறியுள்ளார். சான்றோர்கள் கூறிய மெய்யறிவை மட்டும் பின்பற்றினால் போதும் என்ற கருத்து அனைவருக்கும் ஏற்புடையதாகும். |

2. **''உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது'' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.** [அ.மா.வி 2019]
   1. **இடம் :** இப்பாடல் வரிகள் கண்ணதாசன் கவிதைத் தொகுப்பில் 'காலக்கணிதம்' என்னும் தலைப்பில் கவிஞர் கூறுவதாக அமைந்துள்ளது.
   2. **பொருள் விளக்கம் :** ஒருவர், தன் வாயால் புகழ்வதும் இகழ்வதும் நம் உடம்பின் மீது வந்து சேராது என்கிறார் கவிஞர்.

3. 'காலக்கணிதம்' கவிதையில் கவிஞர் கண்ணதாசன் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துகளுள் உங்களைக் கவர்ந்த ஐந்து கருத்துகளை எழுதுக. (ஏதேனும் ஐந்து) மே – 2022

1. "கவிஞனாகிய நான் ஒரு காலக்கணிதம்.
2. இந்தப் புவியில் நான் ஒரு புகழுடைய தெய்வம்.
3. செல்வர்கள் கையில் சிறைப்பட மாட்டேன்.
4. ஆட்சி அதிகாரத்திற்குப் பயப்பட மாட்டேன்.
5. ஆசைப்படும் பொருள்கள் அனைத்தின் மீதும் பற்றுதல் வைப்பேன்.
6. இல்லாதவர்களின் பசியை ஆற்றுவேன். என்னிடம் இல்லையென்றாலும் பிறரின் உதவியை நாடிப் பெற்றுத் தருவேன். மாற்றங்களுடைய உலகில் நானும் மாறுவேன். மாறாமலிருக்க நான் விலங்கு அல்லேன்!
7. நானே தொடக்கம்; நானே முடிவு.
8. நான் கூறுவதுதான் நாட்டின் சட்டம்".

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. **கீழ்க்காண்பவற்றுள் கண்ணதாசனுக்குச் சாகித்திய அகாதெமி விருது பெற்றுத் தந்த நூல் ..................**
   **அ) சேரமான் காதலி** ஆ) ஆட்டனத்தி ஆதிமந்தி
   இ) மாங்கனி ஈ) வேலங்குடி திருவிழா
2. **கண்ணதாசன் தன் திரைப்படப் பாடல்கள் வழியாக எளிய முறையில் ..................-ஐ மக்களிடையே கொண்டு சேர்த்தார்.**
   அ) மானுடவியல் ஆ) வாழ்வியல் **இ) மெய்யியல்** ஈ) பொருளியல்
3. **"புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்" என்று கூறிய கவிஞர் ..................**
   அ) பாரதிதாசன் ஆ) வண்ணதாசன் இ) வாணிதாசன் **ஈ) கண்ணதாசன்**
4. **கவிஞர் கண்ணதாசன் அட்சய பாத்திரம் என்று கூறுவது .................. ஆகும்.**
   **அ) தத்துவம்** ஆ) வரலாறு இ) இலக்கியம் ஈ) கணிதம்
5. **'முத்தையா' என்பது எந்தக் கவிஞரின் இயற்பெயராகும்?**
   அ) பாரதிதாசன் **ஆ) கண்ணதாசன்** இ) சுரதா ஈ) தாராபாரதி
6. **'காலக்கணிதம்' என்னும், கவிதை இடம் பெற்றுள்ள நூல் ............**
   **அ) கண்ணதாசன் கவிதைகள்** ஆ) சேரமான் காதலி
   இ) மாங்கனி ஈ) இயேசு காவியம்
7. **கண்ணதாசன் பிறந்த மாவட்டம் ................**
   அ) இராமநாதபுரம் **ஆ) சிவகங்கை** இ) கன்னியாகுமரி ஈ) தஞ்சாவூர்
8. **கவிஞர் கண்ணதாசன் பிறந்த ஆண்டு ..................**
   அ) 1917 ஆ) 1937 **இ) 1927** ஈ) 1907
9. **கண்ணதாசனின் முதல் திரையிசைப் பாடல் ....................**
   அ) ஆறுமனமே ஆறு ஆ) பரமசிவன் கழுத்தில்
   இ) மயக்கமா கலக்கமா **ஈ) கலங்காதிரு மனமே**
10. **தமிழக அரசின் அரசவைக் கவிஞராக இருந்தவர் .........**
   **அ) கண்ணதாசன்** ஆ) பாரதிதாசன் இ) முடியரசன் ஈ) பாரதியார்

SURA'S

11. 'பற்றுதல்' இச்சொல்லின் வேர்ச்சொல்லைத் தேர்க.

அ) பற்றி ஆ) பறி **இ) பற்று** ஈ) பற்றினான்

12. **பொருத்துக.**

அ) முத்தையா - 1. சாகித்திய விருதுபெற்ற நூல்
ஆ) சேரமான் காதலி - 2. பிறந்த ஊர்
இ) கலங்காதிரு மனமே - 3. இயற்பெயர்
ஈ) சிவகங்கை - 4. முதல் பாடல்

அ) 3, 1, 2, 4 **ஆ) 3, 1, 4, 2** இ) 4, 3, 2, 1 ஈ) 1, 2, 3, 4

13. **பதவி வாளுக்கும் பயப்பட மாட்டேன்;**
**பாசம் மிகுத்தேன்; பற்றுதல் மிகுத்தேன்; இவ்வரிகளில் இடம் பெற்ற நயம் .........**

அ) சீர் மோனை ஆ) அடி இயைபு இ) அடி மோனை **ஈ) இவை அனைத்தும்**

14. **சரியான கூற்றைத் தேர்க... கண்ணதாசன்**

அ) இவரின் சாகித்திய அகாதெமி பரிசுபெற்ற நூல் - சேரமான் காதலி
ஆ) இயற்பெயர் - முத்தையா
இ) சிவகங்கை மாவட்டம் சிறுகூடல் பட்டியில் பிறந்தவர்.
ஈ) தமிழக அரசின் அரசவைக் கவிஞராகச் சிறப்பிக்கப்பட்டார்.

1) அ, ஆ மட்டும் 2) இ மட்டும் 3) அ, ஈ மட்டும் **4) அனைத்தும் சரி**

15. **பின்வருவனவற்றுள் தொழிற்பெயர் எது?**

அ) ஆக்கு ஆ) ஆக்கி **இ) ஆக்கல்** ஈ) ஆக்கினர்

## குறுவினா

1. **கண்ணதாசன் கூறும் மூன்று தொழில்கள் யாவை?**
ஆக்கல், அளித்தல், அழித்தல் என்ற மூன்று தொழில்களைக் கண்ணதாசன் கூறுகிறார்.

2. **'காலக்கணிதம்' என்ற கவிதையில் கண்ணதாசன் குறிப்பிட்டுள்ள கவிஞர்கள் யாவர்?**
'காலக்கணிதம்' என்ற கவிதையில் கம்பன், பாரதியார், பாரதிதாசன் ஆகிய கவிஞர்களை கண்ணதாசன் குறிப்பிட்டுள்ளார்.

3. **தம்முடைய பாதை எவ்வாறு செல்வதாகக் கவிஞர் கண்ணதாசன் கூறுகிறார்?**
எவையெல்லாம் தீமை தருவன; எவையெல்லாம் நன்மை தருவன என்பதை அறிந்து தம்முடைய பாதை செல்வதாகக் கவிஞர் கண்ணதாசன் கூறுகிறார்.

4. **கவிஞர் கண்ணதாசனின் பன்முகத் திறமைகளை எழுதுக.**
   1. திரைப்படப் பாடலாசிரியர்.
   2. சிறந்த கவியரங்கக் கவிஞர்.
   3. சிறந்த பேச்சாளர்.
   4. இலக்கிய உலகில் பல புதினங்களைப் படைத்த படைப்பாளி.

## சிறுவினா

1. **மாற்றங்கள் குறித்துக் கவிஞர் கண்ணதாசன் கூறியவற்றைத் தொகுத்து எழுதுக.**
   1. மாற்றம் என்பது மானிடத் தத்துவம் ஆகும். மாறுகின்ற உலகத்தின் மேன்மையை தான் அறிந்திருப்பதால் நன்மை, தீமைகளை அறிந்து அந்தப் பாதையில் செல்வதாகக் கூறுகிறார்.
   2. ஆட்சியாளர் மாறுவார், ஆட்சி அதிகாரங்கள் மாறும். மாறாதிருப்பது தத்துவம் மட்டுமே.

SURA'S

3. இந்த உலக இயல்பிற்கேற்பத் தாமும் மாறுவதாகக் கூறும் கவிஞர், மாறாமலிருக்க தான் விலங்கு அல்லன்! என்று கூறுகிறார்.

2. **பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு ஏற்ற விடையளிக்கவும்.**

"புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக் காது
இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது!
வளமார் கவிகள் வாக்குமூ லங்கள்
இறந்த பின்னாலே எழுதுக தீர்ப்பு!"

**அ. இப்பாடலடிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் பெயர் என்ன?**

இப்பாடலடிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் பெயர், **காலக்கணிதம்** ஆகும்.

**ஆ. இக்கவிதையை இயற்றிய கவிஞர் யார்?**

இக்கவிதையை இயற்றியவர், கவிஞர் கண்ணதாசன்.

**இ. இக்கவிதையில் 'வாக்குமூலங்கள்' என்று கவிஞர் எதனைக் குறிப்பிடுகிறார்?**

இக்கவிதையில் 'வாக்குமூலங்கள்' என்று கவிஞர், தமது வளம் நிறைந்த கவிதைகளைக் குறிப்பிடுகிறார்.

**ஈ. இக்கவிதையில் 'தீர்ப்பு' என்று கவிஞர் எதனைக் குறிப்பிடுகிறார்?**

இக்கவிதையில், 'தீர்ப்பு' என்று கவிஞர் விமர்சனத்தைக் குறிப்பிடுகிறார்.

**உ. பாடலின் மையக்கருத்து யாது?**

**பாடலின் மையக்கருத்து :** புகழ்ச்சி, இகழ்ச்சி என்ற எதுவுமே தன்னைப் பாதிக்காது என்று கவிஞர் கூறுகிறார்.

3. **'பண்டோர் கம்பன், பாரதி, தாசன்
சொல்லா தனசில சொல்லிட முனைவேன்!' இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம் :** கவியரசு கண்ணதாசன் இயற்றிய காலக்கணிதம் என்னும் கவிதையில் இவ்வரிகள் இடம்பெற்றுள்ளது.

**பொருள் விளக்கம் :** முன் வாழ்ந்த கவிஞர்களான கம்பர், பாரதியார், பாரதிதாசன் ஆகியோர் கூறாமல் விட்டுச் சென்ற உண்மைகளைக் கூற முயல்வேன் என்கிறார். இவ்வடியில் கவிஞனுக்கே உரிய செருக்கும் தன்னம்பிக்கையும் வெளிப்படுகிறது.

☆ ☆ ☆

SURA'S

# இயல் 1

# புயலிலே ஒரு தோணி

**விரிவானம்**

– ப. சிங்காரம்

## கரு



✳ இயற்கையின் அசைவுகள் நமக்கு இனிமையும் மகிழ்வையும் தருகிறது.

✳ ஆனால், இயற்கைச் சீற்றம் கொண்டால் நாம் துன்பமுற்றுத் தோற்றுப் போகிறோம்.

✳ புயலின் சீற்றத்தையும் அதில் சிக்கி, பின் மீண்ட கதையை இப்புதினம் விவரிக்கிறது.

## ஆசிரியர் குறிப்பு



**ஆசிரியர்** : ப. சிங்காரம்

**காலம்** : 12.08.1920 - 30-12-1997 (77)

**ஊர்** : சிங்கம்புணரி (சிவகங்கை மாவட்டம்)

**தொழில்** : எழுத்தாளர், ஆசிரியர், ஆடைத் தொழிலதிபர்

**படைப்புகள்** : புயலிலே ஒரு தோணி, கடலுக்கு அப்பால்

வேலைக்காக இந்தோனேசியா சென்றார். மீண்டும் இந்தியா வந்து, **'தினத்தந்தி'** நாளிதழில் பணியாற்றினார். இவர், அன்றைய சூழலில் அவருடைய சேமிப்பான ஏழரை லட்சம் ரூபாயை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக வழங்கினார்.

**கூடுதல் செய்தி** : இவர் 1950இல், இந்தியா திரும்பியவுடன் 'கடலுக்கு அப்பால்' என்கிற புதினத்தை எழுதினார். இப்புதினம் கலைமகள் பதிப்பகத்தின் முதல் பரிசை வென்றது. இவரது **'புயலிலே ஒரு தோணி'** என்ற கதையைப் பல திரைப்படத் தயாரிப்பாளர்கள் படமாக எடுக்க விரும்பினர். ஆனால், புதினத்தில் வருவது போன்று திரையில் காட்டுவது இயலாது என்ற காரணத்தால் அதைத் தவிர்த்ததாகக் கூறினர்.

## பாடப்பகுதி

இப்புதினத்தில், 'கடற்கூத்து' என்னும் அத்தியாயத்தின் சுருக்கப்பட்ட பகுதி, பாடப் பகுதியாக அமைந்துள்ளது.

## புதினத்தில் அமைந்துள்ள சொற்களும் பொருளும்

✳ கப்பித்தான் – தலைமை மாலுமி(கேப்டன்)
✳ தொங்கான் – கப்பல்
✳ சிப்பம் – கட்டு
✳ பவ்வம் – கடல்
✳ பறவை மீன் – பறக்கும் மீன்
✳ அவுலியா மீன் – கடற்பசு
✳ பிலவான் – இந்தோனேசியாவில் உள்ள ஓர் இடம்
✳ தோணி – தோண்டப்பட்ட மரக்கலம், ஓடம், கப்பல், மிதவை
✳ சீற்றம் – கோபம்
✳ எத்தனிக்கும் – ஆயத்தமாகும், தயாராகும்
✳ பட்டறிவு – அனுபவம்
✳ புலம் பெயர்ந்த – தன் சொந்த நாட்டிலிருந்து வேறுநாட்டிற்குச் சென்று வாழ்தல்
✳ பொதிகள் – மூட்டை
✳ உறுத்தல் – நெருடல்
✳ கெக்கலித்தன – பெருமகிழ்ச்சி

SURA'S

* வளியுடன் – காற்றுடன்
* ரம்பம் – அறுக்கும் கருவி
* மரமரப்பு – குளிரில் மரத்துப்போதல்
* மூடை – மூட்டை
* முற்றாகத் தெளிச்சி – முழுவதுமாகத் தெளிவு
* பினாங்கு – மலேசியாவின் வடமேற்குக் கடற்கரையில் ஒரு தீவு
* பிரயாணிகள் – பயணிகள்
* சுமத்திரா – இந்தோனேசியாவின் மிகப் பெரிய தீவு
* தமிரோ – தமிழோ!
* மஸ்தா – தலைவர்.

**நூற்குறிப்பு**

'புயலிலே ஒரு தோணி', புலம்பெயர்ந்த தமிழர்கள் பற்றிய முதல் புதினமாகும். இந்தோனேசியா பகுதிகளில் நிகழ்வதாக உள்ள கற்பனைப் படைப்பாகும்.

## கற்பவை கற்றபின்

**1. கடலில் புயலின் தாக்கத்தினால் ஏற்பட்ட பதற்றத்தை வெளிப்படுத்த அடுக்குத் தொடர்களும் வருணனைகளும் எவ்வாறெல்லாம் பயன்பட்டுள்ளன என்பது குறித்து வகுப்பில் பேசுக. (விழுவிழுந்து, நொறுநொறு)**

**புயலின் தொடக்கம் :** மேகப் பொதிகள் பரந்து திரண்டு ஒன்றிக் கும்மிருட்டாய் இறுகி நின்றன. அலைகள் எண்ணெய் பூசியவைபோல் மொழுமொழுவென நெளிந்தன. அலைகள் எண்ணெய் பூசியவை போல – உவமை நயம் கையாளப்பட்டுள்ளது.

மொழு மொழுவென – இதில் மொழு மொழு என்பது அடுக்குத் தொடர் ஆகும்.

**சூறாவளியும் மழையும் :**

கிடுகிடுக்கும் இடி முழக்கத்துடன், மின்னல் கீற்றுகள் வானைப் பிளந்தன. வானம் உடைந்து கொட்டு கொட்டென்று வெள்ளம் கொட்டியது. சூறாவளி மாரியும் காற்றும் கூடிக்கலந்து ஆடிக் குதித்துக் கெக்கலித்தன. தொங்கான், அப்படியும் இப்படியுமாய்த் தாவிக்குதித்து விழுந்து திணறித் தத்தளிக்கிறது. எலும்புகள் முறிவது போல் நொறு நொறு நொறுங்கல் ஒலி, தலைக்குமேல் கடல். அலைகள் – மலைத்தொடர் போன்ற அலைகள் மோதித்தாக்குகின்றன.

| | |
|---|---|
| கிடுகிடுக்கும், நொறுநொறு | – இரட்டைக் கிளவிகள் |
| கொட்டு கொட்டென்று | – இதில் கொட்டு கொட்டு அடுக்குத்தொடர் ஆகும். |
| ஆடிக்குதித்துக் கெக்கலித்தன | – வர்ணனை |
| எலும்புகள் முறிவதுபோல நொறுங்கல் ஒலி | – உவமை நயம் பயின்று வந்துள்ளது. |
| மலைத்தொடர் போன்ற அலைகள் | – உவமைநயம் பயின்று வந்துள்ளது. |

வானும் கடலும் வளியும் மழையும் மீண்டும் ஒன்று கூடிக் கொந்தளிக்கின்றன. வானம் பிளந்து தீ கக்குகிறது. மழை வெள்ளம் கொட்டுகிறது. வளி, முட்டிப் புரட்டுகிறது. கடல், வெறிக்கூத்தாடுகிறது. தொங்கான் நடுநடுங்கித் தாவித் தாவிக் குதிகுதித்து விழுவிழுந்து நொறுநொறு நொறுங்கியது.

| | | |
|---|---|---|
| நடுநடுங்கி | – | அடுக்குத்தொடர் |
| தாவித் தாவி | – | அடுக்குத்தொடர் |
| குதிகுதித்து | – | அடுக்குத்தொடர் |
| விழுவிழுந்து | – | அடுக்குத்தொடர் |
| நொறுநொறு | – | இரட்டைக்கிளவி |

இப்புதினத்தில் அடுக்குத்தொடர், உவமைநயம், இரட்டைக்கிளவி, புயலின் கோரத்தாண்டவத்தை வருணிக்கும் சொற்றொடர்ப் போன்றவற்றால், நம்மை அந்தச் சூழ்நிலைக்கே அழைத்துச் செல்கிறார் ஆசிரியர்.

SURAS

2. **நீங்கள் எதிர்கொண்ட இயற்கை இடர் குறித்து விவரித்து எழுதி வகுப்பில் காட்சிப்படுத்துக.**
(மழை, வெள்ளம், புயல், வறட்சி) **விடை : வெள்ளம்** **கா.தேர்வு 2019**

எனக்கு மட்டுமல்ல, சென்னைவாசிகள் பலருக்கும் பீதியான சூழ்நிலையைத் தொடங்கி வைத்த நாள். தீபாவளியின் போதும், அதன் பின்னரும் மழை கொட்டத் தொடங்கியது. முழங்கால் அளவு தண்ணீரில் நடந்து சென்று வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொண்டு, குண்டும், குழியுமான சாலைகளைக் கடந்தும், கழிவு நீர்த் துவாரங்களிலிருந்து தப்பியும் வீடு வந்து சேர்வது சென்னைவாசிகளுக்குப் பழகிப்போன ஒன்றாகிவிட்டது.

அதே போன்று ஒரு மழையாகத்தான் இதுவும் இருக்கும் என்று சாதாரணமாக நினைத்தது தவறாகிப்போனது. சென்னையின் மையப் பகுதியில் வசிப்பதால் பாதுகாப்பைப் பற்றி யோசித்ததே இல்லை. வழக்கமான அன்றைய பணிகளை முடித்து விட்டு, தொலைக்காட்சியில் கண்களை ஓட்டினேன். மழைச் செய்திகளாக வந்து கொண்டிருந்தன. புறநகர்ப் பகுதிகளில் மழைநீர் தேங்கியதால் ஏற்பட்ட சேதச்செய்திகளைப் பார்த்தேன். சில அலைவரிசைகளில் மழை வெள்ளம் பற்றிய விவாதங்கள்... ஓடின. நானும் என் பங்கிற்குக் 'கொஞ்சம் கூட யோசிக்காமல் தாழ்வான இடங்களிலும், குளம், ஏரிப் பகுதிகளில் போய் ஏன் வீடு வாங்கிவிட்டு இப்போது புலம்புகிறார்கள்..' என்று எனக்குள் யோசித்துக் கொண்டேன். மறுநாள், எனக்கும் இதே போன்று ஒரு ஆபத்துக் காத்திருந்ததை உணராதவனாகப் பணிச்சுமை அசதியில் அன்று சீக்கிரமே தூங்கப் போய்விட்டேன்.

காலை மணி ஆறு. தூக்கம் கலையாத அந்த நேரத்தில், திடீரென என் அப்பா கூப்பிடும் சத்தம். கூடவே, வெளியே சாலையில் சைரன் வாகனங்களின் சத்தம். "தண்ணீ! தண்ணீ...!" என்று சத்தமிட்டனர். அப்போது "வீட்டுக்குள் தண்ணீ வந்திடுச்சு..." என்கிற அப்பாவின் பதட்டமான குரலைக் கேட்டு அவசரமாக எழுந்து வெளியே வந்து பார்த்தால், எங்கள் வீட்டை ஒட்டிய சாலைக்குள் 'திபு திபு' வென்று வெள்ளம் போல நீர் வந்து கொண்டிருந்தது. அப்போது மழை எதுவும் இல்லாததால் எங்கிருந்து இவ்வளவு தண்ணீர் வருகிறது? என்று குழப்பத்தில் சாலைக்கு ஓடினேன். முட்டிவரை வெள்ளம். என்னைப்போல் பலர் அங்கே பக்கத்துச் சாலைகளில் இருந்து வரும் தண்ணீரைப் பார்த்து ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தார்கள். 'மளமள'வென எங்கள் வீடுகளுக்குள் தண்ணீர் வராமல் இருக்கத் தடுப்புகள் வைத்தோம்...

ஆற்றிலிருந்து வெகுதூரத்தில் நாங்கள் இருந்தாலும் முதல்முறையாக எங்களையும் புறநகர் வாசிகளாக்கியது வெள்ளம் எனப் புரிந்து கொண்டேன். உடனடியாக மின்சாரம் நிறுத்தப்பட்டது. பின்னர், தொலைபேசி இணைப்புகளும் ஒன்றன் பின் ஒன்றாகச் செயல் இழந்தன. உணவு, உடை, உறைவிடம் இல்லாமல் தவித்தோம். ஆனால், பல நல்ல உள்ளங்களால் உயிர் பிழைத்து, வாழ்ந்தோம் என்பது குறிப்பிடத்தக்கது.

## திறன் அறிவோம் - புத்தக வினா

### நெடுவினா

3. **புயலிலே ஒரு தோணி கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக் குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?**

**பிடிஏ-1; செப்.-2020; முதல் தி.தேர்வு & கா.தேர்வு 2024**

**முன்னுரை:**

ப.சிங்காரம், புலம்பெயர்ந்த தமிழர்களில் ஒருவர். இவர், இந்தோனேசியாவில் இருந்த போது இரண்டாம் உலகப் போர் மூண்டது. அப்போது, கடல் வழியாகப் பலர் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் குடியேறினர். அவர்களுள் இவரும் ஒருவர். கடலில் சென்ற நேரடி அனுபவங்களோடு கற்பனையும் கலந்த கதைதான், 'புயலிலே ஒரு தோணி' என்னும் புதினமாகும். இப்புதினத்தில் உள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும்பாட்டை விவரிப்பதைக் காண்போம்.

**வருணனை:**

நேரில் பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தும்படி அழகுற விவரித்துக் கூறுதல் வருணனை ஆகும்.

SURA'S

1. கடலில் கப்பல் சென்று கொண்டிருந்த போது,
2. கொளுத்திக் கொண்டிருந்த வெயில் இமை நேரத்தில் மறைந்துவிட்டது.
3. மேகப் பொதிகள் பரந்து திரண்டு ஒன்றாகக் கும்மிருட்டாய்ச் சேர்ந்து நின்றன.
4. அலைகள் எண்ணெய் பூசியவை போல் மொழுமொழுவென நெளிந்தன.
5. காற்றையே காணோம் ஒரே இறுக்கம்.
6. தொங்கான் அப்படியும் இப்படியுமாய்த் தாவிக்குதித்து விழுந்து திணறித் தத்தளித்தது.
7. வானம் பிளந்து தீ கக்கியது.
8. மழை வெள்ளம் கொட்டுகிறது.
9. தொங்கான், தாவி விழுந்து சுழல்கிறது. மூழ்கி நீந்துகிறது. தாவி நீந்துகிறது.
10. மூடைகள், சிப்பங்கள் நீந்தோடி மறைகின்றன.
11. அலைகள் ஒன்றன்பின் ஒன்றாய், முந்தியதைத் தொடர்ந்த பிந்தியதாய் வந்து மொத்து மொத்தென்று கப்பலை மோதின.
12. பறவை – மீன்கள் இருபுறமும் கூட்டம் கூட்டமாய்ப் பறந்து விளையாடின.

**அடுக்குத் தொடர்கள்:**

அசையை நிறைவு செய்யும் பொருட்டு ஒரு சொல் இரண்டு, மூன்று அல்லது நான்கு முறை அடுக்கி வருவது அடுக்குத் தொடர் எனப்படும். பிரித்தால் பொருள் தருவது அடுக்குத் தொடர்.

| | | |
|---|---|---|
| எங்கெங்கோ | ஓடி வாருங்கள், ஓடி வாருங்கள்! | நடுநடுங்கி, விழுவிழுந்து |
| இருட்டிருட்டு, தாவித் தாவி | குதி குதித்து | கூட்டம் கூட்டமாய்ப் பறந்து விளையாடின. |

**ஒலிக்குறிப்புச் சொற்கள்:** ஒலி அல்லது ஓசையைப் போன்ற சொற்களைக் குறிப்பது ஒலிக்குறிப்பு ஆகும். ஒருவரின் செயல் ஏற்படுத்தும் சத்தத்தை அல்லது ஒன்றின் சத்தத்தை மனம் உணரும் வகையில் குறிக்கும் சொல்.

| | | | |
|---|---|---|---|
| கிடுகிடுக்கும் | நொறு நொறு | மொத்த மொத்தென்று | கெக்கலித்தன |
| சிலு சிலு | கிறு கிறு | திடுமென | நொய்ங், புய்ங் நொய்ங், புய்ங் நொய்ங், புய்ங் |

**முடிவுரை:** 'புயலிலே ஒரு தோணி' கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில் தோணி பாட்டை அப்படியே கண்முன் நிறுத்திக் காட்டுகிறது. மேலும், நாமே அக்கப்பலில் பயணம் செய்ததைப் போன்ற ஓர் உணர்வை அவை கொடுக்கின்றன.

## அரசுத் தேர்வு வினா

1. **'புயலிலே ஒரு தோணி' கதைப்பகுதியில் இடம்பெறும் கடற்பயண நிகழ்வுகளை விவரித்து எழுதுக.**

**ஏப்ரல்–2023; மார்ச் 2026**

**முன்னுரை :** இயற்கையின் அசைவுகள் அனைத்தும் அழகிய நாட்டியமாய் அமையும்போது இனிமையும் மகிழ்வும் ஒருங்கே பெறுகிறோம். அதே இயற்கையின் அசைவு சீற்றமாய், ஊழித் தாண்டவமாக மாறுகையில் எதிர் நிற்க இயலாது. தோற்றுத்தான் போகிறோம். 'புயலிலே ஒரு தோணி' கதைப் பகுதியில் இடம்பெற்றுள்ள கடற்பயண நிகழ்வுகளைக் காண்போம்.

**புயல் தொடங்கியது :** கொளுத்திக் கொண்டிருந்த வெயில், இமை நேரத்தில் மறைந்துவிட்டது. பாண்டியன் எழுந்து போய், அண்ணாந்து பார்த்தான். மேகங்கள், கும்மிருட்டாய் இறுகி நின்றன.

ஒரே இறுக்கம். எதிர்க்கோடியில் வானையும் கடலையும் மாறிமாறிப் பார்த்தவாறு கப்பித்தானுடன் பரப்பரப்பாகப் பேசிக் கொண்டிருந்த மாலுமிகள், திடுமெனப் பாய்மரத்தை நோக்கிக் கயிறுகளை இறுக்குகிறார்கள். விவரிக்க இயலாத ஓர் உறுத்தல் ஒவ்வோர் உணர்விலும்பட்டது. அனைவரும் மிரண்டு விழித்தனர்.

**வானம் தீ கக்கியது :** கிடுகிடுக்கும் இடி முழக்கத்துடன் மின்னல் கீற்றுகள் வானைப் பிளந்தன. அதே சமயம், மதிப்பிட முடியாத விரைவும் பளுவும் மோதல் தொங்கானையும் அதில் இருந்தவற்றையும் உலுக்கியது. வானம் உடைந்து வெள்ளம் பொங்கியது. சூறாவளியும் மழையும் காற்றும் கூடிக்கலந்து ஆடிக் குதித்தன. தொங்கான் அப்படியும் இப்படியுமாகத் திணறித் தத்தளித்தது. திடீரென அமைதி பாய்ந்து வந்து மிரட்டியது. வானும் கடலும் பிரிந்து தனித்துத் தென்பட்டன. ஓடி வாருங்கள்! இங்கே ஓடிவாருங்கள்! என்று கப்பித்தான் கத்துகிறான். பாண்டியன் எழுந்தான். இடுக்குகளில் முடங்கிக் கிடந்த உருவங்கள் தலை தூக்கின. தட்டுத்தடுமாறி அனைவரும் நடந்து ஓடினர். வானும் கடலும் காற்றும் மழையும் மீண்டும் ஒன்று கூடிக் கொந்தளிக்கின்றன. வானம் தீ கக்கியது.

**புயலுக்குப்பின் :** என்னயிது! சூரிய வெளிச்சம்! சூரியன் சூரியன் சூரியன் – தொங்கானில் நீர் நெளிகிறது. பாய்மரம் ஒடிந்து கிடக்கிறது. பொத்துக் கொப்புளிக்கும் பவ்வ நீரை மாலுமிகள் இறைத்து ஊற்றுகின்றனர். ஓட்டையை அடைக்கிறார்கள். ஆப்பு அடிக்கிறார்கள். மரம் வெட்டுகிறார்கள், செதுக்குகிறார்கள். தொங்கானின் இருபுறமும், பின்னேயும் தேயிலைப் பெட்டிகளும் புகையிலைச் சிப்பங்களும் மிதந்து வருகின்றன.

**வெளிச்சம் வந்தது :** இரவில் மேல் தட்டுக்கு வந்து கப்பித்தான் வானையும் கடலையும் ஒரு சுற்றுப் பார்த்துவிட்டுத் தலையைச் சொறியலானான். பாண்டியன் நெருங்கிச் சென்று நிலவரத்தைக் கேட்டான். கப்பித்தான் சீனமும் மலாயும் கலந்த மொழியில் சொன்னான். “இனிமேல் பயமில்லை. இரண்டு நாளில் கரையைப் பார்க்கலாம்” அன்றிரவு யாரும் உண்ணவில்லை; பேச்சாடவில்லை. மறுநாள் காலையில் சூரியன் உதித்தான். கடல் அலைகள் ஒன்றன்பின் ஒன்றாய், முந்தியதைத் தொடர்ந்த பிந்தியதாய் வந்து மொத்து மொத்தென்று தொங்கானை மோதின. தொங்கான் மிதந்து சென்றது, கடலின் இழுவைக் கிணங்கி.

**கரை தெரிந்தது :** கடற்கூத்துக்குப்பின் ஐந்தாம் நாள் மாலையில், வானோடு வானாய்க் கடலோடு கடலாய் மரப்பச்சை தெரிவது போலிருந்தது. சுமார் அரைமணி நேரத்துக்குப் பின், மீன்பிடி படகு விளக்குகள் தென்பட்டன.

**முடிவுரை :** புலம்பெயர்ந்த தமிழர்களில் ஒருவர் ப.சிங்காரம். அவர் இந்தோனேசியாவில் இருந்தபோது இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்தது. கடற்பயணத்தில் கண்ட காட்சிகளும், அதன் தொடர்ச்சியாக நடைபெறும் நிகழ்வுகளும்தான் ‘புயலிலே ஒரு தோணி’யாக இடம் பெற்றுள்ளன.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக.

1. **‘புயலிலே ஒரு தோணி’ என்பது எவ்வகை இலக்கியம்?**
   அ) கவிதை  **ஆ) புதினம்**  இ) கட்டுரை  ஈ) சிறுகதை

2. **‘புயலிலே ஒரு தோணி’ என்பது..................**
   1) கட்டடத் தொழிலாளர்கள் பற்றிய முதல் புதினம்
   2) தேயிலைத் தொழிலாளர்கள் பற்றிய முதல் புதினம்
   3) புலம் பெயர்ந்த தமிழர்களைப் பற்றிய முதல் புதினம்
   4) கல்வி வளர்ச்சிக்கான முதல் புதினம்
   அ) 3, 4  ஆ) 2 மட்டும்  **இ) 3 மட்டும்**  ஈ) அனைத்தும்

3. **‘புயலிலே ஒரு தோணி’ – நூலாசிரியர் .................**
   அ) வா.மூர்த்தி  ஆ) கமலாலயன்  இ) கி.ராஜநாராயணன்  **ஈ) ப.சிங்காரம்**

4. 'புயலிலே ஒரு தோணி' இதில் தோணி என்பது ..................

**அ) படகு** ஆ) மாலுமி இ) கடல் ஈ) காற்று

5. ப. சிங்காரம் அவர்களின் மாவட்டம் .................

அ) தஞ்சை ஆ) விருதுநகர் **இ) சிவகங்கை** ஈ) நாகை

6. ப. சிங்காரம் ................. நாளிதழில் பணியாற்றினார்.

அ) தினமணி ஆ) ஆனந்தவிகடன் **இ) தினத்தந்தி** ஈ) தினகரன்

7. பொருத்துக.

அ) கப்பித்தான் - 1. கப்பல்
ஆ) தொங்கான் - 2. மூட்டை
இ) பவ்வம் - 3. தலைமை மாலுமி
ஈ) மூடை - 4. கடல்

அ) 3, 1, 2, 4 ஆ) 3, 4, 2, 1 இ) 4, 3, 2, 1 **ஈ) 3, 1, 4, 2**

8. ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகப் ப.சிங்காரம் கொடுத்தது.................

**அ) 7 ½ இலட்சம்** ஆ) 8½ இலட்சம் இ) 6 ½ இலட்சம் ஈ) 7 இலட்சம்

9. "ஓடி வாருங்கள்! இங்கே ஓடிவாருங்கள்"- இக்கூற்றுக்குரியவர்.................

அ) ஜப்பான் அதிகாரி ஆ) தமிழர்கள்
இ) பாண்டியன் **ஈ) தலைமை மாலுமி**

10. சரியான கூற்றுகளைத் தேர்க.

1) 'புலம் பெயர்ந்த தமிழர்கள் பற்றிய முதல் புதினம் புயலிலே ஒரு தோணி'
2) ப.சிங்காரம் 7 ½ இலட்சம் ரூபாயை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக தந்தார்.
3) ப.சிங்காரம் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரியைச் சேர்ந்தவர்.
4) வேலைக்காக இந்தோனேசியா சென்றார்.

அ) 1, 2 மட்டும் ஆ) 3 மட்டும் இ) 1,2,3 மட்டும் **ஈ) அனைத்தும்**

11. சரியான கூற்றைத் தேர்க. 'புயலிலே ஒரு தோணி' என்பது ஒரு ............. புதினமாகும்.

அ) வரலாற்று **ஆ) கற்பனை** இ) உண்மை ஈ) தழுவல்

12. 'பினாங்கு' என்பது ....................

1) மலேசியாவில் வடமேற்குக் கடற்கரையில் ஒரு தீவு
2) இந்தோனிசியாவின் மிகப்பெரிய தீவு
3) ஜப்பான் நாட்டின் துறைமுக நகரம்
4) சிங்கப்பூரின் தொழில் நகரம்

**அ) 1 மட்டும்** ஆ) 2 மட்டும் இ) 3 மட்டும் ஈ) 4மட்டும்

13. அவுலியா மீன்கள் கூட்டத்தை ப.சிங்காரம் எதனுடன் ஒப்பிடுகிறார்?

அ) கடலலை **ஆ) எருமை** இ) படகு ஈ) குரங்கு

14. சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிறுமலை என்னம் ஊர் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தது?

அ) திருச்சி **ஆ) திண்டுக்கல்** இ) மதுரை ஈ) சிவகங்கை

☆ ☆ ☆

# இயல் 1

# சொல்

## கற்கண்டு

### கற்பவை கற்றபின்

1. **தேன், நூல், பை, மலர், வா - இத்தனிமொழிகளுடன் சொற்களைச் சேர்த்துத் தொடர்மொழிகளாக்குக.**

காதேர்வு – 2024

1. **தேன்** - சந்தியா, **தேன்** வாங்கக் கடைக்குச் சென்றாள்.
2. **நூல்** - கண்ணன், பல **நூல்**களைக் கற்றுப் புகழ்பெற்ற சிறந்த கவிஞராகத் திகழ்கிறார்.
3. **பை** - தியா, இன்று துணிப்**பை**யில் தன் புத்தகங்களை வைத்துப் பள்ளிக்குக் கொண்டு சென்றாள்.
4. **மலர்** - சுடர்விழி, பல வண்ண **மலர்**களால் மேடையை அலங்கரித்துக் கொண்டிருந்தாள்.
5. **வா** - பூரணி, சந்திரன் இருவரும் என்னுடன் **வா**ருங்கள்.

2. **வினை அடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக.**

காண், சிரி, படி, தடு **எ.கா. :** காட்சி, காணுதல், காணல், காணாமை

| வினைஅடி | தொழிற்பெயர் |
|---|---|
| காண் | காட்சி, காணுதல், காணல், காணாமை |
| சிரி | சிரிப்பு, சிரித்தல், சிரிக்காமை |
| படி | படிப்பு, படித்தல், படிக்காமை |
| தடு | தடுப்பு, தடுத்தல், தடுக்காமை |

3. **தனிமொழி, தொடர்மொழி ஆகியவற்றைக் கொண்டு உரையாடலைத் தொடர்க.**

**அண்ணன்** : எங்கே செல்கிறாய்? (தொடர்மொழி)
**தம்பி** : **கடைக்கு** (தனிமொழி)
**அண்ணன்** : **அங்கே என்ன** வாங்குகிறாய்? (தொடர்மொழி)
**தம்பி** : **தேங்காய் வாங்குகிறேன்.** (தொடர்மொழி)
**அண்ணன்** : **எதற்கு?** (தனிமொழி)
**தம்பி** : **கோயிலுக்குச் செல்ல வேண்டும்.** (தொடர்மொழி)
**அண்ணன்** : **எந்தக் கோயிலுக்குச் செல்ல வேண்டும்?** (தொடர்மொழி)
**தம்பி** : **குன்றத்தூர்** (தனிமொழி)

4. **மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலைமீது ஏறுவேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்றுமுற்றும் பார்ப்பேன். மனம் அமைதி எய்தும்.**

**இத்தொடர்களில் உள்ள வினைமுற்றுகளைத் தனியே எடுத்தெழுதித் தொழிற்பெயர்களாக மாற்றுக.**

| வினைமுற்று | தொழிற்பெயர் |
|---|---|
| அழைக்கும் | அழைத்தல் |
| ஏறுவேன் | ஏறுதல் |
| அமர்வேன் | அமர்தல் |
| பார்ப்பேன் | பார்த்தல் |
| எய்தும் | எய்துதல் |

SURA'S

5. கட்டு, சொட்டு, வழிபாடு, கேடு, பாடுதல் - இத்தொழிற்பெயர்களை வகைப்படுத்துக.

1. கட்டு - முதனிலைத் தொழிற்பெயர்
2. சொட்டு - முதனிலைத் தொழிற்பெயர்
3. வழிபாடு - முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்
4. கேடு - முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்
5. பாடுதல் - விகுதி பெற்ற தொழிற்பெயர்

## திறன் அறிவோம் - புத்தக வினா

### பலவுள் தெரிக.

பிடிஏ–3; கா.தேர்வு 2023, 2024; முதல் தி.தேர்வு, அரை.தேர்வு 2024 மார்ச்–2024, 2026

4. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே-

அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர்

**விடை ஈ) பாடல்; கேட்டவர்**

### குறுவினா

1. 'பலகை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

1. பலகை - மரப்பலகை (தனிமொழி)
2. பல கை - பல + கை ⟶ பல கைகள் (தொடர்மொழி)
3. இவ்வாறு தனித்து நின்று ஒரு பொருளையும், அதே சொல் பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து. இது 'பொதுமொழி' ஆனது.

### சிறுவினா

3. '<u>அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது</u>' - இவை அனைத்தையும் யாம் அறிவோம்.

முதல் தி.தேர்வு 2022; மார்ச் 2024

இக்கூற்றில் அடிக்கோடிட்ட சொற்களைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

| வினைமுற்று | தொழிற்பெயர் | வினைமுற்று | தொழிற்பெயர் |
|---|---|---|---|
| அறிந்தது | அறிதல் | தெரிந்தது | தெரிதல் |
| அறியாதது | அறியாமை | தெரியாதது | தெரியாமை |
| புரிந்தது | புரிதல் | பிறந்தது | பிறத்தல் |
| புரியாதது | புரியாமை | பிறவாதது | பிறவாமை |

## பிடிஏ மற்றும் அரசுத் தேர்வு வினா - விடைகள்

### பலவுள் தெரிக.

1. தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது பிடிஏ–1

அ) தொழிற்பெயர் ஆ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்
இ) முதனிலைத் தொழிற்பெயர் ஈ) வினையாலணையும் பெயர்

**விடை ஈ) வினையாலணையும் பெயர்**

2. 'கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள்!' - இத்தொடர் அ.மா.வி 2019

அ) வினாத்தொடர் ஆ) தனித்தொடர்
இ) செய்தித்தொடர் ஈ) கலவைத் தொடர்

**விடை ஈ) கலவைத்தொடர்**

SURA'S

3. **தொடர்மொழி -** காலாண்டுத் தேர்வு 2019

அ) ஆடு மேய்ந்தது ஆ) அருகில்

இ) அம்மா ஈ) அசையாமை

**விடை அ) ஆடு மேய்ந்தது**

4. **பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.** செப்.–2020

(1) வினைமுற்று (i) கெடு

(2) தொழிற்பெயர் (ii) கட்டு

(3) முதனிலைத் தொழிற்பெயர் (iii) எய்தல்

(4) வினையடி (iv) வந்தான்

அ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i) ஆ) (1) - (iii), (2) - (i), (3) - (iv), (4) - (ii)

இ) (1) - (iv), (2) - (iii), (3) - (i), (4) - (ii) ஈ) (1) - (i), (2) - (iii), (3) - (ii), (4) - (iv)

**விடை அ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)**

5. **பொதுமொழியைத் தேர்வு செய்க :** முதல் தி.தேர்வு 2022

அ) கண்ணன் வந்தான் ஆ) எட்டு

இ) படித்தான் ஈ) அம்மா அ

**விடை ஆ) எட்டு**

6. **'மலர்விழி பாடினாள்' - இத்தொடர்:** மே–2022

அ) பொதுமொழி ஆ) தனிமொழி

இ) தொடர்மொழி ஈ) அடுக்குத்தொடர்

**விடை இ) தொடர்மொழி**

## குறுவினா

1. **'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.**

பிடிஏ–2; கா.தேர்வு 2019 & 2024; முதல் தி.தேர்வு 2022 & 2024; மார்ச் 2024

1. 'வேங்கை' என்பது தனிமொழியாகி மரத்தையும், புலியையும் குறிக்கும்.
2. வேம் + கை எனத் தொடர்மொழியாகப் பிரிந்து 'வேகின்ற கை' எனப் பொருள் தரும்.
3. இது தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவதால் பொதுமொழியாக இருக்கிறது.

2. **சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.** இரண்டாம் தி.தேர்வு 2022

**மரம், சந்தனம், கொடி, முல்லை, காடு, மணம்**

சந்தன மரம், கொடி முல்லை, சந்தனக்காடு, சந்தன மணம், முல்லை மணம், கொடி மரம்

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. **'எட்டு' என்னும் சொல் பொதுமொழி ஆகும்போது .............. ஆகப் பிரியும்.**

**அ) எள் + து** ஆ) எட்+டு இ) எள்+டு ஈ) எட்டு+உ

2. **வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகும் தொழிற்பெயர் .............. ஆகும்.**

அ) எதிர்மறைத் தொழிற்பெயர் ஆ) முதனிலைத் தொழிற்பெயர்

இ) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் **ஈ) விகுதி பெற்ற தொழிற்பெயர்**

3. **விகுதி பெறாமல் முதனிலை திரிந்து வருவது .............. ஆகும்.**

அ) விகுதி பெற்ற தொழிற்பெயர் ஆ) எதிர்மறைத் தொழிற்பெயர்

இ) முதனிலைத் தொழிற்பெயர் **ஈ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்**

**4.** **பொருந்தாத ஒன்றைத் தேர்க.**

அ) சொல் என்பது இரு திணைகளையும் ஐந்து பால்களையும் குறிக்கும்.
ஆ) சொல், மூவகை இடங்களிலும் வரும்.
இ) சொல், உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வரும்.
**ஈ) சொல் என்பது வெளிப்படையாக மட்டும் விளங்கும்.**

**5.** **ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே பிரிந்து நின்று வேறு ஒரு பொருளையும் குறிப்பது..............**

அ) தனிமொழி **ஆ) பொது மொழி** இ) தொடர்மொழி ஈ) வடமொழி

**6.** **முதனிலை திரிந்த தொழிற்பெயரைத் தேர்க.**

அ) கெடுதல் ஆ) கெட்ட **இ) கேடு** ஈ) கெடு

**7.** **கீழ்கண்டவற்றுள் பகாப்பதச் சொல்லைத் தேர்க.**

**அ) மனிதன்** ஆ) கண்ணன் இ) படித்தான் ஈ) சென்றார்

**8.** **சரியான கூற்றினைத் தேர்க.**

அ) ஒரு சொல், தனித்து நின்று பொருள் தருவது தொடர்மொழி
ஆ) தொழிற்பெயர், எட்டு வகைப்படும்.
**இ) வினையாலணையும் பெயர் என்பது, தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிக்கும்.**
ஈ) எதிர்மறைப் பொருளில் வருவது, முதனிலைத் தொழிற்பெயர் ஆகும்.

**9.** **நடவாமை, கொல்லாமை முதலியன ..............**

அ) முதனிலைத் தொழிற்பெயர்கள் **ஆ) எதிர்மறைத் தொழிற்பெயர்கள்**
இ) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்கள் ஈ) தொழிற்பெயர்கள்

**10.** **மொழி .............. வகைப்படும்.**

அ) 12 ஆ) 10 **இ) 3** ஈ) 18

**11.** **'வேம் + கை' எனப் பிரித்தால் அது தரும் பொருள் ..............**

அ) வெற்றுக்கை ஆ) வெந்தகை இ) வேகும் கை **ஈ) வேகின்ற கை**

**12.** **'அந்தமான்' என்பது எவ்வகை மொழி?**

அ) தொடர்மொழி ஆ) தனிமொழி **இ) பொதுமொழி** ஈ) செம்மொழி

**13.** (i) **மூவிடத்திற்கும் உரியது .............. .**
(ii) **படர்க்கைக்கே உரியது .............. .**

அ) வினையாலணையும் பெயர், உரிச்சொற்றொடர்
ஆ) உரிச்சொற்றொடர், வினையாலணையும் பெயர்
**இ) வினையாலணையும் பெயர், தொழிற்பெயர்**
ஈ) தொழிற்பெயர், வினையாலணையும் பெயர்

**14.** **'வாழ்க்கை' என்னும் தொழிற்பெயரின் விகுதியைக் குறிப்பிடுக.**

**அ) கை** ஆ) ஐ இ) தல் ஈ) அல்

## குறுவினா

**1.** **சொல் என்றால் என்ன?**

ஓர் எழுத்து தனித்தோ, பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தருவது சொல் ஆகும்.

SURA'S

**2. மொழியின் வகைகள் யாவை?**

மொழி மூன்று வகைப்படும். (i) தனிமொழி (ii) தொடர்மொழி (iii) பொதுமொழி.

**3. தனிமொழி என்றால் என்ன?**

ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருமாயின் அது, 'தனிமொழி' எனப்படும். **சான்று :** கண், கண்ணன்.

**4. தொடர்மொழி என்றால் என்ன?**

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது, 'தொடர்மொழி' ஆகும். **சான்று :** கண்ணன் வந்தான்.

**5. பொதுமொழி என்றால் என்ன?**

ஒரு சொல், தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து, தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது, 'பொதுமொழி' எனப்படும்.

**சான்று :** தாமரை: தாமரை – மலர் = தா + மரை – தாவுகின்ற மான்

**6. தொழிற்பெயர் என்றால் என்ன?**

ஒரு வினை அல்லது செயலைக் குறிக்கும் பெயரானது எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் குறிப்பாகவோ வெளிப்படையாக உணர்த்தாமல் வருவது, 'தொழிற்பெயர்' எனப்படும். **சான்று :** ஈதல், நடத்தல்.

**7. முதனிலைத் தொழிற்பெயர் என்றால் என்ன?**

1. தொழிற்பெயர், விகுதி பெறாமல் வினைப்பகுதியே தொழிற்பெயராதல் முதனிலைத்தொழிற் பெயராகும்.
2. **எ.கா :** தட்டு, உரை, இச்சொற்கள் தட்டுதல், உரைத்தல் என்று பொருள்படும்போது முதனிலைத் தொழிற்பெயர்களாகின்றன.

**8. முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன?**

1. தொழிற்பெயரின் விகுதியைப் பெறாமல், முதனிலை திரிந்து (மாறுபட்டு) வருவது முதனிலை திரிந்த தொழிற்பெயர் ஆகும். **சான்று:** 'கெடுவான் கேடு நினைப்பான்'
2. இதில் 'கெடு' என்னும் முதனிலை, 'கேடு' என்று மாறி வந்துள்ளமையால் இது, முதனிலை திரிந்த தொழிற்பெயராகும்.

**9. எதிர்மறைத் தொழிற்பெயர் விளக்கம் தருக.**

எதிர்மறைப் பொருளில் வரும் தொழிற்பெயர் ஆகும். **சான்று :** நடவாமை, கொல்லாமை.

**10. வினையாலணையும் பெயர் என்றால் என்ன?**

1. ஒரு வினைமுற்று, பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது, வினையாலணையும் பெயர் எனப்படும்.
2. அது தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் மூன்று காலங்களிலும் வரும்.
3. **சான்று : வந்தவர்** அவர்தான். **பொறுத்தார்** பூமியாள்வார்.

**11. தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் உள்ள வேறுபாடு யாது?**

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| வினை, பெயர்த் தன்மையாகி வினையையே உணர்த்தி நிற்கும். | தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிக்கும். |
| காலம் காட்டாது. | காலம் காட்டும். |
| படர்க்கைக்கே உரியது. | மூவிடத்திற்கும் உரியது. |
| எ.கா. பாடுதல், படித்தல். | எ.கா. பாடியவள், படித்தவர் |

SURA'S

**12. தொழிற்பெயர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

தொழிற்பெயர் இரண்டு வகைப்படும். **அவை :** முதனிலைத் தொழிற்பெயர், முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்.

**13. விகுதி பெற்ற தொழிற் பெயர்கள் விளக்குக.**

வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகும் தொழிற்பெயர், 'விகுதி பெற்ற தொழிற்பெயர்' ஆகும்.

| வினையடி | விகுதி | தொழிற்பெயர் |
|---|---|---|
| நட | தல் | நடத்தல் |
| வாழ் | கை | வாழ்க்கை |
| ஆள் | அல் | ஆளல் |

## மொழியை ஆள்வோம்

**குறிப்பு**

**மாணவச் செல்வங்களே!**

* ஒவ்வொரு இயலிலும் பின்வரும் மொழிப்பயிற்சிப் பகுதிகளைக் கவனமாகப் படிக்கவும்.
* தேர்விற்கு இப்பகுதியிலிருந்து 38 முதல் 40 மதிப்பெண்கள் வரை கேட்கப்படும்.
* புரிந்து கொண்டு, எழுதிப்பார்த்தால் முழு மதிப்பெண் பெறலாம்.
* இந்தப்பகுதியை, எவ்வித முறையில் விடையளிப்புச் செய்தால் 100% மதிப்பெண் பெற இயலுமோ, அத்தகை விடையளிப்பு முறையில் வினாவிற்கான விடைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.
* கண்டிப்பாக விடையளிப்பு முறையைப் பின்பற்றினால்தான் (Presentation) முழு மதிப்பெண் பெறமுடியும்.

SURA'S

**படித்துச் சுவைக்க.**

பாடலில், மரம் என்னும் சொல், இடத்திற்கேற்பப் பொருள் தருவதாய் 11 இடங்களில் இடம்பெற்றுள்ளது. பொருள்களைப் பொருத்திப் படித்துச் சுவைக்க.



"மரமது[1] மரத்தில்[2] ஏறி
மரமதைத்[3] தோளில் வைத்து
மரமது[4] மரத்தைக்[5] கண்டு
மரத்தி[6]னால் மரத்தைக்[7] குத்தி
மரமது[8] வழியே சென்று
வளமனைக் கேகும் போது
மரமது[9] கண்ட மாதர்
மரமுடன்[10] மரம்[11] எடுத்தார்"

- **சுந்தரகவிராயர்.**

| 1 | 2 | 3 | 4, 9 | 5, 7 | 6 | 8 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|
| அரசன் (அரச மரம்) | மா குதிரை (மாமரம்) | வேல் (கரு வேலம்) | அரசன் | புலி (வேங்கை | வேல் | காட்டு வழி | ஆல் (ஆலமரம்) | அத்தி (அத்தி மரம்) ஆல் + அத்தி = ஆரத்தி |

## மொழிபெயர்ப்பு

1. **If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart. – Nelson Mandela**

**விடை:** பிடிஏ–2; காலாண்டுத் தேர்வு 2019; செப்.–2021

ஒரு மனிதனிடம் அவருக்குப் புரிகிற மொழியில் பேசினால், அவரது மூளையைச் சென்றடையும். ஆனால், அவருடைய தாய்மொழியில் பேசினால், அவரது இதயத்தைச் சென்றடையும்.

**- நெல்சன் மண்டேலா**

2. **Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going. – Rita Mae Brown**

**விடை:** காலாண்டுத் தேர்வு 2019; செப்.–2021

பண்பாட்டைக் காட்டுகின்ற பாதை மொழியாகும்; அதுவே மக்கள் எங்கிருந்து வந்தார்கள்; எங்குச் செல்கிறார்கள் என்பதைத் தெளிவுப்படுத்தும். **- ரீட்டா மே ப்ரௌன்**

## பிழைகளைத் திருத்தி எழுதுக.

பிடிஏ–5; முதல் தி.தேர்வு; மே 2022; ஜூன் 2023

“தேணிலே ஊரிய செந்தமிழின் – சுவை
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் – நிதம்
ஓதி யுனர்ந்தின் புருவோமே”

**விடை:**

“தே**னி**லே ஊ**றி**ய செந்தமிழின் – சுவை
தேரும் சிலப்பதி கா**ர**மதை
ஊனிலே எம்முயிர் உ**ள்ளள**வும் – நிதம்
ஓதி யு**ண**ர்ந்தின் பு**று**வோமே”

## கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.

பிடிஏ–4

(குவியல், குலை, மந்தை, கட்டு)

| சொல் | கூட்டப்பெயர் | சொல் | கூட்டப்பெயர் |
|---|---|---|---|
| கல் | குவியல் (கற்குவியல்) | புல் | கட்டு (புற்கட்டு) |
| பழம் | குலை (பழக்குலை) | ஆடு | மந்தை (ஆட்டு மந்தை) |

## வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.

1. **கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.**
   கலையரங்கத்தில் எனக்காகக் **காத்திருக்கின்றவரை** அழைத்து வாருங்கள்!
2. **ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.** மார்ச் 2025
   ஊட்டமிகு உணவு **உண்டவர்** நீண்ட வாழ்நாள் பெற்றார்.
3. **நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.**
   நேற்று என்னைச் **சந்தித்தவர்** என் நண்பர்.
4. **பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.** மார்ச் 2025
   பொது அறிவு நூல்களைத் தேடிப் **படித்தவர்** போட்டித் தேர்வில் வென்றார்.

SURA'S

**தொடர்களில் உள்ள வண்ணச் சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக.** பிடிஏ–1

1. **உலகில் வாழும் மக்களில் சிலர் கனியிருக்கக் காய் புசித்தலைப்போல, இன்சொல் இருக்க வன்சொல் பேசி இன்னற்படுகின்றனர்.**

   பூமியில் வாழும் மாந்தருள் சிலர் பழமிருக்கக் காய் உண்ணுதலைப் போல, இன்சொல் இருக்க வன்சொல் பேசித் துன்பப்படுகின்றனர்.

2. **வள்ளல் குமணன் வறுமையால் வாடிவந்த புலவனுக்குத் தனது தலையைக் கொடுத்து மங்காப் புகழ் பெற்றான்.**

   வள்ளல் குமணன் ஏழ்மையால் வாடிவந்த கவிஞருக்குத் தனது தலையை ஈந்து மங்காப் பெருமை பெற்றான்.

3. **நளனும் அவனது துணைவியும் நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழைமுகில் கண்ட மஞ்ஞை போலக் களி கொண்டனர்.**

   நளனும் அவனது மனைவியும் நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழைமேகம் கண்ட மயில் போல மகிழ்ச்சி கொண்டனர்.

4. **சோலையிற் பூத்த மணமலர்களில் சுரும்புகள் மொய்த்துப் பண்பாடி மதுவுண்டன.**

   பூந்தோட்டத்தில் பூத்த மணமலர்களில் வண்டுகள் மொய்த்துப் பண்பாடித் தேன் உண்டன.

5. **பசுப்போல் சாந்தமும் புலிபோல் தீரமும் யானை போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.**

   ஆ போல் அமைதியும் வேங்கை போல் வீரமும் களிறு போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

## கட்டுரை எழுதுக.

குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.

**இக்கருத்தைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

அ.மா.வி 2019; பிடிஏ–1; முதல் தி.தேர்வு 2022; ஜூன் 2023

### சான்றோர் வளர்த்த தமிழ்

| குறிப்புச்சட்டகம் | |
|---|---|
| முன்னுரை | உலா |
| பிள்ளைத்தமிழ் | அந்தாதி |
| சதகம் | கோவை |
| பரணி | முடிவுரை |
| கலம்பகம் | |

**முன்னுரை**

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ் கூறு நல்லுலகத்து"

என்னும் தொல்காப்பியத்தின் சிறப்புப் பாயிரத்திற்கு இணங்கப் பெருமை வாய்ந்தது, நம் தமிழ் மொழி. எண்ணற்ற இலக்கியங்கள் கொண்ட நம் தமிழ் அன்னைக்குக் கூடுதல் பெருமை

சேர்ப்பன நம் சிற்றிலக்கியங்கள். பிள்ளைத்தமிழ், சதகம், பரணி, கலம்பகம், உலா, அந்தாதி, கோவை ஆகிய சிற்றிலக்கியங்கள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**பிள்ளைத்தமிழ்**

இறைவனையோ, தலைவரையோ, அரசனையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அவரைக் குழந்தையாகக் கருதிப் பாடுவர். பத்துப் பருவங்கள் அமைத்துப் பருவத்திற்குப் பத்துப்பாடல் என நூறு பாடல்களால் இது பாடப்பெறும். இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும்.

**பிள்ளைத்தமிழ் நூல்கள் சில**

1. ஒட்டக்கூத்தர் இயற்றிய, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் – முதல் பிள்ளைத்தமிழ் நூல்.
2. குமரகுருபரர் இயற்றிய, 'மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்', முத்துகுமாரசாமி பிள்ளைத்தமிழ்.
3. மகாவித்துவான் இயற்றிய, சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

**சதகம்**

'சதகம்' என்றால் 'நூறு' என்று பொருளாகும். நூறு செய்யுள்களால் பாடப்படும் இலக்கியம் சதகம் எனப்படும்.

**சதக நூல்களுள் சில**

1. ஆறைகிழார் இயற்றிய, கார்மண்டல சதகம் – முதல் சதக நூல்
2. படிக்காசுப் புலவர் இயற்றிய, தொண்டை மண்டலச் சதகம்.

**பரணி**

போரில் ஆயிரம் யானைகளைக் கொண்டு, வெற்றி கொண்ட வீரனைப் புகழ்ந்து பாடுவது பரணி இலக்கியம் ஆகும். தோற்றவர் பெயர் அல்லது தோல்வியுற்ற நாட்டின் பெயரால் பரணி இலக்கியம் பாடப்படும்.

**பரணி நூல்களுள் சில**

1. செயங்கொண்டார் இயற்றிய, கலிங்கத்துப்பரணி – முதல் பரணி நூல்
2. ஒட்டக்கூத்தர் இயற்றிய தக்கயாகப்பரணி

**கலம்பகம்**

'கலம்' என்றால் 12,'பகம்' என்றால் 6. 18 உறுப்புகளைக் கொண்டது கலம்பகம் ஆகும்.

**கலம்பக நூல்களுள் சில**

1. நந்திக் கலம்பகம் – முதல் கலம்பக நூல்
2. குமரகுருபரர் இயற்றிய, மதுரைக் கலம்பக நூல்

**உலா**

பாட்டுடைத் தலைவன், நகரில் உலா வருதலைச் சிறப்பித்துப் பாடப்படுவது உலா இலக்கியம் ஆகும்.

**உலா நூல்களுள் சில**

1. சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய, திருக்கைலாய ஞான உலா – முதல் உலா நூல்
2. ஒட்டக்கூத்தர் இயற்றிய, தில்லை உலா, மூவருலா
3. திரிகூடராசப்பக் கவிராயர் இயற்றிய, திருக்குற்றால நாதர் உலா

**அந்தாதி**

'அந்தம்' என்றால் இறுதி, 'ஆதி' என்றால் முதல் என்று பொருளாகும். ஒவ்வொரு பாடலின் இறுதியில் உள்ள எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ அடுத்த பாடலின் தொடக்கமாக அமையும்படி பாடுவது, 'அந்தாதி' வகை இலக்கியம் ஆகும்.

SURA'S

**அந்தாதி நூல்களுள் சில**

1. காரைக்கால் அம்மையார் இயற்றிய, அற்புதத் திருவந்தாதி - முதல் அந்தாதி நூல்
2. கம்பர் இயற்றிய, சரஸ்வதி அந்தாதி, சடகோபர் அந்தாதி

**கோவை**

'கோவை' என்றால் முறையாகக் கோக்கப்பட்டது என்று பொருளாகும். அகப்பொருள் அல்லது புறப்பொருள்களை முறையாக அமைத்துப் பாடப்படுவது, கோவை வகை இலக்கியம் ஆகும்.

**கோவை நூல்களுள் சில**

1. பாண்டிக்கோவை - முதல் கோவை நூல்
2. மாணிக்கவாசகர் இயற்றிய, திருக்கோவையார், திருச்சிற்றம்பலக் கோவை.

**முடிவுரை**

இவ்வாறு, சிற்றிலக்கியங்களைத் தமிழன்னைக்கு அணிகலன்களாகப் பூட்டி, அழகூட்டி அகம் மகிழ்ந்த பெருமை நம் செந்நாப் புலவர்களைச் சாரும். அவர்களைப் போற்றி வணங்கி நம் தமிழை மாசறக் கற்போம்!

## கொடுக்கப்பட்டுள்ள பாடலைப் படித்து நயம் பாராட்டுக.

**கவிதையில் உள்ள திரண்ட கருத்து, பொருள் நயம், சொல் நயம், சந்த நயம், தொடை நயம், அணி நயம் ஆகியவை இடம்பெற வேண்டும்.**

முதல் தி.தேர்வு 2024

**தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே**
**தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே**
**ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே**
**உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே**
**வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே**
**மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே**
**தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே**
**தழைத்தினி தோங்குவாய்த் தண்டமிழ் மொழியே!**

- கா. நமச்சிவாயர்

**முன்னுரை:**

**நல்ல தொடக்கமே நல்ல முடிவைத் தரும்.**

பண்டிதர் கா. நமச்சிவாயர் **1934-ல்** தமிழர் திருநாள் கொண்டாட்டத்தின்போது, தமிழின் சிறப்பைப் போற்றும் விதமாக இப்பாடலை இயற்றினார். அவரின் கற்பனைச் சிறகில் பூத்த புது மலரே இப்பாடல். இப்பாடலில் உள்ள இலக்கிய நயங்களைப் பின்வருமாறு காண்போம்.

**ஆசிரியர் குறிப்பு :**

| | |
|---|---|
| **பெயர்** | : கா. நமச்சிவாயர் |
| **சிறப்புப்பெயர்** | : பண்டிதர், தமிழ்ப் பேராசிரியர் |
| **பெற்றோர்** | : இராமசாமி முதலியார் - அகிலாண்டவல்லி |
| **ஊர்** | : காவேரிப்பாக்கம் |
| **காலம்** | : 1876 - 1936 |
| **நடத்திய இதழ்** | : நல்லாசிரியன், ஜனவிநோதினி |

**திரண்ட கருத்து :**

**திரண்ட கருத்துப் பாடலின் முழுமையை உணர்த்தும்**

தேனினும் இனிமையான செம்மை பெற்ற மொழி தமிழ்மொழி. தென்னாட்டில் சிறந்து விளங்குகின்ற மொழி. உடலெல்லாம் ஒளிவிடும் உயர்ந்த மொழி. உணர்வுக்குள் உணர்வு தந்து

ஒளிரும் மொழி. தனது சிறப்பினால் வானத்தைவிட உயர்ந்த வளமான மொழி. மக்களுக்கு இரண்டு கண்களாக விளங்கும் தனித்தமிழ் மொழி. இனி நீ தழைத்து இனிது உயர்வாய் குளிர்ந்த மொழியே!

**மையக் கருத்து:**

**மனதைத் தொடுவது மையக் கருத்து**

இச்செய்யுளில் கவிஞர், தமிழ்மொழி இனிமையும் பெருமையும் வாய்ந்தது என்று தமிழின் சிறப்புகளை மையக்கருவாகக் கொண்டு பாடியுள்ளார்.

**தொடைநயங்கள்:**

**தொடையற்றப் பாட்டு நடையற்றுப் போகும்**

என்பதற்கேற்ப இச்செய்யுளில் தொடை நயங்கள் இனிதாகப் பயின்று வந்துள்ளன.

**மோனைத் தொடை:**

**காட்டிற்கு அழகு யானை, கவிதைக்கு அழகு மோனை**

செய்யுளில் அடிகளிலோ சீர்களிலோ முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனைத் தொடை ஆகும்.

**சான்று :** **தே**னினும் – **தெ**ன்னாடு, **ஊ**னினும் – **உ**ணர்வினும்

**எதுகைத் தொடை :**

**குளிருக்கு அழகு உதகை, கவிதைக்கு அழகு எதுகை**

செய்யுளில் அடிகளிலோ சீர்களிலோ முதல் எழுத்து அளவொத்து இருக்க, இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது ‘எதுகைத் தொடை’ ஆகும்.

**சான்று :** தே**னி**னும், ஊ**னி**னும், வா**னி**னும், தா**ன**னி

**இயைபுத் தொடை :**

**கவிதைக்கு இயைபு, படிப்போர்க்கு வியப்பு**

செய்யுளில் அடிகளிலோ, சீர்களிலோ இறுதி எழுத்தோ, சொல்லோ ஒன்றிவரத் தொடுப்பது, ‘இயைபுத் தொடை’ ஆகும்.

**சான்று :** மொ**ழியே** – மொ**ழியே** – (அடிக்கோடிட்டு காட்டவும்)

**அணிநயம் :**

**உடலுக்கு ஊக்கம் தருவது கனி, கவிதைக்கு ஊக்கம் தருவது அணி**

**அணி என்றால் அழகு என்று பொருள்:**

செய்யுளில் அமைந்து கிடக்கும் சொல்லழகு, பொருளழகு முதலியவற்றை வரையறுத்துக் கூறுவது, ‘அணி’ இலக்கணமாகும்.

**உயர்வு நவிற்சி அணி :**

இங்கு, தமிழ் மொழியின் சிறப்புகளை மிக உயர்த்திக் கூறியுள்ளமையால் இச்செய்யுளில், ‘உயர்வு நவிற்சி அணி’ பயின்று வந்துள்ளது.

**சொற்பொருள் பின்வருநிலையணி :**

இச்செய்யுள் ‘மொழி’ என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து ‘தமிழ்மொழி’ என்னும் ஒரே பொருளைத் தருவதால் சொற்பொருள் பின்வரு நிலையணி பயின்று வந்துள்ளது.

**சந்த நயம் :**

**உறவுக்கு அழகு பந்தம், செய்யுளுக்கு அழகு சந்தம்**

ஒரு பாடலின் தாளம், ஓசை, அமைப்பு ஆகியவற்றின் அழகு, இனிமை, சிறப்பு ஆகியவற்றைக் குறிக்கிறது.

**சான்று :** ஒரு பாடலின் அடிகளில் அமைந்துள்ள ஓசையைக் குறிக்கும். இப்பாடலில் தேனினும், ஊனினும் வானினும் என்ற சொற்கள் இடம் பெறுவதால் பாடுவதற்கு இனிமையாக ஓசை நயம் பொருந்தி வருவதால் இப்பாடலில் சந்த நயம் சிறப்பாக வந்துள்ளது.

SURA'S

**பா நயம் :**

**எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் :**

இச்செய்யுளில் அடிதோறும் எட்டுச் சீர்கள் அமைந்துள்ளதால், ஆசிரியப்பாவிற்கு இனமான **எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்** என்னும் பா வகை இப்பாடலில், பயின்று வந்துள்ளது.

**சுவை நயம் :**

**உணவிற்கு அழகு அறுசுவை, கவிதைக்கு அழகு எண்சுவை**

**பெருமிதச்சுவை :**

இச்செய்யுளில் கவிஞர், **'வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே'** எனத் தமிழின் சிறப்பினைப் பெருமைப்படுத்திக் கூறுவதால், பெருமிதச்சுவை என்னும் சுவைநயத்தை இப்பாடல் பெற்றுள்ளது.

**தலைப்பு : 'செந்தமிழ் மொழியே'**

**முடிவுரை :**

**காலம் கவிஞனைக் கொன்றது!; அவன் கவிதை காலத்தை வென்றது!**

கவிஞர், இப்பாடலில் தமிழ் மொழியினை வண்டமிழ், ஒண்டமிழ், தண்டமிழ், தனித்தமிழ் என்றெல்லாம் பல பெயரிட்டு அழைக்கிறார். தமிழின் பெருமையைப் போற்றிய, இப்பாடலில் உள்ள இலக்கிய நயங்களைச் சுவைத்து மகிழ்ந்தோம்.

**மாணவர்களுக்கான குறிப்பு**

1. பா நயம் பாராட்டலை, 25 நிமிடத்திற்குள் எழுதிமுடிக்க வேண்டும்.
2. இரண்டு மூன்று முறை எழுதிபார்த்துப் பயிற்சி பெற்றால், சிறப்பாக எழுத முடியும்.
3. எதுகை, மோனை, இயைபு, போன்ற சான்றுகளிலும் அணி, சுவை, பா வகை முதலான தலைப்புகளில் உள்ள விடைகளுக்கு, அடிக்கோடு இட வேண்டும்.
4. குறிப்புச் சட்டகத்தில் உள்ள தலைப்புகளைப் புரிந்து கொண்டு, மனனம் செய்து கொள்ள வேண்டும்.
5. மேற்கண்ட விடையளிப்பு முறையோடு எழுதினால், முழு மதிப்பெண் பெறலாம்.
6. பா நயம் பாராட்டலை 5 மதிப்பெண்கள் வினாப் பகுதியில் கேட்டால் 5 தலைப்புகளில் விடையளித்தால் போதுமானது.
7. 8 மதிப்பெண் வினாப் பகுதியில் கேட்டால் 10 தலைப்புகளில் விடையளிக்க வேண்டும்.
8. முயற்சியோடு பயிற்சி செய்தால் முழு மதிப்பெண் நிச்சயம்.

## மொழியோடு விளையாடு

**சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.** காலாண்டுத் தேர்வு 2019; செப்.–2021

**எ.கா.** பூமணி

| | | |
|---|---|---|
| தேன் – தேன்மழை | விளக்கு – செய்விளக்கு | மழை – பூமழை |
| விண் – விண்மீன் | மணி – பூமணி | விலங்கு – பொன் விலங்கு |
| செய் – செய்வான் | மேகலை – மணிமேகலை | வான் – வான்மழை |
| பொன் – பொன்மணி | பூ – பூவிலங்கு | |

SURA'S

**எண்ணுப்பெயர்களைக் கண்டுபிடித்துத் தமிழ் எண்களில் எழுதுக.**

பிடிஏ–2; முதல் தி.தேர்வு 2022; கா.தேர்வு, ஏப்ரல்–2023

| செய்யுள் அடி | எண்ணுப்பெயர் | தமிழ் எண் |
|---|---|---|
| நாற்றிசையும் செல்லாத நாடில்லை. | நான்கு | ச |
| எறும்புந்தன் கையால் எண்சாண் | எட்டு | அ |
| ஐந்துசால்பு ஊன்றிய தூண் | ஐந்து | ரு |
| நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி | நான்கு, இரண்டு | ச உ |
| ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி | ஆயிரம் | க000 |

| தமிழ் எண்கள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1- க | 2- உ | 3- ௩ | 4- ச | 5- ரு | 6- சு | 7- எ |
| 8- அ | 9- கூ | | | | | |

**அகராதியில் காண்க.**

| | |
|---|---|
| அடவி – காடு, சோலை | செறு – சிறு வயல், கோபம் |
| அவல் – நெல் இடியல், பள்ளம் | பழனம் – வயல், பொய்கை |
| சுவல் – மேடு, முதுகு | புறவு – காடு, புறா |

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



பிடிஏ–1; அரை.தேர்வு 2019;
கா.தேர்வு 2023; ஜூலை–2024; மார்ச் 2026

**புத்தகம் :**

அறியாமைப் பூட்டைத் திறக்கும் சாவி
புத்தகம் ஒன்றே தோழா!
புத்தகம் திறக்கும் கைகளில்
இந்தப் பூமி தவழும் தோழா!
புத்தகம் திறக்க மறுத்தால்
உன் அறிவு மட்கிப் போகும்!
உயிரைக் காக்கும் அறிவைப் பெறவே...
நூலை வாங்கிப் படி!
சோம்பல் உன்னைத் தின்றுவிடும்
உன் எதிர்காலம் அதனைக் கொன்றுவிடும்
வாழ்வில் உயர வந்து படி!
வானம் அளக்க உவந்து படி!

1. செவிக்கும் கண்களுக்கும் கவசப்பூட்டு அணிந்துகொண்டு அமர்ந்திருக்காதே தோழா!
2. உன் மனப்பூட்டைத் திறந்து அறிவைப் பெறு!
3. அறிவைப் பெறுவதற்குப் புத்தகங்களைப் படி! புத்தகங்களைப் படித்து அறியாமையை விரட்டு!
4. அகன்ற அறிவோடும் ஆழ்ந்த சிந்தனையோடும் நடைபோடு நண்பா!
5. உன் எதிர்காலம் சிறப்புற ஆழ்ந்து படி! கல்வி ஒன்றே வாழ்வைச் சிறக்க வைக்கும்!



SURA'S

## செயல் திட்டம்

நீங்கள் வாழும் பகுதியிலுள்ள எவையேனும் ஐந்து பயிர்வகைச் சொற்களுக்கான படத்தொகுப்பை உருவாக்குக.

1. பச்சைப் பயறு
2. காராமணி
3. உளுந்து
4. கம்பு
5. சோளம்



## நிற்க அதற்குத் தக...

முதல் தி.தேர்வு 2022; ஜூன் & அரை.தேர்வு 2023; ஜூலை & கா.தேர்வு–2024; மார்ச்–2025

| இன்சொல் வழி | தீய சொல் வழி |
|---|---|
| பிறர் மனம் மகிழும் | பிறர் மனம் வாடும் |
| அறம் வளரும் | அறம் தேயும் |
| புகழ் பெருகும் | இகழ் பெருகும் |
| நல்ல நண்பர்கள் சேருவர் | நல்ல நண்பர்கள் விலகுவர் |
| அன்பு நிறையும் | பகைமை நிறையும் |

**இதில் நீங்கள் செல்லும் வழி யாது? உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது?**

**விடை :** இன்சொல் வழி. என் நண்பருக்குக் காட்டும் வழி இன்சொல் வழி.

## படிப்போம்; பயன்படுத்துவோம்!

பிடிஏ–1; முதல் தி.தேர்வு & ஆகஸ்ட்–2022; ஜூன் 2023

| | |
|---|---|
| Vowel - உயிரெழுத்து | Monolingual - ஒரு மொழி |
| Consonant - மெய்யெழுத்து | Conversation - உரையாடல் |
| Homograph - ஒப்பெழுத்து | Discussion - கலந்துரையாடல் |

## அறிவை விரிவு செய்

1. நாம் ஏன் தமிழ் காக்க வேண்டும் – முனைவர் சேதுமணி மணியன்
2. தவறின்றித் தமிழ் எழுதுவோம் – மா. நன்னன்
3. பச்சை நிழல் – உதயசங்கர்

SURA'S

## பிடிஏ மற்றும் அரசுத் தேர்வு வினா - விடைகள்

### பலவுள் தெரிக.

1. **இலையுதிர்காலம் ............... சருகாயின!** பிடிஏ–4
**மழைக்காலம் ................ தழைத்தன!**
**சருகுகளோ செழுமையான உரங்களாயின! - புதுக்கவிதைக்கு பொருத்தமான எதுகை, மோனைச் சொற்களை இட்டு நிரபுக.**
அ) மரங்களெல்லாம் கிளைபரப்பின ஆ) காடெல்லாம், வளர்ந்தன
இ) இலைகளெல்லாம், மரங்களெல்லாம் ஈ) மலையெல்லாம், முளைத்தன

**விடை இ) இலைகளெல்லாம், மரங்களெல்லாம்**

### குறுவினா

1. **ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி** செப்.–2020
**- இத்தொடர்கள் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும் தமிழெண்களையும் குறிப்பிடுக.**
ஆலும் – ஆலமரம், வேலும் – வேல மரம்
நாலும் – நாலடியார் – 4 – ச, இரண்டும் – திருக்குறள் – 2 – உ

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர்**

**சேர்க்கை - இணையவழி விண்ணப்பப் பதிவு**

முழுப்பெயர் :

பாலினம் :

கைபேசி எண் :

மின்னஞ்சல் முகவரி :

பிறந்த தேதி :

இரத்த வகை :

தந்தையின் பெயர் :

தாயாரின் பெயர் :

தொடர்பு முகவரி :

| கதவு எண் /தெருவின் பெயர்/ கிராமம் (அல்லது) நகரத்தின் பெயர் | மாவட்டம் | அஞ்சல் குறியீட்டு எண் |
|---|---|---|
| | | |

நிரந்தர முகவரி :

| கதவு எண் /தெருவின் பெயர்/ கிராமம் (அல்லது) நகரத்தின் பெயர் | மாவட்டம் | அஞ்சல் குறியீட்டு எண் |
|---|---|---|
| | | |

மாநிலம் : தமிழ்நாடு

இனம் : இந்தியன்

ஆதார் எண் : XXXX XXXX XXXX

உங்கள் புகைப்படத்தைப் பதிவேற்றவும் :



கடவுச்சொல் : XXXXXXXXXXXXXXX

கடவுச்சொல்லை உறுதிப்படுத்தவும் : XXXXXXXXXXXXXXX

SURA'S

**மாநில அளவில் நடைபெற்ற 'கலைத்திருவிழா' போட்டியில் பங்கேற்று 'கலையரசன்' பட்டம் பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.**

காந்தித் தெரு,
10.06.2025

அன்புள்ள நண்பன் அமுதனுக்கு,

வணக்கம். நான் நலமாக இருக்கின்றேன். நீ நலமாக இருக்கின்றாயா? இல்லத்தில் அனைவரும் நலமாக உள்ளார்களா? என்பதை அறிய ஆவலுடன் உள்ளேன். உன்னிடம் இருக்கின்ற கலைத்திறமைகளை உடனிருந்து நான் பார்த்திருக்கின்றேன். பல போட்டிகளில் கலந்துகொண்டு நீ பரிசுகளைப் பெற்றுள்ளாய்.

தமிழ்நாடு அரசு நடத்திய கலைத்திருவிழாப் போட்டிகளிலும் கலந்துகொண்டு மூன்று போட்டிகளில் மாநில அளவில் முதலிடம் பெற்றுள்ளாய். இதன் காரணமாகக் ‘கலையரசன்’ பட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கைகளால் பெற்றுள்ளாய். உனக்குக் கிடைத்த பெருமையால் நண்பர்கள் அனைவருமே பெருமையும் ஊக்கமும் அடைகிறோம். உன்னைப் போலப் பட்டங்கள் பெற முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

இதைப்போல, வரக்கூடிய பல போட்டிகளிலும் கலந்துகொண்டு, இன்னும் பல பரிசுகளைப் பெற உளமார வாழ்த்துகின்றேன். கோடை விடுமுறையில் நமது கிராமத்தில் சந்திப்போம்.

இப்படிக்கு,
உன் அன்புள்ள நண்பன்,
மா. குறளரசன்.

**உறைமேல் முகவரி**

பெறுநர்
ஆ. அமுதன்,
50, அன்னை இல்லம்,
கபிலர் தெரு,
கோயமுத்தூர் 641 001.

SURA'S

# அலகுத்தேர்வு

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (4 × 1 =4 )

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா

இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

2. 'மொழிஞாயிறு' என்று அழைக்கப்படும் பெருமைக்குரியவர்.

அ) பெருஞ்சித்திரனார் ஆ) பாரதியார் இ) தமிழழகனார் ஈ) தேவநேயப்பாவாணர்

3. '<u>காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்</u> நிலத்துக்கு நல்ல உரங்கள்', இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது -

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்

இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

4. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே–

அ) பாடிய ; கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய

இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்

**II. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்க.** (2 × 2 = 4)

5. 'பலகை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

6. சொல்வளத்தை உணர்த்த உதவும் நெல் வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

7. "மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!" –இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

8. முதனிலைத் தொழிற்பெயர் என்றால் என்ன?

**III. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து வரிகளில் விடையளிக்க.** (2 × 3 = 6)

9. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை

10. தாவரங்களின் இளம் பயிர் வகைக்கான சொற்களை எழுதுக.

11. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

**IV. அடிபிறழாமல் எழுதுக.** (1 × 3 = 3)

12. "அன்னை மொழியே..." – எனத் தொடங்கும் பாடலை அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.

**V. விடையளி (ஏதேனும் ஒன்று).** (1 × 8 = 8)

13. நாட்டுவளமும் சொல்வளமும் தொடர்புடையது என்பதைப் பாவாணர் வழிநின்று விளக்குக.

14. 'புயலிலே ஒரு தோணி' கதைப்பகுதியில் இடம்பெறும் கடற்பயண நிகழ்வுகளை விவரித்து எழுதுக.

☆ ☆ ☆

SURA'S

# இயல் 6

# சிற்றகல் ஒளி

## உரைநடை உலகம்

– ம.பொ.சிவஞானம்

### கரு

✳ கதை கேட்கும் வழக்கம் சிறிய வயது முதல் அனைவருக்கும் இருக்கிறது.
✳ கேட்பது குறைந்துபோய்க் கதை படிப்பது அதன் படிநிலை.
✳ அதுவே ஒருவரைப் படிப்பாளியாகவும் படைப்பாளியாகவும் பக்குவப்படுத்துகிறது.
✳ அப்படியான படைப்பாளி தன்னை முன்வைத்துத் தன் நாட்டின் வரலாற்றைக் கூறும்நிலை சிலருக்கு மட்டுமே வாய்த்திருக்கிறது.
✳ வரலாற்றின் போக்கினை மாற்றி வடிவமைத்தவர்களின் வாழ்க்கைக் கதையைத் தன்வரலாற்றாகப் படிப்பது, நம்மையும் அந்த வரலாற்றுப் பாத்திரமாக உணரவைக்கும்.

### ஆசிரியர் குறிப்பு



**ஆசிரியர் பெயர்** : மயிலாப்பூர் பொன்னுசாமி சிவஞானம் (ம.பொ.சி)

**ஊர்** : சென்னை, ஆயிரம் விளக்கு வட்டம், சால்வன் குப்பம்

**பெற்றோர்** : பொன்னுசாமி – சிவகாமி

**காலம்** : 26-06-1906 முதல் 3-10-1995 வரை

**பெயர்** : பெற்றோர் இட்ட இயற்பெயர் – ஞானப்பிரசாகம்; சரபையர் என்னும் முதியவர் 'சிவஞானி' என அழைத்ததால், பின்னர் சிறிது திருத்தத்துடன் 'சிவஞானம்' என நிலைபெற்றது.

**பணி** : பத்திரிகையாளர், எழுத்தாளர்

**சிறப்புகள்** : சிலம்புச் செல்வர், இந்திய விடுதலைப் போராட்ட வீரர், தமிழக உருவாக்கத்தில் பெரும்பங்கு வகித்தவர். 1952 முதல் 1954 வரை சட்டமன்ற மேலவை உறுப்பினர். 1978 முதல் 1986 வரை சட்டமன்ற மேலவைத் தலைவர்.

**உருவாக்கிய அமைப்பு** : தமிழரசுக் கழகம்

**விருது** : **'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு'** என்ற இவருடைய நூலுக்காக 1966-ஆம் ஆண்டு **'சாகித்திய அகாதெமி விருது'** பெற்றார்.

**அரசு செய்த சிறப்புகள்** : திருத்தணியிலும் சென்னை தியாகராய நகரிலும் இவருக்குச் சிலை அமைத்துள்ளது.

### கற்பவை கற்றபின்

**உங்களுக்குப் பிடித்த / நீங்கள் படித்த அறிஞர் ஒருவரின் வாழ்க்கை நிகழ்வைத் தன் வரலாறாக வகுப்பறையில் வழங்குக.**

என்னுடைய வாழ்வில் ஒருநாள் ... (அறிஞர் அண்ணா பேசுகிறார்)

தமிழக முதலமைச்சராக நான் இருந்தபோது, அரிசி வெளிமாநிலங்களுக்குச் செல்லக்கூடாது என்ற கட்டுப்பாடு விதித்திருந்தேன். ஒருநாள், நான் விருத்தாசலம் கூட்டத்தை முடித்துவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தேன். வழியில் சோதனைச் சாவடியில் அவரது எனது நிறுத்தப்பட்டது. அங்கிருந்த வருவாய் அலுவலர், முதலமைச்சரின் மகிழுந்து என்று அறியாமலே திறந்துகாட்டச்

SURA'S

செய்தார். மகிழுந்தின் பின்பக்கம் முழுவதும் மாலைகள், கைத்தறி ஆடைகள், வாழ்த்து மடல்கள் இருந்தன. அவற்றைப் பார்த்த பிறகுதான் அந்த அலுவலருக்கு வந்திருப்பது யார்? என்பது புரிந்தது. உடனே அவர் என் அருகில் வந்து, "தெரியாமல் நடந்துவிட்டது பொறுத்துக் கொள்ளுங்கள்" என்றார்.

ஆனால், நான் அவர் உதவியாளரிடம், "இந்த அலுவலரின் பெயரைக் குறித்துக்கொள்ளுங்கள்" என்றேன். அந்த அலுவலர் தனக்கு ஏதோ நடந்து விடப்போகிறது என அச்சப்பட்டு அழாத குறையாகக் கெஞ்சினார். உடனே, நான், "நாங்கள் போடும் சட்டங்களைச் சரியான முறையில் நிறைவேற்றும் பொறுப்பு உங்களைப் போன்ற அலுவலரின் கையில்தான் இருக்கிறது. இன்று நேரில் உங்கள் செயலைப் பார்த்தேன். உங்களைப் போன்றவர்கள்தாம் உயர் பதவிக்கு வரவேண்டும். அதற்காகத்தான் உங்கள் பெயரைக் கேட்டேன்" என்றேன்.

## திறன் அறிவோம் – புத்தக வினா

### பலவுள் தெரிக.

**2. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ..................**

பிடிஏ–3; செப்.–2021; மே 2022; ஜுன் 2023

அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

**விடை ஈ) சிலப்பதிகாரம்**

**5. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' – மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே–**

பிடிஏ–1; அரையாண்டுத் தேர்வு 2019

அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்

இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

**விடை அ) திருப்பதியும் திருத்தணியும்**

### குறுவினா

பிடிஏ–4; செப்.–2021; மே–2022; மார்ச் 2024, 2026

**3. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.**

**வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று :**

1. வறுமையின் காரணமாக ம.பொ.சி. தொடக்கக் கல்வியைக்கூடத் தொடர இயலவில்லை. ஆனால் அவருடைய அன்னையார் இளமையில் பயிற்றுவித்த பாக்கள் மூலம் இலக்கியப் பயிற்சி பெற்றார்.
2. அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை ஆகிய அம்மானைப் பாடல்களை அவருடைய அன்னையார் பாடும்போது இவரையும் படிக்க வைப்பார். அதனால் சந்தநயம், எதுகை மோனை நயங்களை அறிந்தார். பிள்ளைப் பருவத்திலேயே இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்டார். சித்தர் பாடல்களை மனனம் செய்தார்.
3. உணவுக்காக வைத்திருக்கும் பணத்தில் புத்தகங்களை வாங்கிவிட்டு, பல வேளைகளில் பட்டினி கிடந்திருக்கிறார்.
4. சொற்பொழிவுகளைக் கேட்டு இலக்கிய அறிவு பெற்றார். சிறந்த கருத்துகளை ஏடுகளில் குறித்து வைத்துக் கொள்வார்.

**6. பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியிடுக.**

செப்.–2021; ஜுன் & அரையாண்டுத் தேர்வு 2023

பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன். – ம.பொ.சி.

SURA'S

**விடை :**

"பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி, விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன்." – ம.பொ.சி.

## சிறுவினா

2. **''தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்'' இடம் சுட்டிப் பொருள் விளக்குக.** செப்–21; பிடிஏ–6; ஆகஸ்ட்–2022; மார்ச் 2026

**இடம் :** இத்தொடர், மாநகராட்சி சிறப்புக் கூட்டத்தில், மாநகரத் தந்தை செங்கல்வராயன் தலைமையில் ம.பொ.சிவஞானம் அவர்களால் முழங்கப்பட்டது.

**பொருள் :** இந்திய விடுதலைக்குப் பின் மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. ஆந்திர மாநிலம் பிரிக்கப்பட்டபோது, ஆந்திரத்தின் தலைநகராகச் சென்னை இருக்க வேண்டும் என்ற நீதிபதி வாஞ்சு தலைமையிலான ஒரு நபர் ஆணையத்தை எதிர்த்து முழங்கிய முழக்கம் ஆகும்.

**விளக்கம் :** ஆந்திர மாநிலத்தின் தலைநகராகச் சென்னைதான் இருக்க வேண்டும் என்று ஆந்திரத் தலைவர்கள் கருதினர். அந்நாள் முதல்வர் இராஜாஜிக்கு நிலைமையின் தீவிரத்தை உணர்த்தியபோது, தலைநகர் காக்கத் தன் முதலமைச்சர் பதவியைத் துறக்கவும் அவர் முன் வந்தார். சென்னை மாகாணத்திலிருந்து ஆந்திரத்தைப் பிரித்து அமைப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த நீதிபதி வாஞ்சு தலைமையிலான ஒரு நபர் ஆணையம், ஆந்திரத்தின் தலைநகராகச் சென்னை இருக்க வேண்டும் என்ற இடைக்கால ஏற்பாட்டைப் பரிந்துரைத்திருப்பதாகக் கருத்துகள் நிலவின. இதனால், சென்னை மாநகராட்சியின் சிறப்புக் கூட்டமொன்றை மாநகரத் தந்தை செங்கல்வராயன் தலைமையில் ம.பொ.சி. கூட்டினார். அக்கூட்டத்தில், சென்னை பற்றிய தீர்மானத்தை முன்மொழிந்து "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என்று ம.பொ.சி. முழங்கினார்.

## நெடுவினா

1. **நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.** பிடிஏ–1; செப்.–2020

**முன்னுரை :**

**நாடும் மொழியும் நமது இரு கண்கள்**

நாட்டுப்பற்று, மொழிப்பற்று என்பன ஒவ்வொரு மாணவருக்கும் இரு கண்களைப் போன்றவை. 'நாட்டுப்பற்று' என்பது ஒருவருக்குத் தன்னுடைய தாய்நாட்டின் மீதுள்ள அளவில்லா அன்பு அல்லது ஈடுபாடு ஆகும். தன்னுடைய நாட்டிற்காகப் பலவகைகளில் உதவியாக இருப்பதே, நாட்டுப்பற்று. மாணவப் பருவத்திலேயே நாட்டுப்பற்றுடன் திகழ வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும்.

**நாட்டு விழாக்கள்:**

விடுதலைநாள், குடியரசுநாள், காந்தி பிறந்த தினம் என்று பல விழாக்களை நாம் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறோம். அக்கொண்டாட்டத்திற்குக் காரணமாக இருந்த தியாகிகளை நினைவுகூர்ந்தால் மட்டும் போதுமா? இனிப்புகளைக் கொடுத்து விளம்பரம் தேடிக் கொள்வதால் பயன் உண்டா? என ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்.

**விடுதலைப் போராட்ட வரலாறு :**

ஆங்கிலேயர்கள், சுமார் இருநூறு ஆண்டுகாலம் நம்மை அடிமையாக வைத்திருந்தனர். அவ்வடிமைத்தளையிலிருந்து நம்மைக் காக்கத் தியாகிகள் பலர் தங்களுடைய இன்னுயிரை

ஈந்தனர். தமிழகத்தில் சுப்பிரமணிய சிவா, வ.உ.சிதம்பரனார், திருப்பூர்க் குமரன், இந்திய அளவில் காந்தியடிகள், சுபாஷ் சந்திரபோஸ் போன்ற எண்ணற்ற தியாகிகளின் தியாகத்தை மறக்க முடியுமா? இறுதியில் காந்தியடிகளின் அறவழிப்போராட்டத்தால் இந்திய நாடு, ஆகஸ்ட் பதினைந்தாம் நாள் விடுதலை பெற்றது. அரும்பாடுபட்டுப் பெற்ற விடுதலையைப் பேணிக் காப்பது நமது கடமையாகும்.

**நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு :**

இன்றைய மாணவர்கள், நாளைய தலைவர்கள், மாணவர்கள் சமுதாய உணர்வுடையவர்களாய் வளர்ந்தால்தான் வீடும், நாடும் நலம் பெறும். மாணவர்கள் தம் பள்ளிப் பருவத்தில் தொண்டு செய்வதற்குரிய மனப்பான்மை வளர்த்துக்கொள்ள வேண்டும். தெருக்கள், நீர்நிலைகள், சாலைகள் போன்றவற்றைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். மருத்துவ உதவி, பேரிடர்க் காலங்களில் இயன்ற உதவி செய்தல் வேண்டும். முதியோர், நோயுற்றோர்களுக்கு உதவுதல் வேண்டும்.

**முடிவுரை :**

**"கயவர்களை முந்தி நின்று வீழ்த்துவோம்**
**நாட்டை முத்தாக ஒளிரவைக்க உறுதி ஏற்போம்"**

மாணவர்கள், சமுதாயத்திற்கு ஆற்றும் பணிகளைத் தங்கள் கடமையென எண்ணிச் செயலாற்ற வேண்டும். நம் நாட்டினை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வது ஒவ்வொரு மாணவரின் கடமையாகும். கடமையைச் செய்வோம்!; வலிமையான நாட்டை உருவாக்குவோம்!; நாட்டுக்கும் வீட்டுக்கும் பெருமை சேர்க்கும் வகையில் நல்ல மாணவர்களாக உருவாக வேண்டும்!

## பிடிஏ மற்றும் அரசுத் தேர்வு வினா - விடைகள்

**பலவுள் தெரிக.**

1. குமரி மாவட்டப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர் [பிடிஏ–6]

அ) திரு.பிரகாசம் ஆ) மார்ஷல் நேசமணி

இ) தனிநாயகம் அடிகள் ஈ) ந. முத்துசாமி

**விடை** **ஆ) மார்ஷல் நேசமணி**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.** [பிடிஏ–2]

அம்மானைப் பாடல்கள், சித்தர் பாடல்கள், சொற்பொழிவுகள் போன்றவற்றின் மூலமாக நான் இலக்கிய அறிவு பெற்றேன். அப்போது, அவர்கள் வெளியிடும் சிறந்த கருத்துகளை ஏடுகளில் குறித்து வைத்துக்கொள்வேன். யான் முறையாக ஏட்டுக்கல்வி பெற இயலாமல் போனதால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்யக் கேள்வி ஞானத்தைப் பெறுவதிலேயே மிகுந்த ஆர்வம் காட்டினேன். எனது கேள்வி ஞானத்தைப் பெருக்கிய பெருமை, திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகளுக்கே அதிகம் உண்டு என்றெல்லாம் தமது செவிச்செல்வம் பற்றி ம.பொ.சிவஞானம் குறிப்பிட்டுள்ளார்.

**வினாக்கள் :**

**அ) ம.பொ.சி அவர்கள் கேள்வி ஞானத்தை அதிகமாக யாரிடம் பெற்றதாகக் குறிப்பிடுகிறார்?**

ம.பொ.சி அவர்கள், கேள்வி ஞானத்தை அதிகமாகத் திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகளாரிடம் பெற்றதாகக் குறிப்பிடுகிறார்.

**ஆ) ம.பொ.சி அவர்கள் இலக்கிய அறிவினை எவ்வாறு பெற்றார்?** [செப்–2020]

அம்மானைப் பாடல்கள், சித்தர் பாடல்கள், சொற்பொழிவுகள் போன்றவற்றின் மூலமாக ம.பொ.சி. இலக்கிய அறிவு பெற்றார்.

**இ) ஏட்டுக்கல்வி பெற இயலாத ம.பொ.சி., அதனை எவ்வாறு ஈடு செய்தார்?**

முறையாக ஏட்டுக்கல்வி பெற இயலாமல் போனதால் ஏற்பட்ட இழப்பைக் கேள்வி ஞானத்தால் ஈடு செய்தார்.



SURA'S

**விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க :**

1. **விடை: சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாக ம.பொ.சி. இலக்கிய அறிவு பெற்றார்.** மே–2022; ஜூலை–2024

**வினா:** ம.பொ.சி. இலக்கிய அறிவினை எவ்வாறு பெற்றார்?

2. **விடை: 1906- ஆம் ஆண்டு வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.** மே–2022

**வினா:** 1906 ஆம் ஆண்டு வ.உ.சி. யாருக்கு எதிராக சுதேசிக் கப்பல் நிறுவனத்தை தொடங்கினார்.

3. **விடை: 'தமிழா! துள்ளி எழு' என்னும் தலைப்புடைய துண்டறிக்கையைக் கடற்கரையில் குழுமியிருந்த மக்களிடையே ம.பொ.சி. வழங்கினார்.** ஜூன் 2023

**வினா:** 'தமிழா! துள்ளி எழு!' என்ற துண்டறிக்கையைக் கடற்கரையில் குழுமியிருந்த மக்களிடையே வழங்கியவர் யார்?

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. **'சிலம்புச் செல்வர்' என்று போற்றப்படுபவர் ..................**
   **அ) ம.பொ.சிவஞானம்** ஆ) மார்ஷல் நேசமணி
   இ) மங்கலங்கிழார் ஈ) ம.சங்கரலிங்கம்

2. **ம.பொ.சிவஞானம் அவர்களின் கேள்விஞானம் பெருகுவதற்குக் காரணமாக இருந்தவர் ..................**
   அ) சரபையர் **ஆ) திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள்**
   இ) ம.பொ.சி.யின் அன்னையார் ஈ) ம.பொ.சியின் தந்தையார்

3. **'தமிழா! துள்ளி எழு' என்ற துண்டறிக்கையைக் கடற்கரையில் விநியோகம் செய்தவர் .............**
   அ) வ.உ.சிதம்பரனார் **ஆ) ம.பொ.சிவஞானம்** இ) பாரதியார் ஈ) வ.வே.சு.ஐயர்

4. **சித்தூர் மாவட்டம் முழுவதையும் ஆந்திராவிற்குக் கொடுத்த அமைப்பு ..................**
   **அ) சர்தார் கே.எம்.பணிக்கர் தலைமையிலான மொழிவாரி ஆணையம்**
   ஆ) நீதிபதி வாஞ்சு தலைமையிலான ஒரு நபர் ஆணையம்
   இ) பசல் அலி ஆணையம்
   ஈ) படாஸ்கர் ஆணையம்

5. **ம.பொ.சிவஞானம் அவர்களின் .............. நூல் சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றது.**
   அ) சிலப்பதிகாரமும் தமிழரும் ஆ) வீரபாண்டிய கட்டபொம்மன்
   இ) வள்ளுவர் வகுத்தவழி **ஈ) வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு**

6. **ம.பொ.சி. அவர்களின் இயற்பெயரைச் 'சிவஞானி' என்று மாற்றியவர் ..............**
   அ) திருப்பாதிரிப் புலியூர் ஞானியாரடிகள் **ஆ) சரபையர்**
   இ) ம.பொ.சியின் ஆசிரியர் ஈ) மங்கலங்கிழார்

7. **தமிழகத்தின் வடக்கெல்லை மற்றும் தெற்கெல்லைப் போராட்டத்தில் பங்கு கொண்ட அமைப்பு ..........**
   அ) திராவிட கழகம் ஆ) தென்னிந்திய மகாஜன சபை
   **இ) தமிழரசுக் கழகம்** ஈ) பேராயக் கட்சி

8. **சென்னை மாகாண மீட்பின்போது தமிழகத்தின் முதல்வராக இருந்தவர் .................**
   **அ) இராஜாஜி** ஆ) பனகல் அரசர் இ) காமராஜர் ஈ) பக்தவத்சலம்

9. **தெற்கெல்லைப் போராட்டத்தின் போது, .............. வருகைக்குப் பின் போராட்டம் மேலும் வலுப்பெற்றது.**
   அ) பி.எஸ்.மணி ஆ) ம.சங்கரலிங்கம்
   இ) நாஞ்சில் மணிவர்மன் **ஈ) மார்ஷல் ஏ.நேசமணி**

SURA'S

10. **தெற்கெல்லைப் போராட்டத்தில் தமிழகத்தை விட்டுக் கேரளாவுடன் இணைந்த பகுதிகள்.........**
**அ) தேவிகுளம், பீர்மேடு** ஆ) தோவாளை, அகத்தீசுவரம்
இ) செங்கோட்டை, கொச்சி ஈ) கல்குளம், விளவங்கோடு

11. **இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ............. ஆம் ஆண்டு மிகவும் சிறப்புடைய ஆண்டாகக் கருதப்படுகிறது.**
**அ) 1906** ஆ) 1947 இ) 1931 ஈ) 1942

12. **1906 ஆம் ஆண்டு காந்தியடிகள், 'சத்தியாக்கிரகம்' என்ற அறப்போரை எங்குத் தொடங்கி வைத்தார்?**
அ) இந்தியா **ஆ) தென்னாப்பிரிக்கா** இ) இலங்கை ஈ) வட ஆப்பிரிக்கா

13. **ஆங்கிலேயருக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கி வைத்தவர் .............. .**
அ) ம.பொ.சி ஆ) திரு.வி.க **இ) வ.உ.சி** ஈ) பி.எஸ்.மணி

14. **ம.பொ.சி. பிறந்த ஆண்டு .............. .**
**அ) 1906** ஆ) 1942 இ) 1932 ஈ) 1947

15. **காந்தி - இர்வின் ஒப்பந்தம் நிகழ்ந்த ஆண்டு .............. .**
அ) 1954 ஆ) 1942 இ) 1953 **ஈ) 1931**

16. **ம.பொ.சி க்கு ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை கொடுக்கக் காரணமாக அமைந்தது .............. .**
அ) இடையில் பேசியதற்காக ஆ) ஊர்வலங்களில் கலந்து கொண்டதற்காக
இ) அந்நியத் துணிக்கடை மறியலுக்காக **ஈ) துண்டறிக்கை வழங்கியதற்காக**

17. **'இந்தியாவை விட்டு வெளியேறு' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்ட இடம் .............. .**
அ) தில்லி **ஆ) பம்பாய்** இ) சென்னை ஈ) கொல்கத்தா

18. **ம.பொ.சி காலத்தில் யார் தலைமையில் மொழிவாரி ஆணையம் அமைக்கப்பட்டது?**
அ) பி.ஜே. பொன்னையா **ஆ) சர்தார். கே.எம். பணிக்கர்**
இ) அலி ஈ) செங்கல்வராயன்

19. **தேசிய ஒருமைப்பாட்டிற்குக் கேடில்லாத வகையில் ம.பொ.சி கருதிய நூல் எது .............. .**
அ) திருக்குறள் **ஆ) சிலப்பதிகாரம்** இ) கம்பராமாயணம் ஈ) புறநானூறு

20. **"தமிழினத்தை ஒன்றுபடுத்த எடுத்துக்கொண்ட முயற்சிக்குப் பயன்படக்கூடிய ஓர் இலக்கியம் தமிழில் உண்டென்றால் அது ............. ஐ தவிர வேறில்லை" என்று ம.பொ.சி உறுதியாகக் கூறுகிறார்.**
அ) திருக்குறள் ஆ) கம்பராமாயணம் இ) சீவகசிந்தாமணி **ஈ) சிலப்பதிகாரம்**

21. **திருத்தணி வரையுள்ள தமிழ் நிலங்கள் மீட்கப்பட காரணமான ஆணையம் .............. .**
அ) இராஜாஜி ஆ) சர்தார் கே.எம். பணிக்கர்
**இ) படாஸ்கர்** ஈ) ஞானியாரடிகள்

22. **தலைநகர் காக்கத் தன் முதலமைச்சர் பதவியைத் துறக்க முன்வந்தவர் .............. .**
அ) பக்தவச்சலம் **ஆ) இராஜாஜி** இ) காமராஜர் ஈ) அண்ணா

23. **"தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என்ற தீர்மானம் யார் தலைமையில் முன்மொழியப்பட்டது?**
**அ) செங்கல்வராயன்** ஆ) படாஸ்கர் இ) பணிக்கர் ஈ) ம.பொ.சி

24. **'சென்னை தமிழருக்கே!' என்ற உறுதிமொழியொன்றை வெளியிட்ட பிரதமர் .............. .**
அ) இந்திராகாந்தி **ஆ) நேரு**
இ) லால்பகதூர் சாஸ்திரி ஈ) வாஜ்பாய்

25. ம.பொ.சி யின் தெற்கெல்லைக் கிளர்ச்சி பற்றிய முதல் பேச்சு எங்கு நடந்தது?
அ) கன்னியாகுமரி ஆ) கேரளா **இ) நாகர்கோவில்** ஈ) திருநெல்வேலி

26. தெற்கெல்லைக் கிளர்ச்சியில் திருவிதாங்கூர் ஆட்சி நடத்திய துப்பாக்கிச் சூடு காரணமாக உயிர் நீத்த தமிழரசுக் கழகத் தோழர்கள் யாவர்?
அ) தானுலிங்கம் ஆ) மணிவர்மன்
இ) காந்திராமன் **ஈ) தேவசகாயம், செல்லையா**

27. ஆஸ்டிரியா நாட்டுத் தலைநகரம் .............. .
**அ) வியன்னா** ஆ) நியூயார்க் இ) டோக்கியோ ஈ) எதுவுமில்லை

28. ம.பொ.சிவஞானத்தின் தன் வரலாற்று நூல்?
அ) வனவாசம் மனவாசம் **ஆ) எனது போராட்டம்**
இ) என் கதை ஈ) இதுவரை நான்

29. தமிழரசுக் கழகத்தைத் தொடங்கியவர் .............. .
**அ) ம.பொ.சிவஞானம்** ஆ) மங்கலங்கிழார்
இ) நேசமணி ஈ) ம. சங்கரலிங்கம்

30. பொருத்துக:

| | | |
|---|---|---|
| (அ) 1931 | - | 1) காந்தி இர்வின் ஒப்பந்தம் |
| (ஆ) 1906 | - | 2) இந்தியாவை விட்டு வெளியேறு |
| (இ) 1942 | - | 3) அலி ஆணையம் |
| (ஈ) 1955 | - | 4) சத்தியாக்கிரகம் |

**அ) 1, 4, 2, 3** ஆ) 1, 3, 2, 4 இ) 4, 3, 2, 1 ஈ) 4, 2, 1, 3

31. வடக்கெல்லை மீட்சிக்கான முதல் அழைப்பை விடுத்தவர் .............. .
அ) காந்திராமன் ஆ) ம.பொ.சி இ) ஞானியாரடிகள் **ஈ) மங்கலங்கிழார்**

32. கூற்று : 'தமிழா! துள்ளி எழு'
விளக்கம் : தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையை நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்குத் துண்டறிக்கை மூலம் வழங்கப்பட்டது.
அ) கூற்று தவறு, விளக்கம் சரி ஆ) கூற்று, விளக்கம் இரண்டும் தவறு
**இ) கூற்று, விளக்கம் இரண்டும் சரி** ஈ) கூற்று சரி, விளக்கம் தவறு

33. 'மதராஸ் ஸ்டேட்' என்ற பெயர் நீடித்ததை எதிர்த்து உண்ணாநிலைப் போராட்டம் நடத்தி உயிர் துறந்தவர்
**அ) சங்கரலிங்கனார்** ஆ) ம.பொ.சி இ) நேசமணி ஈ) இராஜாஜி

34. 'மதராஸ் ஸ்டேட்' என்ற பெயரைத் 'தமிழ்நாடு' என்றாக்கியவர்
அ) இராஜாஜி **ஆ) அறிஞர் அண்ணா** இ) நீதிபதி வாஞ்சு ஈ) சங்கரலிங்கனார்

35. 'நும் நாடு யாது எனில்? தமிழ்நாடு என்றல்!' இவ்வரிக்குச் சொந்தக்காரர்
அ) இளங்குமரனார் **ஆ) இளம்பூரணர்** இ) ம.பொ.சி ஈ) பி.எஸ்.மணி

## குறுவினா

1. ம.பொ.சி. ஒரு புத்தகப்பித்தன் என்பதை விளக்குக.
   1. ம.பொ.சி. தாய்மொழியில் நல்ல புலமை பெற முயன்றார். தன் அறியாமையுடன் கடும்போர் நடத்தியுள்ளார். பணப்பற்றாக்குறையினால் பழைய புத்தகங்கள் விற்கும் கடைகளுக்குச் சென்று விரும்பிய புத்தகங்களை மிகமிகக் குறைந்த விலைக்கு வாங்கிப் படிப்பார்.

2. புத்தகங்கள் வாங்கிவிட்டுப் பலவேளைகளில் பட்டினி கிடப்பார். அவர் முயன்று சேர்த்து வைத்துள்ள சொத்து அவரிடமுள்ள பல்லாயிரக்கணக்கான நூல்கள்.

2. **ம.பொ.சி. சிறையிலிடப்பட்டதற்கான காரணம் யாது?**

ம.பொ.சி. 30.09.1932-இல் 'தமிழா! துள்ளி எழு' என்னும் தலைப்பில் துண்டறிக்கை ஒன்றைக் கடற்கரையில் குழுமியிருந்தபோது மக்களிடையே வழங்கியதற்காக ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை பெற்றார்.

3. **ம.பொ.சி. வேலூர் சிறையில் அடைக்கப்பட்ட போது சந்தித்த தலைவர்கள் யாவர்?**

காமராசர், தீரர் சத்தியமூர்த்தி, பிரகாசம் உட்பட தென்னகத்தின் முன்னணித் தலைவர்களை வேலூர் சிறையில் ம.பொ.சி. சந்தித்தார்.

4. **வடக்கெல்லைப் போராட்டத்தில் ம.பொ.சி.யுடன் சிறைபட்டவர்கள் யாவர்?**

மங்கலங்கிழார், விநாயகம், ஈ.எஸ்.தியாகராஜன், ரஷீத்.

5. **ம.பொ.சி. அவர்களின் சட்டமன்றப் பணிகள் யாவை?**
   1. 1952 முதல் 1954 வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தார்.
   2. 1978 முதல் 1986 வரை சட்டமன்ற மேலவைத் தலைவராகப் பதவி வகித்தார்.

6. **தமிழக வடக்கெல்லைப் போராட்டத்தில் சிறை சென்று உயிர் துறந்தவர்கள் யாவர்?**
   1. வடக்கெல்லையில் மங்கலங்கிழார் தலைமையில் நடந்த போராட்டத்தில் ஈடுபட்டு, ஏராளமானோர் சிறை சென்றனர்.
   2. அவர்களுள் இராஜமுந்திரி சிறையிலிருந்த திருவாலங்காடு கோவிந்தராசன், பழனி சிறையிலிருந்த மாணிக்கம் ஆகிய இருவரும் சிறையிலேயே உயிர் துறந்தனர்.

**சிறுவினா**

1. **ம.பொ.சி. அவர்களின் வாழ்நாள் மகிழ்ச்சி யாது?**
   1. புறநானூற்றிலும் சிலப்பதிகாரத்திலும் தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கட மலையாகவும் தெற்கெல்லை குமரிமுனையாகவும் கூறப்படுவதனைப் படித்து வியப்புற்றவர் ம.பொ.சி. மலையும் கடலும் ஒரு நாட்டின் இயற்கை எல்லைகளாக அமைவதென்பது அந்த நாட்டின் தவப்பயனாகும்.
   2. அந்தத் தெய்வீக எல்லைகளை ஓரளவேனும் தமிழகம் திரும்பப் பெற்றது என்பதே, ம.பொ.சி. அவர்களின் வாழ்நாள் மகிழ்ச்சியாகும்.

2. **தமிழரின் கடல் கடந்த வணிகம் பற்றிய சான்று தருக.**
   1. ஆஸ்டிரியா நாட்டுத் தலைநகரமான வியன்னாவில் அமைந்துள்ள அருங்காட்சியகத்தில் 'பேபிரஸ்' தாளில் எழுதப்பட்ட அரிய கையெழுத்துச் சுவடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.
   2. இச்சுவடி, சேரநாட்டுத் துறைமுகமான முசிறியில் வாழ்ந்த தமிழ் வணிகருக்கும் எகிப்து நாட்டின் 'அலெக்ஸாண்டிரியா' துறைமுகத்தில் வாழ்ந்த கிரேக்க வணிகருக்கும் இடையிலான வணிக ஒப்பந்தம். இது கி.பி. 2ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது.

3. **'இந்தியாவை விட்டு வெளியேறு' என்ற போராட்டத்தில் ஈடுபட்டதற்காக ம.பொ.சி. அனுபவித்த சிறைவாசம் பற்றி எழுதுக.**
   1. 'இந்தியாவை விட்டு வெளியேறு' என்ற போராட்டத்தில் ஈடுபட்ட ம.பொ.சி., 1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13ஆம் நாள் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார்.
   2. அங்குக் காமராசர், தீரர் சத்தியமூர்த்தி, பிரகாசம் உட்பட, தென்னகத்தின் முன்னணித் தலைவர்கள் பலரைச் சந்தித்தார்.

SURA'S

3. சில நாள்களுக்குப் பின் அவர்கள் வேலூர் சிறையிலிருந்து அமராவதிச் சிறைக்கு மாற்றப்பட்டனர்.
4. சிறையில் அவர்கள் தங்கியிருந்த இடத்தின் மேற்கூரை துத்தநாகத் தகடுகளால் வேயப்பட்டிருந்தது. கோடைக்காலத்தில் 120 பாகை அளவில் (120°) வெயிலில், மின்சார விசிறிகூட இல்லாமல் மிகவும் துயரத்தை அனுபவித்தனர்.

4. **மார்ஷல் ஏ.நேசமணி பற்றி எழுதுக.**

1. இளம்வயதிலேயே சமூக விடுதலைக்காகப் போராடியவர்; வழக்கறிஞர்.
2. நாகர்கோவில் நகர்மன்றத் தலைவராகவும் சட்டமன்ற உறுப்பினராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்.
3. குமரி மாவட்டப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர். இதனால், மார்ஷல் நேசமணி என்று அழைக்கப்பட்டார்.
4. 1956 நவம்பர் 1 ஆம் நாள், கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்து, தமிழகத்தின் தென் எல்லையாக மாறியது.
5. இவருடைய நினைவைப் போற்றும் வகையில் தமிழக அரசு இவருக்கு நாகர்கோவிலில் சிலையோடு மணி மண்டபமும் அமைத்துள்ளது.

5. **ம.பொ.சி. அவர்கள் சிலப்பதிகாரத்தை மக்களிடம் கொண்டு செல்ல விரும்பியதற்கான காரணங்கள் யாவை?**

1. இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்குக் கேடில்லாத வகையில், தமிழினத்தை ஒன்றுபடுத்த எடுத்துக் கொண்ட முயற்சிக்குப் பயன்படக்கூடிய ஓர் இலக்கியம் தமிழில் உண்டென்றால் அது சிலப்பதிகாரத்தைத் தவிர வேறில்லை என்பதில் ம.பொ.சி. உறுதியாக இருந்தார்.
2. "இளங்கோ தந்த சிலம்பு, தமிழினத்தின் பொதுச் சொத்து" என்று கூறிய அவர், தமிழகத்தின் பட்டிதொட்டியெங்கும் சிலப்பதிகார மாநாட்டை நடத்தினார்.

6. **"மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்."- இடம் சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்:** இத்தொடர், தமிழகத்தின் வடக்கெல்லைப் போராட்டத்தில் ம.பொ.சி. அவர்களால் முழங்கப்பெற்றது.

**பொருள்:** மொழிவாரியாக மாநிலம் பிரிக்கப்பட்டபோது, சித்தூர் மாவட்டம் முழுமையும் ஆந்திரப் பகுதிக்குச் சென்றுவிட்டதால், திருத்தணியையாவது மீட்க வேண்டும் என்ற தீர்மானத்தின்படி நடத்திய போராட்டத்தில் எழுந்த முழக்கமாகும்.

**விளக்கம்:** சர்தார் கே.எம். பணிக்கர் தலைமையில் மத்திய அரசால் அமைக்கப்பட்ட மொழிவாரி ஆணையம், சித்தூர் மாவட்டம் முழுவதையும் ஆந்திராவிற்குக் கொடுத்துவிட்டது. அந்த மாவட்டத்தில் இருந்த திருப்பதி (மாலவன் குன்றம்) ஆந்திராவிற்கு உடைமையாகிவிட்டது. அதனால், திருத்தணியையாவது (வேலவன் குன்றம்) தமிழகத்துடன் இணைக்க வேண்டும் என்ற போராட்டத்தின்போது இம்முழக்கம் முழங்கப்பெற்றது. இதன் விளைவாகப் படாஸ்கர் ஆணையம் அமைக்கப்பட்டுத் திருத்தணி வரையுள்ள தமிழ் நிலங்கள் மீட்கப்பட்டன.

## விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க :

1. **விடை: ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார். வ.உ.சி**

**வினா:** ஆங்கிலேயருக்கு எதிராக வ.உ.சி செய்தது யாது?

SURA'S

2. **விடை: வடக்கெல்லைப் போராட்டத்தின் விளைவாக சித்தூர் மாவட்டம் ஆந்திர மாநிலத்துடன் இணைக்கப்பட்டது.**

**வினா:** எதன் விளைவாகச் சித்தூர் மாவட்டம் ஆந்திர மாநிலத்துடன் இணைக்கப்பட்டது?

3. **விடை: ம.பொ.சி அவர்கள் திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள் மூலம் கேள்வி ஞானத்தைப் பெற்றார்.**

**வினா:** ம.பொ.சி அவர்கள் கேள்வி ஞானத்தை எவ்வாறு பெற்றார்?

**நிறுத்தற்குறியிடுக :**

1. **திருக்குறளையோ கம்பராமாயணத்தையோ விரும்பாதவனல்லன் நான் என்றார் ம.பொ.சி.**

திருக்குறளையோ, கம்பராமாயணத்தையோ விரும்பாதவனல்லன் நான் என்றார் ம.பொ.சி.

2. **மாலவன் குன்றம் போனாலென்ன வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும் என்று முழங்கினோம்**

"மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்" என்று முழங்கினோம்.

**வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக :**

1. **ம.பொ.சியின் இளமை காலத்தில் நாடெங்கிலும் சுதந்திர போராட்டம் நடைபெற்று கொண்டிருந்தது.**

ம.பொ.சியின் இளமை**க்** காலத்தில் நாடெங்கிலும் சுதந்திர**ப்** போராட்டம் நடைபெற்று**க்** கொண்டிருந்தது.

2. **தமிழக வடக்கு__ தெற்கு எல்லைக் கிளர்ச்சிகளை __ தமிழகம் தழுவிய அளவில் தொடங்கிவைத்தது தமிழரசு __கழகம்.**

தமிழக வடக்கு**த்** தெற்கு எல்லைக் கிளர்ச்சிகளை**த்** தமிழகம் தழுவிய அளவில் தொடங்கிவைத்தது தமிழரசு**க்** கழகம்.

☆ ☆ ☆

SURA'S

**இயல் 6**

# சிலப்பதிகாரம்

### கவிதைப்பேழை

- இளங்கோவடிகள்

**கரு**

- ✳ உலகம் வணிகமயமாகி உள்ளது. 'எங்கும் வணிகம் எதிலும் வணிகம்!' பொருள்களை உற்பத்தி செய்வதைவிட சந்தைப்படுத்துவதில் தான் உலக நாடுகள் அக்கறை காட்டிவருகின்றன.
- ✳ இன்று நேற்றல்ல; பண்டைக் காலந்தொட்டே வணிகமும் தொழிலும் ஒழுங்கு முறையுடன் சிறந்திருந்ததைக் காப்பியங்களும் காட்சிப்படுத்துகின்றன. அவற்றுள் சிலப்பதிகாரத்தில் மருவூர்ப்பாக்க வணிகம் பற்றி இச்செய்யுள் விளக்குகிறது.

**ஆசிரியர் குறிப்பு**

**பெயர்** : இளங்கோவடிகள்
**நாடு** : சேரநாடு
**தந்தை** : இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்
**தாய்** : நற்சோனை (சோழநாட்டு இளவரசி)
**தமையன்** : சேரன் செங்குட்டுவன்
**காலம்** : கி.பி. 2-ஆம் நூற்றாண்டு
**சமகாலப் புலவர்** : சீத்தலைச் சாத்தனார்

"இளையவரான இளங்கோவடிகளே நாடாள்வார்!" என்று கணியன் (சோதிடன்) கூறிய கருத்தைப் பொய்யாக்கும் வண்ணம், இளங்கோ இளமையிலேயே துறவு பூண்டு குணவாயிற் கோட்டத்தில் தங்கினார்.

**நூற்குறிப்பு**

ஐம்பெருங்காப்பியங்களுள், முதலாவது காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும்.

சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம். கண்ணகியின் சிலம்பால் விளைந்த நிகழ்வை முதன்மையாகக் கொண்டதால் இக்காப்பியம் 'சிலப்பதிகாரம்' என்று பெயர் பெற்றது.

**நூலமைப்பு**

காண்டங்கள் - 3 (புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம்) புகார்க்காண்டம் - 10 காதைகள், மதுரைக்காண்டம் - 13 காதைகள், வஞ்சிக்காண்டம் - 7 காதைகள்

காதைகள் - 30. 'காதை' என்றால் கதை தழுவியப் பாட்டு என்பது பொருளாகும். **காண்டம்** என்பது பெரிய பிரிவாகும். 'காதை' என்பது அதன் உட்பிரிவாகும்.

**காப்பியம் தோன்றிய காலம்**

கி.பி. இரண்டாம் நூற்றாண்டு **சேரன் செங்குட்டுவன்,** கண்ணகிக்குக் கோயில் கட்டி, விழா எடுத்த போது, இலங்கை மன்னன் **'கயவாகு'** உடனிருந்ததாக 'வரந்தரு' காதையில் இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். கயவாகு மன்னனின் ஆட்சி, கி.பி. 2ஆம் நூற்றாண்டு ஆகும்.

**26. பொருத்துக.**

அ) வண்ணமும் சுண்ணமும் - 1. பெயரெச்சம்

ஆ) மேவிய - 2. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

இ) அறியா - 3 பண்புத்தொகை

ஈ) அருங்கலம் - 4. எண்ணும்மை

அ) 4, 3, 2, 1 **ஆ) 4, 1, 2, 3** இ) 4, 1, 3, 2 ஈ) 3, 1, 2, 4

**27. சிறு குறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு**
**மறு இன்றி விளங்கும் மருவூர்ப் பாக்கமும்**
**- இவ்வடியில் இடம் பெற்ற தொடை நயத்தைச் சுட்டுக.**

**அ) அடி எதுகை** ஆ) அடி இயைபு இ) அடி மோனை ஈ) எதுவுமில்லை

**28. 'பெருங்குணத்துக் காதலாள் நடந்த பெருவழி'**
**- இவ்வடி யாரைக் குறிக்கிறது?**

அ) கோவலன் ஆ) மாதவி இ) மணிமேகலை **ஈ) கண்ணகி**

**29. மடை - என்பதற்கான சரியான கூற்றைத் தேர்க.**

அ) ஆற்று நீரை வாய்க்காலில் திருப்பி விடுவது

ஆ) வாய்க்கால் நீரைப் பயிருக்குத் திருப்பிவிடுவது

**இ) வாய்க்கால் நீரை வயலுக்குத் திருப்பிவிடுவது**

ஈ) குளத்து நீரை வயலுக்குத் திருப்பிவிடுவது.

**30. ஐம்பெருங்காப்பிய முறைவைப்புப் பற்றிய செய்யுள் இடம் பெறும் உலா நூல்...................**

அ) திருக்கைலாய ஞானஉலா ஆ) மூவருலா

**இ) திருத்தணிகையுலா** ஈ) திருவிடைமருதூர் உலா

**31. 'தூசும் துகிரும்' - இலக்கணக்குறிப்புத் தருக.**

அ) உம்மைத்தொகை ஆ) வினைத்தொகை இ) உவமைத்தொகை **ஈ) எண்ணும்மை**

**32. 'வெறுக்கை' - இச்சொல்லின் பொருள்**

அ) வெற்றிடம் ஆ) வெறும் கை **இ) செல்வம்** ஈ) தாகம்

## குறுவினா

**1. சிலப்பதிகாரம் படைக்கப்பட்ட வரலாற்றைக் கூறுக.**

1. சிலப்பதிகாரத்தின் ஆசிரியர், இளங்கோவடிகள். இவர், சேர மரபைச் சேர்ந்தவர்.
2. மணிமேகலையின் ஆசிரியர், சீத்தலைச் சாத்தனார் கோவலன் கண்ணகிக் கதையைக் கூறி, "அடிகள் நீரே அருளுக!" என்றதால் இளங்கோவடிகளும் "நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்" என இக்காப்பியம் படைத்தார்.

**2. ஏழு வகை இசைகள் யாவை?**

குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்.

**3. மருவூர்ப்பாக்க வீதிகளில் விற்கப்பட்ட மணப்பொருள்கள் யாவை?**

வண்ணக்குழம்பு, சுண்ணப்பொடி, குளிர்ந்த மணச்சாந்து, பூ, நறுமணப் புகைப் பொருள்கள், அகில் முதலான மணப் பொருள்கள் மருவூர்ப்பாக்க வீதிகளில் விற்பனை செய்யப்பட்டன.

**4. கண்ணகியும் கோவலனும் 'கொடும்பாளூர்' என்ற இடத்தை எந்த வழியாக வந்தடைந்தனர்?**

கண்ணகியும் கோவலனும் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து, திருவரங்கம், உறையூர் மற்றும் வழியாகக் கொடும்பாளூர் என்ற இடத்தை வந்தடைந்தனர்.

SURA'S

5. **மருவூர்ப்பாக்கம் நெசவாளரின் கைத்தொழில் திறமைப் பற்றி சிலப்பதிகாரம் கூறும் செய்தியை எழுதுக.**

பட்டுநூல், பருத்திநூல், விலங்குகளின் உரோமம் ஆகியவற்றைக் கொண்டு அழகாகப் பின்னிக் கட்டும் கைத்தொழில் வல்லுநர் என்று மருவூர்ப்பாக்கம் நெசவாளரின் திறமை பற்றிச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

6. **மருவூர்ப்பாக்கம் பற்றிய செய்திகளில் எவற்றிற்கு எண்கள் கொடுத்து அடையாளப்படுத்தப்பட்டுள்ளன?**

தானியங்கள் – எட்டுவகை
நறுமணப்பொருள்கள் – ஐந்து வகை
இசைகள் – ஏழு வகை

**சிறுவினா**

1. **மருவூர்ப்பாக்கத்தில் அமைந்திருந்த வீதிகள் குறித்து எழுதுக.**

**மருவூர்ப்பாக்கத்தில் அமைந்திருந்த வீதிகள் :**

1. பட்டுநூல், பருத்திநூல், முடி ஆகியவற்றைக் கொண்டு அழகாகப் பின்னிக் கட்டும் கைத்தொழில் வல்லுநரான நெசவாளர் வாழும் வீதிகள்.
2. பட்டும், பவளமும், சந்தனமும், அகிலும், முத்தும், மணியும், பொன்னும் அளக்க முடியாத அளவிற்குக் குவிந்து கிடக்கும் வளம் நிறைந்த அகன்ற வணிக வீதிகள்.
3. எட்டுவகைத் தானியங்களும் குவிந்து கிடக்கும் கூலக்கடை வீதிகள்.

2. **மருவூர்ப்பாக்கத்தை இருப்பிடமாகக் கொண்டவர்கள் யாவர்? அவர்களின் திறமை யாது?**

1. ஏழு இசைகளைக் குற்றமில்லாமல் இசைக்கும் பெரும்பாணர்கள்.
2. சிறுசிறு கைத்தொழில் செய்வோர்.
3. பிறருக்கு ஏவல் செய்வோர் ஆகியோர் மருவூர்ப்பாக்கத்தை இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்தனர்.

**மருவூர்ப்பாக்கத்தின் பெரும்பாணர்களின் திறமை :**

'குழல்' மற்றும் 'யாழ்' ஆகிய இசைக்கருவிகளில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழு இசைகளைச் (ச, ரி, க, ம, ப, த, நி) குற்றமில்லாமல் இசைக்கும் திறமையுடையவர்கள்.

3. **"சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு**
**மறுஇன்றி விளங்கும் மருவூர்ப் பாக்கமும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக**

**இடம் :** இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரப் புகார்க் காண்டத்தில், இந்திரவிழா ஊரெடுத்த காதையில் மருவூர்ப்பாக்கத் தெருக்களில் நடைபெற்ற வணிகம் பற்றிக் கூறுமிடத்தில் இவ்வடிகள் இடம் பெற்றுள்ளன.

**பொருள் விளக்கம் :** மருவூர்ப்பாக்கத்தின் தெருக்களில் சிறுசிறு கைத்தொழில் செய்வோர், பிறருக்கு ஏவல் செய்வோர் வாழும் இடங்களும் உள்ளன. இவை அனைத்தும் குற்றமின்றிச் சிறப்புடன் அமைந்து விளங்கப் பரந்து கிடந்தன.

☆ ☆ ☆

SURA'S

# மொழித்திறன் பயிற்சிகள்

## வாக்கியப் பிழைகளைத் திருத்துதல்

1. **செய்திகளை வாசிப்பது மணவாளன்.**
   செய்திகளை வாசிப்பவர் மணவாளன்.
2. **அவள் குருடி அல்ல.**
   அவள் குருடி அல்லள்.
3. **அவை மரங்கள் அன்று.**
   அவை மரங்கள் அல்ல.
4. **மக்கள் வாழ்கிறார்.**
   மக்கள் வாழ்கின்றனர்.
5. **மலர்விழி பால் சாப்பிட்டாள்.**
   மலர்விழி பால் அருந்தினாள்.
6. **தென்றல் மெல்ல வீசின.**
   தென்றல் மெல்ல வீசியது.
7. **நளவெண்பாவை எழுதியவர் புகழேந்தி ஆகும்.**
   நளவெண்பாவை எழுதியவர் புகழேந்தி ஆவார்.
8. **ஓவியம் வரைந்தது கந்தன்.**
   ஓவியம் வரைந்தவன் கந்தன்.
9. **நிள்! கவநி! புரப்படு!**
   நில்! கவனி! புறப்படு!
10. **அரம் செய விறும்பு.**
    அறம் செய விரும்பு.

## மரபுப் பிழையை நீக்கி எழுதுதல்

### I. மரபுப் பிழையை நீக்கி எழுதுக.

1. **மாந்தோட்டத்தில் குயில் பேசியது.**
   மாந்தோப்பில் குயில் **கூவியது.**
2. **கோழி கத்த, மயில் கூவியது.**
   கோழி **கொக்கரிக்க,** மயில் **அகவியது.**
3. **எருது கீச்சிட எலி எக்காளமிட்டது.**
   எருது **எக்காளமிட** எலி **கீச்சிட்டது.**
4. **கவிஞர் செய்யுள் எழுதினார்.**
   கவிஞர் செய்யுள் **இயற்றினார்.**
5. **பனை இலையால் கூரை வேய்ந்தான்.**
   **பனையோலையால்** கூரை வேய்ந்தான்.
6. **கரும்புக் காட்டில் யானைக் கூட்டம் நின்றது.**
   **கரும்புத்தோப்பில்** யானைக் கூட்டம் நின்றது.
7. **கிடாரி கன்று போட்டது.**
   கிடாரி கன்று **ஈன்றது.**
8. **கோழிக்குட்டி, பசுங்குட்டி, கீரிக்குட்டி.**
   கோழிக்**குஞ்சு**, பசுங்**கன்று**, கீரிப்**பிள்ளை.**
9. **சிங்கக் குட்டி அழகாக உள்ளது.**
   சிங்கக் **குருளை** அழகாக உள்ளது.

### II. கீழுள்ள மரபுத் தொடர்களைச் சொற்றொடரில் அமைக்க :

1. **வாழையடி வாழையாய் : (பரம்பரையாய்)**
   தமிழர்களிடம் விருந்தோம்பல் பண்பு, **வாழையடி வாழையாய்** வளர்ந்து வருகிறது.
2. **அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு : (பெண்களுக்கு கல்வி அவசியமில்லை)**
   **அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு** என்னும் மூடப்பழக்கம் இன்று மலையேறிவிட்டது.
3. **கயிறு திரித்தல் : (இல்லாததைச் சொல்கிறான்)**
   பிடிஏ–4
   வானத்திலிருந்து ஒளிப்பிழம்பாய்த் தட்டு வடிவில் ஒன்று இறங்கியதாக ஒருவன் கயிறு திரித்தான்.
4. **கண்துடைப்பு : (போலியாகச் செயல்படுதல்)**
   பெற்றோர் கண்டிப்பார்களே என்று **கண்துடைப்பாகப்** படிக்கின்ற மாணவர்கள் தேர்வில் வெற்றி பெற இயலாது.
5. **கை ஓங்கியது : (மேன்மைப்பட்டது)**
   பாகிஸ்தானோடு நடைபெற்ற கிரிக்கெட்டு போட்டியில் இந்திய அணியின் **கை ஓங்கிய** போது, இந்திய மக்களிடையே எழுந்த மகிழ்ச்சிக்கும் பேராரவாரத்திற்கும் அளவே இல்லை.

### III. உவமைத்தொடர்களைச் சொற்றொடரில் அமைக்க.

1. **இலவு காத்த கிளி போல : இலவு காத்த கிளி போல** தண்ணீருக்காகக் குடங்களுடன் மக்கள் காத்து நின்றனர்.
2. **காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல :** தமிழர்கள் தமிழ்மொழியை மறந்து பிறமொழிகளைப் பேசுவதைக் கேட்கும் போது **காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல** இருக்கிறது.
3. **அடியற்ற மரம் போல :** தந்தை இறந்த துயரச் செய்தியைக் கேட்டதும் மகன் **அடியற்ற மரம் போல** வீழ்ந்தான்.
4. **மடைதிறந்த வெள்ளம் போல :** அறிஞர் அண்ணா அவர்கள் **மடை திறந்த வெள்ளம் போல** பேசும் ஆற்றலுடையவர்.
5. **கல்மேல் எழுத்துப்போல :** இராஜராஜ சோழனின் வீரதீரச் செயல்கள் **கல்மேல் எழுத்துப் போல** மனத்தில் அழுத்தமாகப் பதிந்தது.

## தொடரை மாற்றி அமைத்தல்

1. **பூம்புகார்ச் சிற்பங்கள் மிகவும் அழகாய் உள்ளன. – செய்தி வாக்கியத்தை வினா வாக்கியமாக மாற்றுக.**
   பூம்புகார்ச் சிற்பங்கள் மிகவும் அழகாய் உள்ளனவா?

SURA'S

**2. ‘அறம் செய்’ – கட்டளை வாக்கியத்தைச் செய்திவாக்கியமாக மாற்றுக.**
அறம் செய்ய வேண்டும்.

**3. முயன்றால் முடியாததும் உண்டோ? – இவ்வினா வாக்கியத்தைச் செய்தி வாக்கியமாக மாற்றுக.**
முயன்றால் முடியாதது இல்லை.

**4. முயற்சி செய்ய வேண்டும் – கட்டளை வாக்கியமாக மாற்றுக.**
முயற்சி செய்.

**5. வள்ளுவரை அனைவரும் அறிவர் – வினா வாக்கியமாக மாற்றுக.**
வள்ளுவரை அனைவரும் அறிவரோ?

## இலக்கிய நயம் பாராட்டல்

**எதுகை** : செய்யுளின் அடுத்தடுத்த அடிகளில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை ஆகும்.
**மோனை** : செய்யுளின் அடுத்தடுத்த அடிகளில் முதலெழுத்து ஒன்றி வருவது மோனை ஆகும்.
**முரண்தொடை** : முரண்பாடான கருத்துகள் வந்தால் அது முரண்தொடையாகும்.
**இயைபு நயம்** : செய்யுளின் அடுத்தடுத்த அடிகளில் இறுதி எழுத்து ஒன்றி வருவது இயைபு நயமாகும்.

**1.** பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதைவணக்கம் செய்தல் வேண்டும்.

**- பாரதியார்**

**திரண்ட கருத்து :** பிற நாடுகளைச் சேர்ந்த சிறந்த அறிஞர்களின் படைப்பை தமிழ்மொழியில் மொழிபெயர்க்க வேண்டும். என்றும் அழியாத புகழுடைய நூல்கள் பலவற்றைத் தமிழில் புதிதாக இயற்ற வேண்டும். நமக்கு நாமே நம்முடைய பழைய புராணங்களைப் பேசிக் காலத்தை வீணே கழிப்பதில் எந்தப் பெருமையும் கிடையாது.திறமான நம்முடைய படைப்புகளை, படித்து அதற்கு வெளிநாட்டார் மரியாதை செய்ய வேண்டும்.

**எதுகை** : பிறநாட்டு, இறவாத, திறமான **மோனை** : இறவாத, இயற்றல், மறைவாக, மகிமை

**இயைபு** : வேண்டும், வேண்டும்.

**2.** பாலைவனம் சோலைவனமாக வேண்டும்;
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்;
சாலைகளிற் பலதொழிலும் பெருக வேண்டும்;
சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்;
சீலைஉடை கதருடையாய்த் திகழ வேண்டும்;
தேசபக்தி செழுந்தோங்கி வளர வேண்டும்;
வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும்;
வெற்றியின்மேல் வெற்றி எமக்கெய்த வேண்டும்;

**- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

**திரண்ட கருத்து:** பாலைவனம், சோலைவனமாக மாறவேண்டும். அச்சோலை வனத்திலே பசுங்கிளிகள் கொஞ்சிப் பாடவேண்டும். நாம் செல்லும் சாலைகளில் எல்லாம் பலவகையான தொழிற்சாலைகள் பெருக வேண்டும். கற்றறிந்தோர் சபைகளிலே தம் வாதத்திறமையை எடுத்தியம்ப வேண்டும். சீலை உடைகளைத் தவிர்த்துக் கதர் உடைகளாக இருக்க வேண்டும். நாம் நாட்டின் வேலையில்லா திண்டாட்டம் நீங்க வேண்டும். நம் நாடு அனைத்துத் துறைகளிலும் முன்னேறி எல்லையில்லாப் புகழை அடைய வேண்டும். அப்படிப்பட்ட புகழ் வெற்றி மேன்மேலும் குவிய வேண்டும் என தன் கனவை வளரும் சமுதாயத்திற்கு எடுத்துக் கூறுகிறார் ஆசிரியர்.

**மையக் கருத்து:** நம் நாடு எல்லா வளமும் பெற வேண்டும் மக்களுக்குத் தேசபக்தி வளர வேண்டும் என்பதே இப்பாடலின் மையக்கருத்தாகும்.

**எதுகை** : பாலைவனம், சோலைவனமாக, சாலைகளிற், வேலையில்லா, சீலை உடை.
**மோனை** : பாலைவனம், பசுங்கிளிகள், சாலைகளில், சபைகளிலே, வேலையில்லா, வெற்றியின்
**இயைபு** : **வேண்டும் வேண்டும்** என்னும் இயைபுச் சொற்கள் வந்து ஓசையின்பம் பயக்கின்றன.
**சந்தச் சுவை** : இப்பாடலில் எதுகை, மோனை, இயைபு ஆகியவை பயின்று வந்துள்ளதால் இனிய சந்தம் நம் செவிகளுக்குத் தேனாக இப்பாடல் அமைந்துள்ளது.

SURA'S

# கடிதம் எழுதுதல்

**1. தடகள விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெற்ற நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.**

காலாண்டுத் தேர்வு 2024

சென்னை,
16-03-20XX

பாசமுள்ள நண்பன் மணிமாறனுக்கு,

இங்கு நான், என் பெற்றோருடன் நலமாக இருக்கிறேன். அங்கு நீயும், பெற்றோரும் நலமுடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கிறேன். நேற்று வெளி வந்த பத்திரிக்கைகள் மூலமாகவும், தொலைக்காட்சி மூலமாகவும் உன் இமாலய வெற்றியை அறிந்து பெருமிதம் அடைந்தேன். இந்த ஆண்டு நடந்த மாநில அளவிலான தடகளப் போட்டியில் முதல் இடம் பெற்று உன் இலட்சியத்தை நீ தொட்டுவிட்டாய். வரும் ஆண்டு முதல் உன்னுடைய பயிற்சிக்காக ஆகும் செலவை தமிழக அரசு ஏற்றுக் கொண்டுள்ளதைக் குறித்து ஆனந்தமடைந்தேன்.

நீ இப்பொழுது பெற்றுள்ள வெற்றி மேலும் மேலும் பல சிகரங்களைத் தொட வேண்டும் என்பது என்னுடைய விருப்பம் மட்டுமன்று! தமிழ்நாட்டு மக்களின் விருப்பமும் அதுதான். வெற்றி விழாவன்று நீ தங்கப்பதக்கம் வாங்கப் போவதைக் காண நான் என் பெற்றோருடன் நேரில் வந்து வாழ்த்துகிறேன்.

வாழ்க! வளர்க!

உன் அன்பு நண்பன்,
செ. முரளி
(செ. முரளி)

**உறைமேல் முகவரி**

பெறுநர் :
அ.மணிமாறன்,
எண். 10, தெற்கு வெளிவீதி,
மதுரை - 625 001.

**2. காணாமல் போன மகிழுந்தினைக் கண்டுபிடித்துத் தருமாறு காவல் ஆணையருக்குப் புகார்க் கடிதம் ஒன்று எழுதுக.**

30.06.20XX

**அனுப்புநர் :**
செ. கோபாலன்,
30, தியாகராஜர் தெரு, சென்னை - 600 003.

**பெறுநர் :**
உயர்திரு ஆணையர் அவர்கள்,
காவல்துறை, சென்னை - 600 003.

**பொருள் :** காணாமல் போன மகிழுந்தினைக் கண்டுபிடித்துத் தருதல் தொடர்பாக.

மதிப்பிற்குரிய ஐயா,
வணக்கம்.

என்னுடைய வீட்டின் முன் உள்ள வெற்றிடத்தில் எனது மகிழுந்தினை நேற்று இரவு நிறுத்தி வைத்திருந்தேன். இரவு பன்னிரண்டு மணிக்கு நான் உறங்குவதற்காகச் சென்றபோது கூட மகிழுந்து இருந்தது. ஆனால் காலையில் எழுந்து பார்த்தபோது மகிழுந்தினைக் காணவில்லை. எவரோ திருடிச் சென்றுள்ளனர். எனவே என்னுடைய மகிழுந்தினைக் கண்டுபிடித்துத் தருமாறு வேண்டுகிறேன்.

**மகிழுந்தின் விவரங்கள் :**

| | |
|---|---|
| பெயர் | : ஷிப்ட் |
| எண் | : TN -10 - 1905 |
| வண்ணம் | : நீலம் |
| வாங்கிய ஆண்டு | : 2015 |

நன்றி,

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
செ. கோபாலன்
(செ. கோபாலன்)

**உறைமேல் முகவரி**

பெறுநர்
உயர்திரு ஆணையர் அவர்கள்,
காவல்துறை,
சென்னை - 600 003.

SURA'S

## பிடிஎ மற்றும் அரசுத் தேர்வு வினா - விடைகள்

**1. எண்-6, பாரதியார் தெரு, நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் தமிழரசுவின் மகள் பூங்கொடி, கணினி பயிற்றுநர் பணி வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புகிறார். தேர்வர், தன்னைப் பூங்கொடியாகப் பாவித்துப் பணி வாய்ப்பு வேண்டித் தன்விவரப் பட்டியலை நிரப்புக.** செப்.–2020

**அனுப்புநர் :**

த. பூங்கொடி,
எண். 6, பாரதியார் தெரு, உதக மண்டலம், நீலகிரி மாவட்டம்.

**பெறுநர் :**

மேலாளர்,
வீனஸ் கணினிப் பயிற்சி நிறுவனம், உதக மண்டலம்.

ஐயா,

**பொருள் :** கணினிப் பயிற்றுநர் பணி வேண்டி விண்ணப்பம்.

வணக்கம். 10-9-20XX தேதியிட்ட 'உதகை டைம்ஸ்' நாளிதழில் வெளியான உங்கள் நிறுவன விளம்பரத்தில் கணினிப் பயிற்றுநர் தேவை என்ற வேலை வாய்ப்புத் தகவலைக் கண்டேன். அந்தப் பணிக்காக நான் விண்ணப்பிக்கிறேன். இத்துடன் 'தன் விவரப் பட்டியலை' இணைத்துள்ளேன். இந்த விண்ணப்பத்தைப் பரிசீலித்து, இப்பணியை எனக்கு வழங்கினால் நான் மிகுந்த நன்றியுடன் இருப்பேன்.

நன்றி.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
த. பூங்கொடி

**தன்விவரப் பட்டியல்**

| | |
|---|---|
| பெயர் | : த. பூங்கொடி |
| தந்தை பெயர் | : அ. தமிழரசு |
| தாயார் பெயர் | : த. பவானி |
| பிறந்த தேதி | : 12-02-2000 |
| முகவரி | : எண். 6, பாரதியார் தெரு, உதக மண்டலம், நீலகிரி மாவட்டம். |
| கல்வித் தகுதி | : இளங்கலை கணினி அறிவியல் பட்டம் |
| கல்லூரி | : அரசு கலைக் கல்லூரி, உதகை. |
| பட்டறிவு | : கல்லூரியில் படிக்கும்போது, பகுதி நேரத்தில், உதகை பி.சி.கணினி மையத்தில் ஓராண்டு பயிற்றுநராகப் பணி. |
| அலைபேசி | : 864XX XXXXX |
| மின்னஞ்சல் முகவரி | : poonkodi@gmail.com |
| அறிந்த மொழிகள் | : தமிழ், ஆங்கிலம் |

**உறுதி மொழி**

மேற்கண்ட தகவல்கள் அனைத்தும் உண்மையே என உறுதியளிக்கிறேன். தங்கள் நிறுவனத்தில் கணினிப் பயிற்றுநர் பணியை கொடுத்தால், சிறப்பாக அப்பணியை செய்வேன் என்றும் உறுதியளிக்கிறேன்.

த. பூங்கொடி
கையொப்பம்

**2. உங்கள் பள்ளியில் நடைபெறும் விடுதலைநாள் விழாவிற்கு, நிகழ்கலை வல்லுநர் ஒருவரைச் சிறப்பு விருந்தினராகப் பள்ளிக்கு அழைத்துக் கடிதம் எழுதுக.** பிடிஎ–1

**அனுப்புநர்:**

ம. செந்தமிழ்ச் செல்வி,
மேல்நிலை இரண்டாம் ஆண்டு, மாணவர் மன்றம்,
கம்பன் மேல்நிலைப் பள்ளி, அண்ணாநகர், சென்னை -40

**பெறுநர்:**

உயர்திரு. வீரமுத்து அவர்கள்,
கரகாட்ட கலைஞர்
15, மூன்றாவது குறுக்குத் தெரு, காமராஜர் நகர், மதுரை -09

பெருந்தகையீர்,

வணக்கம். ஒவ்வோர் ஆண்டும் எங்கள் பள்ளியில் விடுதலைநாள் விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றோம். நிகழ்கலையின் பெருமைகளை உணர்ந்து, நிகழ்கலைக் கலைஞர்களைப் போற்றும் வண்ணம் ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு வகையான நிகழ்கலையை நடத்துகின்றோம். இந்த ஆண்டு கரகாட்டத்தை நடத்தலாம் என்று முடிவு செய்துள்ளோம். தாங்கள் மிகச் சிறந்த கரகாட்டக் கலைஞர் என்பதையும் இக்கலை அழிவுறாமல் பாதுகாப்பதற்காக பல முயற்சிகளை எடுத்து வருவதையும் பத்திரிகை வாயிலாக அறிந்து கொண்டோம்.

SURA'S

எனவே இந்த ஆண்டு எங்கள் பள்ளியில் நடைபெறும் விடுதலைநாள் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். விழாவில் நடைபெறும் கரகாட்டத்திற்காக மாணவர்கள் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கும் போதுதான், இக்கலையைக் கற்பது எவ்வளவு அரிய செயல் என்பதை உணர்ந்து கொண்டோம்.

15.08.20XX அன்று எங்கள் பள்ளியில் நடைபெறும் விடுதலைநாள் விழாவில் பங்கு கொண்டு நிகழ்கலைகள் குறித்து உரையாற்ற வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். தாங்கள், எங்கள் அழைப்பினை மறுக்காது ஏற்று வருகை புரிந்திட வேண்டும் என்று எங்கள் பள்ளியின் சார்பாக அனைவரும் கேட்டுக் கொள்கிறோம்.

மிக்க நன்றி,

இங்ஙனம்,
தங்கள் அன்பார்ந்த
மாணவர்கள் சார்பில்
**ம.செந்தமிழ்ச் செல்வி**

**உறைமேல் முகவரி:**

பெறுநர்
உயர்திரு. வீரமுத்து அவர்கள்,
கரகாட்டக் கலைஞர்,
15, மூன்றாவது குறுக்குத் தெரு, காமராஜர் தெரு, மதுரை -09

**3. தங்கைக்குத் திறன்பேசிப் பயன்பாட்டினால் ஏற்படும் நன்மை, தீமைகளைக் குறிப்பிட்டு அறிவுரைக் கடிதம் எழுதுக.**

பிடிஏ–2; அரை. தேர்வு 2019 & 2023; முதல் தி.தேர்வு 2022; கா.தேர்வு 2023; மார்ச் 2024

எண். 15, கம்பர் தெரு,
செங்கல்பட்டு,
13 / 12 / 20XX

அன்புள்ள தங்கைக்கு,

உன் அன்பு அண்ணன் எழுதும் கடிதம். நான் இங்கு நலமாக உள்ளேன். உன் நலத்தையும் அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி அனைவருடைய நலனையும் அறிய அவா. நீ எவ்வாறு படிக்கிறாய்? உன்னுடைய கூடைப்பந்து பயிற்சியெல்லாம் எப்படி இருக்கிறது? அன்றாடம் பயிற்சிக்குச் செல்கிறாயா? படிப்பையும் விளையாட்டையும் இரு கண்களாக நினைத்து இரண்டிலும் கவனம் செலுத்து. நீ திறன்பேசியை அதிகமாகப் பயன்படுத்துவதாக அப்பா கூறினார். திறன்பேசியினால் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. படிப்பில் உன் ஐயங்களைத் தீர்க்க இணையத்தைப் பயன்படுத்துவாய்.

அப்போது இலவச இணைப்புப் போல் தேவையற்ற விளம்பரங்களும் காட்சிகளும் உன்னைக் கவரும். அவற்றை விலக்கி விடு. படிப்பில் மட்டும் கவனம் செலுத்து. புலனம், முகநூல் மூலம் உன் நண்பர்களுடன் பேசிக்கொண்டிருக்காதே. அப்பா, அம்மா சொல்வதைக் கேட்டு நல்லப் பெண் என்ற பெயர் எடுக்க வேண்டும். அடுத்த மாதம் விடுமுறையில் வரும்போது நேரில் பேசலாம்.

**உறைமேல் முகவரி:**

இப்படிக்கு,
உன் அன்பு அண்ணன்
**வேலவன்**

பெறுநர்
கவிதா,
10, நேரு வீதி, வேலூர்.

அஞ்சல் தலை

**4. தட்டச்சர் பணிவாய்ப்பு வேண்டித் தன்விவரப் பட்டியல் ஒன்றை நிரப்புக.**

அ.மா.வி 2019; ஆகஸ்ட் 2022

25-09-20XX

**அனுப்புநர்**
சு.கபிலன்
எண்.30, 18, ஏ.எல். முதலி 2ஆவது தெரு,
நேருநகர், வேளச்சேரி, சென்னை - 42.

**பெறுநர்**
உயர்திரு. முதன்மையாசிரியர் அவர்கள்,
நாளிதழ், சென்னை.

**பொருள்:** தட்டச்சர் பணிவேண்டி விண்ணப்பித்தல்.

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம், நான் கடந்த கல்வியாண்டில் நடந்த பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் 99 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சியில் மாநில அளவில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளேன். தமிழ், ஆங்கிலம் இரண்டு மொழிகளிலும் முதுநிலை (Senior Grade) தட்டச்சர் தேர்வில் முதல் நிலையிலும் தேர்ச்சிப் பெற்றுள்ளேன். குடும்பச் சூழலின் காரணமாய்ப் பணிக்கு வரும் நிலையில் உள்ளேன். அருள் கூர்ந்து என் தகுதியினை அறிந்து தாங்கள் எனக்குப் பணியினை வழங்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி!

இங்ஙனம்
உண்மையுள்ள
சு. கபிலன்

SURA'S

**10ஆம் வகுப்பு**

# அரசு பொதுத்தேர்வு மார்ச் - 2026

## மொழிப்பாடம் - பகுதி I - தமிழ்

**கால அளவு : 3.00 மணி நேரம் ]** (வினாத்தாள் விடைகளுடன்) **[ மொத்த மதிப்பெண்கள் : 100**

**அறிவுரைகள் :** **(1)** அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

**(2)** **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும்.

**குறிப்புகள் :** (i) இவ்வினாத்தாள் **ஐந்து** பகுதிகளைக் கொண்டது.

(ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

(ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **[15 × 1 = 15]**

**1.** “இருவர் உரையாடுவது போன்ற ஓசை” என்பது ...........
அ) அகவலோசை ஆ) துள்ளலோசை
இ) தூங்கலோசை ஈ) செப்பலோசை

**2.** இரவீந்திரநாத தாகூர் ............. மொழியில் எழுதிய கவிதைத் தொகுப்பான கீதாஞ்சலியை ......... மொழியில், மொழிபெயர்த்த பிறகுதான் அவருக்கு நோபல் பரிசு கிடைத்தது.
அ) ஆங்கில, வங்காளம் ஆ) வங்காள, ஆங்கில
இ) வங்காள, தெலுங்கு ஈ) தெலுங்கு, ஆங்கில

**3.** உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் யாவர்?
அ) உதியன் ; சேரலாதன்
ஆ) அதியன் ; பெருஞ்சாத்தன்
இ) பேகன் ; கிள்ளிவளவன்
ஈ) நெடுஞ்செழியன் ; திருமுடிக்காரி

**4.** அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைந்தது -
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்
இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

**5.** காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் எது?
அ) இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது
ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்து விடாது
இ) இகழ்ந்தால் இறந்து விடாது என்மனம்
ஈ) என்மனம் இறந்து விடாது இகழ்ந்தால்

**6.** **செய்தி (1) :** ஒவ்வோர் ஆண்டும் சூன் 15-ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
**செய்தி (2) :** காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழ்நாடு இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே
**செய்தி (3) :** இந்தியாவிற்குத் தேவையான மழை அளவில் எழுபது விழுக்காடு மழையைத் தென்மேற்குப் பருவக்காற்றாகக் கொடுக்கின்றேன்.
அ) **செய்தி (1)** மட்டும் சரி
ஆ) **செய்தி (1), (2)** ஆகியன சரி
இ) **செய்தி (3)** மட்டும் சரி
ஈ) **செய்தி (1), (3)** ஆகியன சரி

**7.** கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது;
வானம் இருண்டது; வாடைக் காற்று வீசியது.
பொருத்தமான தலைப்பைத் தேர்க.
அ) உயிர்ப்பின் ஏக்கம் ஆ) நீரின் சிலிர்ப்பு
இ) மொட்டின் வருகை
ஈ) காற்றின் பாடல்

**8.** ‘வா’ என்ற வேர்ச்சொல்லின் விளித்தொடரைத் தேர்க.
அ) குழந்தை வந்தது
ஆ) வந்த குழந்தை
இ) வந்த நின்றது
ஈ) குழந்தையே வா!

**9.** நச்சிலைவேல் கோக்கோதை நாடு, நல்யானைக் கோக்கிள்ளி நாடு - இத்தொடர்களில் குறிப்பிடப்படுகின்ற நாடுகள் முறையே,
அ) பாண்டிய நாடு, சேர நாடு
ஆ) சோழ நாடு, சேர நாடு
இ) சேர நாடு, சோழ நாடு
ஈ) சோழ நாடு, பாண்டிய நாடு

**10.** “கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது” - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே -
அ) பாடிய ; கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய
இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்

**11.** புதன்கிழமையை ஒன்றாம் தேதியாகக் கொண்ட நாள்காட்டியில் அடுத்த வார செவ்வாய்க்கிழமையை தமிழெண்ணில் தேர்க.
அ) க ஆ) அ
இ) ரு ஈ) எ

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

“விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்”

**12.** இப்பாடல் இடம்பெற்ற நூலைத் தேர்க.
அ) கம்பராமயணம் ஆ) காசிக்காண்டம்
இ) தேம்பாவணி
ஈ) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

**13.** பாடலின் ஆசிரியரைத் தேர்க.
அ) பரஞ்சோதி முனிவர் ஆ) இளங்கோவடிகள்
இ) அதிவீரராம பாண்டியர் ஈ) கம்பர்

**14.** ‘செப்பல்’ என்ற சொல்லின் பொருள் :
அ) வருதல் ஆ) வியத்தல்
இ) எழுதல் ஈ) கூறுதல்

**15.** சீர் எதுகைச் சொற்களைத் தேர்க.
அ) ஒருவன் - எதிரின்
ஆ) திருந்துற - வருக
இ) விருந்தினனாக- வியத்தல்
ஈ) உரைத்தல் - செப்பல்

SURA'S

### பகுதி - II (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1

**குறிப்பு : எவையேனும் நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **21–ஆவது வினாவிற்குக் கட்டாயமாக** விடையளிக்கவும். [4 × 2 = 8]

16. கரப்பிடும்பை இல்லார் - இத்தொடரின் பொருள் கூறுக.
17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்.
    அ) முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர்.
    ஆ) ஒரு நாட்டின் நாட்டுவளம், சொல்வளத்தை உருவாக்குகின்றது.
18. மென்மையான மேகங்கள், துணிச்சலும், கருணையும் கொண்டு வானில் செய்யும் நிகழ்வுகளை எழுதுக
19. செங்கீரை ஆடுதலில் எந்தெந்த அணிகலன்கள் சூட்டப்படுவதாக முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் குறிப்பிடுகிறது?
20. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.
21. ‘உலகு’ - என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**குறிப்பு : எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். [5 × 2 = 10]

22. பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.
    சேரர்களின் பட்டப்பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.
23. தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்து கொண்டு தொடர்களை முழுமை செய்க.
    அ) காட்டு விலங்குகளைச் ........ தடை செய்யப்பட்டுள்ளது.
    ஆ) செய்த தவறுகளைச் ....... திருந்த உதவுகிறது.
    (சுட்டல், சுடுதல்)
24. பகுபத உறுப்பிலக்கணம் தருக. அமர்ந்தான்
25. கட்டுரை படித்த - இச்சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபைப் பயன்படுத்தித் தொடரை விரித்து எழுதுக.
26. பொதுவியல் திணை பற்றிக் குறிப்பெழுதுக.
27. கலைச் சொற்கள் தருக.
    அ) Happiness ஆ) Storyteller
28. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
    அ) மலை - மாலை
    ஆ) விடு - வீடு

### பகுதி - III (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். [2 × 3 = 6]

29. பலதுறைகளின் வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு எவ்வாறு பயன்படுகிறது?
30. “தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்” இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
    தொல்காப்பியர், உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்கிறார். பழங்காலத்தல் கடல் கடந்த பயணங்கள் அனைத்தும் காற்றால் இயக்கப்பட்ட பாய்மரக் கப்பல்களால்தான் நிகழ்ந்தன. காற்றின் ஆற்றலை, ‘வளி மிகின் வலி இல்லை’ என்று ஐயூர் முடவனார் சிறப்பித்துள்ளார். இதுபோன்றே மதுரை இளநாகனார் கடுங்காற்று, மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது என்று காற்றின் வேகத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.
    அ) உலகம் குறித்துத் தொல்காப்பியர் கூறுவது யாது?
    ஆ) கடல்கடந்த பயணங்கள் பழங்காலத்தில் நிகழ்ந்தன?
    இ) மதுரை இளநாகனாரின் காற்று பற்றிய கருத்தை எழுதுக.

### பிரிவு - 2

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் **34–க்குக் கட்டாயமாக** விடையளிக்கவும். [2 × 3 = 6]

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?
33. “தான் எவற்றையெல்லாம் அறியவில்லை ”- என்று கருணையன் கூறுகிறார்?
34. அடிபிறழாமல் எழுதுக.
    அ) ‘மாற்றம்’... - எனத் தொடங்கி ‘அட்சய பாத்திரம்!’ என முடியும் ‘காலக்கணிதம்’ பாடல் **அல்லது**
    ஆ) ‘அள்ளல் பழனத்(து)’ - எனத் தொடங்கும் முத்தொள்ளாயிரம் பாடல்.

### பிரிவு - 3

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் **சுருக்கமாக** விடையளிக்கவும். [2 × 3 = 6]

35. மார்கழித் திங்கள் அதிகாலை நேரத்தில் மக்கள் நடைப்பயிற்சி மேற்கொண்டனர். சிலர் மிதிவண்டியில் சென்றனர். சாலை ஓரத்தில் இருந்த வீட்டின் மதிலை ஒட்டிச் செங்காந்தள் மலர்கள் பூத்துக் குலுங்கியபடி இருந்தன. அவற்றைப் பார்த்தபடியே வீடு சென்றேன். பத்தியைப் படித்துத் தொகைநிலைத் தொடர்களைக் கண்டறிந்து எழுதுக.
36. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
    இன்மையே இன்னா தது. - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.
37. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
    பேணித் தமராக் கொளல்.
    - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.

### பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். [5 × 5 = 25]

38. அ) சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.
    அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் காட்டும் கவி... தண்டலை மயில்கள் ஆட...
    இவ்வுரையைத் தொடர்க. **அல்லது**
    ஆ) ஒழுக்கமுடைமை அதிகாரத்தில் கூறிய கருத்துகளை வள்ளுவர் வழிநின்று விளக்குக.
39. அ) மாவட்ட அளவில் நடைபெற்ற ‘பெண்கள் நாட்டின் கண்கள்’ என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. **அல்லது**
    ஆ) உங்கள் பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலையைச் சீரமைத்தல் வேண்டி மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

SURA'S

**40.** காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



**41.** நீலகிரி மாவட்டம், பாரதிதாசன் நகர், எண். 7, பூம்பொழில் தெருவில் வசிக்கும் மதிவேந்தன் என்பவரது மகன் புகழேந்தி மாவட்ட மைய நூலகத்தில் நூலக உறுப்பினராகச் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னைப் புகழேந்தியாக எண்ணிக் கொடுக்கப்பட்ட நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

**42.** அ) மாணவர் நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்கள், அதனால் ஏற்படும் நன்மைகள் ஐந்தினைப் பட்டியலிடுக. **அல்லது**

ஆ) மொழிபெயர்க்க :

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start tweeting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

### பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் **விரிவான** விடையளிக்கவும். [3 × 8 = 24]

**43.** அ) இலக்கியச் சான்றுடன் உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக. **அல்லது**

ஆ) காற்று மாசுபாட்டைத் தடுக்கும் வழிமுறைகளை விவரித்து எழுதுக.

**44.** அ) இயற்கையோடு இணைந்த வாழ்வினைப் 'பிருமம்' கதைவழி விவரித்து எழுதுக. **அல்லது**

ஆ) 'புயலிலே ஒரு தோணி' கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும், அடுக்குத் தொடர்களும், ஒலிக் குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

**45.** அ) 'தமிழ்மொழியின் சிறப்பு' என்ற தலைப்பில் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

முன்னுரை : தமிழின் தொன்மை - சான்றோர் வளர்த்த தமிழ் - சொல்வளம் மிக்கது -வளர்தமிழ் - முடிவுரை.

**அல்லது**

ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற கலைத்திருவிழாவிற்குச் சென்று வந்த நிகழ்வைக் குறிப்புகளைக் கொண்டு கட்டுரையாக்குக.

**குறிப்புகள் :** முன்னுரை - கலைத்திருவிழா நிகழ்விடம் - கலைநிகழ்ச்சிகள் - கவர்ந்த கலை நிகழ்ச்சி - கலைகள் வளர்ப்போம் - முடிவுரை.

## விடைகள்

1. ஈ) செப்பலோசை
2. ஆ) வங்காள, ஆங்கில
3. ஆ) அதியன்; பெருஞ்சாத்தன்
4. அ) வேற்றுமை உருபு
5. அ) இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது
6. ஈ) **செய்தி (1), (3)** ஆகியன சரி
7. ஈ) காற்றின் பாடல்
8. ஈ) குழந்தையே வா!
9. இ) சேர நாடு, சோழ நாடு
10. ஈ) பாடல்; கேட்டவர்
11. ஈ) எ
12. ஆ) காசிக்காண்டம்
13. இ) அதிவீரராம பாண்டியர்
14. ஈ) கூறுதல்
15. ஆ) திருந்துற - வருக
16. தன்னிடம் உள்ள பொருளை மறைத்து வைத்துக் கொண்டு இல்லை என்று கூறாதவர் என்பதாகும்.
17. அ) விருந்தினர் என்று யாரை அழைப்பர்?
    ஆ) ஒரு நாட்டின் சொல்வளத்தை எது உருவாக்குகின்றது?
18. **மேகங்கள் வானில் செய்யும் நிகழ்வுகள் :**
    - மேகங்கள் துணிச்சலானவை! ஏனெனில், தன் முதுகைக் கொடுத்துச் சூரியனை மறைக்கும்போது, மேகம் நம்மை வெயிலிலிருந்து பாதுகாக்கிறது.
    - மேகங்கள், மிகவும் கருணை உள்ளவை! தாகங்கள் தீர்க்கும்போது! மேகம் நமக்கு மழை தருகிறது.
19. **செங்கீரை ஆடுதல் :**
    - திருவடியில் சிலம்பும், கிண்கிணியும் அணிவது இடையில்(இடுப்பில்) அரைஞாண் அணிவது நெற்றியில் சூட்டி அணிவது
    - காதில் குண்டலம், குழை அணிவது தலையில் சூழி அணிவது போன்ற அணிகலன்கள் சூட்டப்படுவதாக முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் குறிப்பிடுகிறது.
20. **வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று :**
    - வறுமையின் காரணமாக, ம.பொ.சி. தொடக்கக் கல்வியைக்கூட தொடர இயலவில்லை. ஆனால், அவருடைய அன்னையார் இளமையில் பயிற்றுவித்த பாக்கள் மூலம் இலக்கியப் பயிற்சி பெற்றார்.
    - அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை ஆகிய அம்மானைப் பாடல்களை அவருடைய அன்னையார் பாடும்போது இவரையும் படிக்க வைப்பார். அவற்றால் சந்தநயம், எதுகை, மோனை நயங்களை அறிந்தார். பிள்ளைப் பருவத்திலேயே இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்டார். சித்தர் பாடல்களை மனனம் செய்தார்.
    - உணவுக்காக வைத்திருக்கும் பணத்தில் புத்தகங்களை வாங்கிவிட்டு, பல வேளைகளில் பட்டினி கிடந்திருக்கிறார்.
    - சொற்பொழிவுகளைக் கேட்டு இலக்கிய அறிவு பெற்றார். சிறந்த கருத்துகளை ஏடுகளில் குறித்து வைத்துக் கொள்வார்.
21. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
    சுற்றமாச் சுற்றும் உலகு. **– திருவள்ளுவர்**
22. சேரர்களின் பட்டப் பெயர்களில், 'கொல்லி வெற்பன்', 'மலையமான்' போன்றவை குறிப்பிடத்தக்கவை. கொல்லி மலையை வென்றவன், 'கொல்லி வெற்பன்' எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள், 'மலையமான்' எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.
23. அ) காட்டு விலங்குகளைச் **சுடுதல்** தடை செய்யப்பட்டுள்ளது.
    ஆ) செய்த தவறுகளைச் **சுட்டல்** திருந்த உதவுகிறது.

24. **அமர்ந்தான் – அமர் + த்(ந்) + த் + ஆன்**
அமர் - பகுதி
த் - சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

25. ■ கட்டுரை படித்த - வேற்றுமைத்தொகை
■ கட்டுரையைப் படித்த - வேற்றுமை விரி (இத்தொடரில் ஐ என்னும் வேற்றுமை உருபு வெளிப்படையாக வந்து பொருளை உணர்த்துகிறது.)

26. வெட்சி முதல் பாடாண் வரை உள்ள புறத்திணைகளில் பொதுவானவற்றையும், அவற்றுள் கூறப்படாதனவற்றையும் கூறுவது பொதுவியல் திணை.

27. அ) Happiness - மகிழ்ச்சி
ஆ) Storyteller - கதை சொல்லி

28. அ) **மலை** மீதுள்ள கோயிலில் **மாலை**யில் விளக்கு எரியும்.
ஆ) நாம் **விடு**கின்ற ஒவ்வொரு பட்டமும், **வீடு**கள் மீது விழுகிறது.

29. **பலதுறைகளில் மொழிபெயர்ப்பின் பயன்கள்:**
■ இன்றைக்குப் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு, மொழிபெயர்ப்புத் தேவைப்படுகிறது.
■ தொலைக்காட்சி, வானொலி, திரைப்படம், இதழ்கள் போன்ற ஊடகங்கள் மொழிபெயர்ப்பால்தான் வளர்ச்சி பெறுகின்றன.
■ விளம்பர மொழிக்கு, மொழிபெயர்ப்புத் தேவைப்படுகிறது.
■ திரைப்படங்கள், தொலைக்காட்சித் தொடர்கள் ஆகியன வேற்றுமொழி மாற்றம் செய்யப்பட்டு அனைத்து மொழி பேசும் மக்களையும் அடைகின்றன.
■ இவற்றால், புது வகையான சிந்தனைகள், மொழிக்கூறுகள் பரவுகின்றன.

30. **இடம் :** இத்தொடர், மாநகராட்சி சிறப்புக் கூட்டத்தில், மாநகரத் தந்தை செங்கல்வராயன் முன்னிலையில் ம.பொ.சிவஞானம் அவர்களால் முழங்கப்பட்டது.
**பொருள் :** இந்திய விடுதலைக்குப் பின் மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. ஆந்திர மாநிலம் பிரிக்கப்பட்டபோது, ஆந்திரத்தின் தலைநகராக சென்னை இருக்க வேண்டும் என்ற நீதிபதி வாஞ்சு தலைமையிலான ஒரு நபர் ஆணையத்தை எதிர்த்து முழங்கிய முழக்கம் ஆகும்.
**விளக்கம் :** ஆந்திர மாநிலத்தின் தலைநகராகச் சென்னைதான் இருக்க வேண்டும் என்று ஆந்திரத் தலைவர்கள் கருதினர். சென்னை மாகாணத்திலிருந்து ஆந்திரத்தைப் பிரித்து அமைப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த நீதிபதி வாஞ்சு தலைமையிலான ஒரு நபர் ஆணையம், ஆந்திரத்தின் தலைநகராகச் சென்னை இருக்க வேண்டும் என்ற இடைக்கால ஏற்பாட்டைப் பரிந்துரைத்திருப்பதாகக் கருத்துகள் நிலவின. இதனால், சென்னை மாநகராட்சியின் சிறப்புக் கூட்டமொன்றை மாநகரத் தந்தை செங்கல்வராயன் தலைமையில் ம.பொ.சி. கூட்டினார். அக்கூட்டத்தில், சென்னை பற்றிய தீர்மானத்தை முன்மொழிந்து "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என்று ம.பொ.சி. முழங்கினார்.

31. அ) தொல்காப்பியர், உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்கிறார்.
ஆ) பழங்காலத்தல் கடல் கடந்த பயணங்கள் அனைத்தும் காற்றால் இயக்கப்பட்ட பாய்மரக் கப்பல்களால்தான் நிகழ்ந்தன.
இ) மதுரை இளநாகனார் கடுங்காற்று, மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது என்று காற்றின் வேகத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

32. **தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்கள் :**
■ தமிழ்மொழி பழைமைக்கும் பழைமையாய் உள்ளது.
■ கடல்கொண்ட குமரிக்கண்டத்தில், நிலைத்து ஆட்சி செய்தது. பாண்டிய மன்னனின் மகளாக வளர்ந்தது.
■ திருக்குறளின் பெருமைக்கு உரியதாய் விளங்குகிறது.
■ பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களாக அமைந்துள்ளது.
■ நிலைத்து நிற்கும் சிலப்பதிகாரமாகவும், அழகான மணிமேகலையாகவும் விளங்குகிறது.

33. **அறியேன் என்று கருணையன் கூறுவன :**
■ 'நான் உயிர் பிழைக்கும் வழி அறியேன்.
■ நினைந்து கண்ட அறிவினுக்குப் பொருந்தியவாறு உறுப்புகள் இயங்குதல் இல்லாத இந்த உடலின் தன்மையை அறியேன்.
■ உடலுக்கு வேண்டிய உணவைத் தேடிக் கொணரும் வழிவகைகளை அறியேன். காட்டில் செல்வதற்கான வழிகளையும் அறியேன்.
■ என் தாய், தன் கையால் காட்டிய முறைகளை மட்டுமே அறிவேன்' என்று கருணையன் கூறுகிறார்.

34. அ) மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!

ஆ) அள்ளல் பழனத்(து) அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப் புள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு.

35. **தொகைநிலைத் தொடர்கள் :**
■ மார்கழித் திங்கள் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை
■ செங்காந்தள் மலர்கள் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை
■ செங்காந்தள் - பண்புத்தொகை
■ வீடு சென்றேன் - வேற்றுமைத்தொகை

36. **அணிச்சுட்டல் :** சொற்பொருள் பின்வருநிலையணி.
**அணி – விளக்கம் :** ஒரு செய்யுளில், முன்னர் வந்த சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது, 'சொற்பொருள் பின்வருநிலையணி' ஆகும்.
**சான்று :** இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது.
**சான்று – விளக்கம் :** ஒருவருக்கு வறுமையைப் போன்று துன்பம் தருவது எது என்றால், அது வறுமையே ஆகும்.
**அணிப் பொருத்தம் :** இக்குறளில் 'இன்மை' என்ற சொல் மீண்டும் மீண்டும் பல முறை வந்து, வறுமை என்னும் ஒரே பொருளைத் தருவதால் இது, 'சொற்பொருள் பின்வருநிலையணி' ஆகும்.

37.

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| அரி/யவற்/றுள் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| எல்/லாம் | நேர் நேர் | தேமா |
| அரி/தே | நிரை நேர் | புளிமா |
| பெரி/யா/ரைப் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| பே/ணித் | நேர் நேர் | தேமா |
| தம/ராக் | நிரை நேர் | புளிமா |
| கொளல் | நிரை | மலர் |

இக்குறட்பாவானது 'மலர்' என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

SURA'S